ஒரு நீல நீர்ப்பரப்பு,
கடலாய் மாறும் கதை சொல்ல,
நுரைகொண்டு வருமிங்கு.,

# அலைகள்

இதழ்:01 டிசம்பர்2013-பெப்ரவரி2014 விலை ரூ:50/=

ஆரம்பக்கல்வி மாணவர்களின்
ஆளுமை விருத்தியும்
அவர்களுக்கு கற்பிக்கின்ற
ஆசிரியர்களின்
மனப்பாங்குகளும்...

இன்னும் பல சுவையான
தகவல்களுடன்

சிறந்த
சமூகத்துக்காக
சிறந்த
"மனிதர்களை"
உருவாக்குவோம்

மரணமே
எல்லை ?

Aashif Buhary

வெளியீடு: FDSC சமூக மூலதன அபிவிருத்திக்கான அமைப்பு

FDSC
PEOPLE FIRST

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From ...*

# HAIRA
**BROILER CHICKEN**

*Symbol of goodness*

## PROCESSING & MARKETING OF HALAL HAIRA BROILER CHICKEN

# Haira Farms (PVT) LTD.

**No. 2/1/2, Mosque Road, Madawala Bazaar,**
**Kandy.**
**Tel : 081-2470370**
**Mobile : 071-4950370-80, Fax : 081-2476813**
**E-mail : hairafarms@sltnet.lk**

**OUTLETS**

1. No. 50/4, Yatinuwara Patu Mawatha, Kandy.
   Tel : 081-4473358, 071-4950380
2. No. 01A, Teldeniya Road, Madawala Bazaar.
   Tel : 071-4950379
3. No. 76/A, King's Street, Matale.
   Tel : 071-4950382-83
4. No. 50/2, Yatinuwara Patu Mawatha, Kandy.
   Tel : 071-4950290
5. No.30, Kandy Road, Wattegama.
   Tel : 071-6901749
6. No. 93, Gongawela Road, Matale.
   Tel : 071-4215683
7. No. 47, Cross Street, Kandy.
   Tel : 0714-950384




**Our Achievements**

Nutrina Award for the Best Outstanding Performance for Year 2000

Sri Lanka Entrepreneur of the Year 2004

Star to Awards for the Best Performing Entrepreneurs (Central Province) for the year 2008

Business for Unity Awards in Recognition of Contribution to Peace & Social Responsibility for the Year 2008

Three Star Awards for the Best Performing Entrepreneurs Medium Scale Manufacturing Sector for the Year 2009



## The Other Subsidiaries of Haira Group of Companies are

**Necta Marketing (Pvt) Ltd**
**Nawgala Breeder Farms (Pvt) Ltd**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




**இதழ் 01** **விலை- 50/=**

**பிரதம ஆசிரியர்**
அம்ரிதா எஸ். எச். அக்ரம்
amrithaakram@gmail.com

**உதவி ஆசிரியர்**
M.T. 8மொஹமட் பஸ்லி

**ஆலோசனை**
ஜாசில் தாஹா
Saarahjazil@gmail.com

நிதார் எம். நுஸ்ரி
nusrynidar@yahoo.com

**விளம்பரம்**
ரீமா ரஹ்மான்
reema.jewellers@yahoo.co.uk

அக்பர் அலி - ஹைரா
haira@sltnet.lk
மற்றும் FDSC உறுப்பினர்கள்

**எழுத்துக்கோர்வை**
திருமதி. கவிதா ஆனந்த்

**அட்டைப்படம்**
ஆஷிப் புஹாரி
aashifbuhary@gmail.com

**அச்சகம்**
பிரின்ட் மெக்ஸ் மடவளை

**தொடர்புகளுக்கு:**
அலைகள்
2/1/2, Mosque Road, Madawala Bazaar.

# நுழைவாயில்

உயரிய பண்புகளுடைய சமூகமொன்றில் சிறந்த மனித ஆளுமைகளை உருவாக்குவோம். என்ற சிந்தனை தெளிவின் ஊற்றாகவும், மனித மூலதனத்தின் செயற்திறன்களையும், ஆளுமைப் பண்புகளின் இலக்கிய வடிவங்களை இனங்காணுதலும், சமூகத்தின் துயரம் போற்றி வெளிச்சங்களைத் தேடி உந்துதலாகவும் உதவியாகவும், தாம் கற்றறிந்த மொழிகளில் சமூகம் சுயமாக எழுச்சி பெற வித்திட்ட சமூகத் தொண்டர்களையும், சமூகவியலாளர்களையும், புத்திஜீவி, புலமையாளர்களையும் கௌரவித்து வரும் இளம் சந்ததியினரும் அறியும் வண்ணம் மேன்மையுறச் செய்வதும், இலைமறை காயாக திறனிருந்தும், களமின்றி சோர்வுற்றிருக்கும் இளம் கலை உள்ளங்களை அரவணைத்து மிளிர்ந்திட வழி காட்டும் கடலாகவே "அலைகள்" உங்களை ஆர்ப்பரித்து அரவணைக்கும்

. "அலைகள்" யாவருக்குமான இரசனையின் வாயிலாகவே திறமைகளை முதன்மைப்படுத்தி - பக்கச் சார்பின்றி யாவருக்குமான களமாகவே பரிணமித்து, இலக்கிய வானில் தனித்துவமிக்க ஒன்றாக ஆர்பரித்திட உங்கள் அனைவருடனும் கரம் கோர்க்கிறது இன்று முதல்....... -

-அம்ரிதா எஸ். எச். அக்ரம் -

**வெளியீடு:**

**FDSC**

PEOPLE FIRST

**சமூக மூலதன அபிவிருத்திக்கான அமைப்பு**

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.
விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு சமூக மூலதன அபிவிருத்திக்கான அமைப்பு பொறுப்பல்ல.
பேட்டிகள் மற்றும் சிறப்புக்கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களின் சொந்தக்கருத்துகளே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த சமூகத்துக்காக "மனிதர்களை" உருவாக்குவோம்!

ஒரு சமூகத்தின் மேம்பாடு என்பது அச்சமூகத்தின் மனித வளத்தின் மேம்பாட்டிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது. சமூகத்தின் உயிரியல் கூறான மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு தன்னை வளர்த்து மெருகூட்டி நெறிப்படுத்திக் கொள்ள முற்படுகின்றானோ அந்த அளவிற்கு அச்சமூகத்தின் செழுமை மேலோங்கி மிளிரும் என்பது வரலாற்றுப் படிப்பினைகள் புகட்டிய உண்மை. இந்த 'மேன்பாடு' என்பது தனி மனிதர்கள் தங்களைத் தாங்களே மாற்றிக் கொள்ள முனையும் அளவிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது. ஒரு சமூகத்தின் அங்கத்தவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளா விட்டால் அச் சமூகம் மேம்பாடடையும் எனக் கனவு காண முடியாது. இந்த அணுகு முறையை உயிர் நாடியாக வைத்து உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் இந்த FDSC என அழைக்கப் படும் 'சமூக மூலதன அபிவிருத்திக்காண அமைப்பு'

'

சமூக மூலதனம்' எனும் பதம் மிக ஆழமான கருத்தைக் கொண்டது. 'சமூக நலனைக் கருத்திற் கொண்டு, ஒன்று பட்டு இயங்கும் சமூகத் தொடர்புகளை (Social Networks) முழுமையாகத் தழுவி இயங்கும் ஒரு செயற்பாடாகும்' என்பதாக இதனை வரைவிலக்கணப்படுத்தலாம். இங்கு ஒரு சமூகத்தில் காணப் படும் சமூக உறவுகள் மற்றும் சமூகத் தொடர்புகள் மிக முக்கிய இடத்தைப் பெறுவதை அவதானிக்கலாம். இவற்றின் மூலம் எவ்வாறு ஒருவருடன் ஒருவர் பின்னிப் பிணைகிறோம் என்பதிலேயே 'சமூக மூலதனம்' மிகவும் செல்வாக்குச் செலுத்துகிறது.

'சமூக மூலதனம்' எனும் பதம் மேலும் ஆழமாக நோக்கப் படுமிடத்து இஸ்லாமிய மார்க்கத்திலேயே அதன் பங்கு பல்வேறு கோணங்களில் வேறூன்றி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. நம்பிக்கை, தான தர்மங்கள், ஒத்துழைப்பு, சகோதரத்துவம், நேர்மை, ஒற்றுமை, பொறுமை, தலைமைத்துவம் போன்ற பண்புகளாலும் செயற்பாடுகளாலும் சமூகத் தொடர்புகள் வலுவாக்கப்பட்டு சமூக மூலதனம் நிலைநாட்டப் படுவதை அவதானிக்கலாம்.

உலக வங்கியின் முதல் செயற்திட்ட சமூக வியலாளரான றொபட் புட்னம் (Rober Putnam) என்பவரது கூற்றுப் படி, சமூக மூலதனம் மக்களுடைய ஒரு மித்த பிரச்சினைகளை இலகுவாக தீர்பதற்கு உதவுகிறது. மேலும் சமூக மூலதனம் சமுதாயங்கள் மிருதுவாக முன்னோக்கிச் செல்வதற்கான சில்லுகளுக்கு மசகூட்டுகிறது எனவும் சமூக மூலதனத்தின் மூலம் இணைப்பாளர்கள் பச்சாதாபமும் (Empathy) ஏற்றுக் கொள்ளும் உணர்வும், ஒத்துப் போகும் தன்மை கூடியவர்களாகவும், குற்றம் குறை தேடும் தன்மை குறைந்தவர்களாகவும் உருவாகிறார்கள் என்றும், சமூக மூலதனம் எமது குறிக்கோள்களை அடைவதற்கான தகவல்களையும் வசதிகளையும், சரளமாக வழங்கும் ஊடகமாகவும் தொழிற் படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

இந்த அடிப்படையிலே எமது மடவளையிலும் சமூக மூலதனத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் மேற் குறிப்பிட்ட பல்வேறு நன்மைகளை அடைவதற்கு முடியும் என்ற நோக்கிலேயே FDSC ஆரம்பமாயிற்று அதற்கு முதற்கட்டமாக எமது ஊரில் சகலவிதமான செயற்பாடுகள் மற்றும் சமகாலப் பிரச்சினைகளை அலசுவதற்கான ஒரு தளம் அவசியம் என உணரப்பட்ட வேளையில், சகோதரர்களான என்.எம்.நுஸ்ரி, யூ.அக்பர் அலி, மற்றும் யூ.எம்.பாஸில் ஆகியோர் இவ்வாறான ஒரு சமூகதாபனம் உருவாக்குவதற்கு கனவு கண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கட்டமாக இம் மூவர் கொண்ட அமைப்பு அதன் வட்டத்தைப் பெரிதாக்கிக் கொண்டது. இந்த நிகழ்வு 2008ம் ஆண்டு நிகழ்ந்தது. இதனைத் தொடாந்து 14 ஆரம்ப அமா்வுகளில் இவ்வாறானதொரு அமைப்பின் அவசியம், அதன் நிலைப்பு, சவால்கள் மற்றும் குறிக்கோள்கள், உற்பட பல்வேறு விடயங்கள் ஆழமாக ஆராயப்பட்டன. இந்த ஆரம்ப அமா்வுகள் Haira farms நிறுவனத்தில் பின் வருவோரின் பங்களிப்புடன் நிகழ்ந்தது.

ஜனாப்களான,

| | |
|---|---|
| நுஸ்ரி நிதார் | ஜாசில் தாஹா |
| அக்பர் அலி உவைஸ் | பாசில் உவைஸ் |
| நசீர் முஸ்தபா | மன்சில் மர்ஜான் |
| ஜாபிர் மீராசாஹிப் | சாகிர் முஸப்பர் |
| மலிக் மஹ்மூத் | பைசர் அலி சித்தீக் |

அதன் பின்னர்

| | |
|---|---|
| சுஹ்ரி லதீப் | ரசாத் பஸீல் |
| ஹில்மி ஹனீபா | ராபி ஜிப்ரி |
| தாரிக் ஜெய்னுலாப்டீன் | ஹரீஸ் ஹமீத் |
| இம்தியாஸ் புகாரி | ஏ.எல்.எம்.ஹியான் |
| பஸ்லி தாஹிர் | ரிஸ்மின் பாருக் |

2009 ஆம் வருடம் பெப்ரவரி மாதம்

| | |
|---|---|
| அதாஉர் ரஹ்மான் ஹனீபா | கியாஸ் குவைல்தீன் |
| ரஹ்மதுல்லா ஹலீம் | |

ஆகியோரும் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அத்தோடு 2009 ம் வருடம் ஜுன் மாதத்தில்

| |
|---|
| நிஸார் ஜெய்னுலாப்தீன் |

இணைத்துக் கொள்ளப்பட்டு, இறுதியாக

| | |
|---|---|
| பாசில் மஜீத் | நஸ்ருல்லா சகூர் |
| நுசாரீன் அம்சார்தீன் | பஸ்லுன் பாருக் |

ஆகியோா் இணைத்துக் கொள்ளப்பட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜனாப் ஜாஸில் தாஹா அவா்களின் தலைமைத்துவத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட FDSC இன் முதற் செயலாளராக ஜனாப் பைசா்அலி சித்தீக் அவா்கள் கடமையாற்றினாா். அதே நேரம் FDSC இன் முதற் தனாதிகாரியாக அக்பா் அலி உவைஸ் அவா்களது சேவை பெறப்பட்டது.

2013 வருடம் இடம்பெற்ற 3 வது பொதுக்கூட்டத்தில் இடம்பெற்ற உத்தியோகத்தர் தெரிவில் ஜனாப் ஹில்மி ஹனீபா அவர்கள் கௌரவ தலைவராகவும் ,ஜனாப் அக்பர் அலி உவைஸ் அவர்கள் காரியதரிசியாகவும் ஜனாப் அதாஉர் ரஹ்மான் ஹனீபா அவர்கள் தனாதிகாரியாகவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

2009.03.01 அன்று டாக்டா் நிலாம் ஜிப்ரி அவா்களினால் நடாத்தப்பட்ட பெற்றோருக்கான விழிப்புணா்வுக் கருத்தரங்குடன் ஆரம்பிக்கப்பட்ட FDSC இன் செயற்பாடுகள் பல்வேறு கோணங்களில் விரிந்து செல்கின்றன. இச் செயற்பாடுகள் பல்வேறு கோணங்களில் விரிந்து செல்கின்றன. இச்செயற்பாடுகள் யாவும் FDSC இன் நான்கு நோக்கங்களைப் பிரதிபலிக்கக் கூடியதாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

FDSC இன் நான்கு நோக்கங்களும் வருமாறு-

1. தலைமைத்துவத்தின் அபிவிருத்தி
2. கல்வி தொடா்பான அபிவிருத்தி.
3. சுகாதார மேம்பாடு.
4. வாழ்வாதார உதவிகள்.

(நோக்கங்களது சுருக்கமே இங்கு தரப்பட்டுள்ளது)

இந்த அடிப்படையில் FDSC கடந்த ஐந்து வருடங்களாக பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

- விழிப்புணா்வு கருத்தரங்கு (55- 60 நிகழ்ச்சிகள்)
- மெல்லக்கட்கும் மாணவா்களை வலுவூட்டுதல்.
- ஆடு வளா்ப்புத் திட்டம்.
- சிறுநீரக நோயாளா்களுக்கான உதவி.
- ஜனாஸா வீடுகளுக்கு உணவு தயாரித்து விநியோகித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




SAHARA
COMPUTERS
Used / Brand New Computer Sales &
Repairing, Accessories,
CD Recording, Software & Game Cds.

No. 126, Kandy Road, Madawala Bazaar.
Mob: 0777 077412
E-mail: fmshiyad@yahoo.com

மலசல கூட, சமயலறை அபிவிருத்தி செயற்பாடுகள். ஏனைய நிறுவனங்களது செயற்பாடுகளுக்கு உதவுதல்.

**தலைமைத்துவப் பயிற்சி**

சஞ்சிகை வெளியீடு. (2013 நவம்பரிலிருந்து "அலைகள்" என்கிற பெயரில் மனிதமேம்பாட்டுக்கான கலை இலக்கிய வடிவங்களையும் - இலைமறை காயாக வீற்றிருக்கும் கலைஞர்களின் திறமைகள் வெளிக்கொண்டுவரும் முகமாக சஞ்சிகை வெளியீட்டிலும் தன் பாதங்களை பதிய வைக்கிறது).

இவ்வாறான செயற்பாடுகள் எமது உறுப்பினர்களின் அன்பளிப்பு மற்றும் எமது அனுசரணையாளர்களின் அன்பளிப்பு என்பவற்றிலேயே உயிர்பிக்கப் படுகிறது. அத்துடன் ஏற்கனவே குறிப்பிட்ட படி இவற்றின் மூலம் 'சமூக மூலதனத்தை' அபிவிருத்தி செய்வதையே முதன்மைப் படுத்தி FDSC செயற்படுகிறது. 'மக்களே முதன்மை' (People first) என்ற சுலோகத்தை தன்மயமாக்கிக் கொண்ட FDSC 'சிறந்த சமூகத்திற்கான சிறந்த மனிதர்களை உருவாக்குவோம்' எனும் கருப் பொருளில் இயங்கி வருகிறது.

-நிதார் எம் நுஸ்ரி-




M.S.Faizar Ali LL.B

*Attorney - at - Law, Notary Public,*
*Commissioner for Oaths and Registered Company Secretary*

76/1, Bangalagedara,Madawala Bazaar. 081 2475243,077 3293943

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மாற்றத்திற்கான பயிற்றுவித்தல்

அஷ்ஷெய்க் எம்.ஏ. அனஸ் முஹம்மத்
B.A. (நளீமி) Higher Dip in Seera (Sudan)

''ரஸுல்(ஸல்) அவர்களைப் பற்றி அல்குர்ஆனிலே அல்லாஹுத்தஆலா பின்வருமாறு கூறுகின்றான். உலகத்தார்களுக்கு அருளாகவே உம்மை நாம் அனுப்பி இருக்கின்றோம்." (அல் அன்பியா : 107)

இங்கு நபியவர்களுக்கு ரஹ்மத் (அருள்) என்ற சொல்லை அல்குர்ஆன் பயன்படுத்தி இருக்கின்றது. இது உண்மையிலேயே ஒரு பாரிய ஆழமான கருத்தைக் கூறுவதற்கே முற்படுகின்றது. உலகத்தார்களுக்கு வழிகாட்ட வருகின்ற ஒருவர், உலகத்தார்கள் அனைவரைப் பற்றியும், பல தரப்பட்ட மக்களின் சுக, துக்கங்களையும் ஆழமாக விளங்கியிருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் அவர் அவர்கள் மீது அருளாக, அன்பாக இருப்பார்.
அடுத்து, உலகின் அரசியல், பொருளாதாரம், புவியியல், கலாசாரம் போன்றவற்றை அவர் விளங்கியிருக்க வேண்டும். அனைத்துக்கும் மேலாக அவர் தலைமைத்துவப் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

இப்படியான ஒருவர் உருவாக அவர் எத்தனை வகையான கற்கை நெறிகளைத் தொடர வேண்டும் (Courses). அது மட்டுமா? அவற்றில் அவர் அனுபவமும் பெற வேண்டும் (Rxperience).

இந்தப் பின்னணியில் நாம் நோக்கும் போது உலகின் வரலாற்றுப் போக்கையே மாற்றிய அந்த மாநாபி எத்தனை கற்கை நெறிகளை முடித்திருக்கிறார்கள்? அவர்கள் ஒரு உம்மி நபி. எழுத வாசிக்கத் தெரியாதவர்கள். அவரால் எப்படி இந்த சாதனையை செய்ய முடிந்தது.

23 வருடத்தில் ஒரு பாரிய சமூகப் புரட்சி. உலகின் போக்கிலே ஒரு திருப்பம். இவற்றை சாதிப்பதற்கு அவருக்கு ஒரு பாரிய பயிற்சி தேவைப்பட்டது. அந்தப் பயிற்சி அனுபவ ரீதியான பயிற்சி. அதற்கு எடுத்த காலம் 40 வருடங்கள்.

40 வருடப் பாரிய பயிற்சியின் பின்புதான், 23 வருட சமூக மாற்றம் என்பது அல்லாஹ்தஆலாவின் விதி. இது விளைவை அவசரமாக எதிர்பார்ப்பவர்களுக்கு சிறந்த ஒரு முன்மாதிரி. இப்போது அந்த 40 வருடப் பயிற்சிக் கட்டங்களை நோக்குவோம். அநாதைகள், வளர்ப்புக் குழந்தைகள், போன்றோருக்கு வழிகாட்டியாக அந்த நபி இருக்க வேண்டும். அதற்காக ஆரம்ப 6 வருட பயிற்சி (Training).

எதிர்காலத்தில் தலைவராக வர இருப்பவருக்கு தலைமைத்துவப் பயிற்சி வேண்டாமா? இதோ பாட்டன் அப்துல் முத்தலிப், மக்காவின் தலைவர். அவருடன் இரண்டு வருட தலைமைத்துவப் பயிற்சி.

பின் பெரிய தந்தை அபூதாலிபிடம் சில பயிற்சிகள். அவரது வருமானம் குறைவு குழந்தைகள் அதிகம். இப்போது எமது நபிக்கு தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம். அவசரமாகக் கிடைக்கும் தொழில்; அப்போதைய கால கட்டத்தில் ஆடு மேய்த்தல். இதில் இரண்டு வகையான பயிற்சிகள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) கீழ்மட்ட மக்களின் வாழ்க்கை பற்றிய அறிவு, அவர்களை அணுகுவதற்கான பயிற்சிகள்.

(ஆ) பாட்டனிடம் கிடைத்த தலைமைத்துவப் பயிற்சியை ஆடுகள் என்ற ஒரு சமூகத்தில் (Practical) பிரயோகித்துப் பார்த்தார்.

நபிமார்கள் அனைவருக்கும் அல்லாஹுத்தா ஆலா இந்தப் பயிற்சியைக் கொடுத்துள்ளான். ஏனெனில் அவர்கள் தலைவர்கள். பின்பு வியாபாரம் செய்தார்கள். அதிலும் குறிப்பாக சர்வதேச வியாபாரம். ஏன் இதிலும் பல பயிற்சிகள்.

அ) வியாபாரம் உயர்மட்ட சமூகத்தின் தொழில். அதில் புலமை பெருதல் அவர்களின் வாழ்வு பற்றி விளங்கிக் கொள்ளுதல். (Business Technics)

ஆ) பல நாடுகள் பற்றிய அறிவு பெறல் (Geoghraphy)

இ) அந்நாட்டு அரசியல் பற்றி அறிதல் (Political)

ஈ) பல நாடுகளின் மக்கள், கலாசாரம் பற்றி அறிந்து கொள்ளல் (People & Culture). அதற்கு சிறந்த வழி சர்வதேச வியாபாரம்.

இப்படியான கால கட்டத்தில் யுத்தப் பயிற்சி ஹர்புல் புஜ்ஜாரில் கிடைக்கின்றது. (War Technique) சமூக சேவைப் பயிற்சி 25 வயதிலே கிடைக்கின்றது. குடும்ப உறவு, குழந்தை வளர்ப்பு போன்ற பயிற்சிகள். அதற்கும் வாழ்க்கையிலே மிகவும் அனுபவம் வாய்ந்த ஒரு பெண் கிடைக்கின்றார். அவர் ஒரு பணக்காரியும் தான். அவருக்கு வயது 40. இப்போது 25 வருட அனுபவமும் 40 வருட அனுபவமும் சேர்ந்து 65 வருடங்களின் அனுபவப் பகிர்வாக அது மாறுகின்றது.

இந்த இரு அனுபவசாலிகளும் வாழ்க்கையில் பாரிய நிர்பந்தங்களை சந்தித்தவர்கள். அவர்களுக்கு இப்போது ஒரு பெரும் ஓய்வு (relax) கிடைகின்றது. கதீஜா நாயகியோ தனது வியாபாரச் சுமையை நபியிடம் ஒப்படைத்து விட்டு முழுமையான குடும்பப் பெண்ணாக மாறுகின்றார். நபியவர்களுக்கிருந்த பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து திறமையை (Management Skill) அவருக்குக் கொடுத்தது.

தற்போதைய ஓய்வைப் பயன்படுத்தி சமூக சேவையில் மும்முரமாக ஈடுபட்டார்கள். அதற்கு அவரிடம் காணப்பட்ட விசேட பண்புகளான அல் அமீன் - நம்பிக்கையாளர், அஸ்ஸாதிக் உண்மையாளர் என்ற பண்புகளும் துணை நின்றன. இதன் மூலம் சமூகத்தில் பாரிய இடம் பிடித்தார்கள்.

எதிர்காலத் தலைவருக்கு சமாதானம் பற்றிய அனுபவம் வேண்டுமல்லவா? அதற்கும் அல்லாஹுத்தாஆலா பயிற்சி கொடுத்தான். க∴பா புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, ஹஜருல் அஸ்வத்கல்லையார் வைப்பது என்ற பிரச்சினை ஒரு பெரும் போராட்டமாக மாற இருந்தது. அதை சமாளித்து ஒரு பெரும் சமாதானத்தை செய்து வைத்தார்கள்.

சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு இருந்ததால் சமூகத்தின் நிலை பற்றிய பாரிய கவலை நபியவர்களுக்கு ஏற்பட்டது. இந்த சமூகத்தை எப்படி மாற்றலாம். அவர்களை எப்படி திருத்தலாம் என்ற கவலை அவர்களை வாட்டுகின்றது. இதற்காக அவர்கள் தனிமையை விரும்புகின்றார்கள். சிந்திப்பதற்காக ஹிரா குகையை நாடுகின்றார்கள். அதற்காக மனைவியும் பூரணமாக ஒத்துழைக்கின்றார்கள். இதோ சமூக மாற்றத்துக்கான வழிகாட்டி, ஒளி விளக்கு அந்தக் குகைக்கு இறங்குகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்றத்தை செய்ய முற்படுகின்ற-வர்கள் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்

1. சமூகம் பற்றிய பாரிய, நுணுக்கமான அனுபவம்.
2. அவர்களுடனான நெருங்கிய தொடர்பு
3. அந்த சமூகம் பற்றிய கவலை
4. அந்த சமூகத்தை மாற்ற வேண்டும் என்ற சிந்தனை

இதன் பின்புதான் நாம் கொள்கைகளை (Theory) நடைமுறைப்படுத்த முடியும். இதை நாம் ஸீராவில் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படியான பாரிய அனுபவத்தின் பின்பும் சமூக மாற்ற சிந்தனையை நடைமுறைப்படுத்தும் போது நபியவர்கள் எதிர்கொண்ட சவால்கள் பல. இன்னொரு வகையில் கூறினால் இஸ்லாத்துக்கு எதிராக எதிரிகளின் சூழ்ச்சிகள் பின்வருமாறு கட்டம் கட்டமாக அமைந்தன.

1. ஸ்தாபகர் / தலைவர் அல்லது கொள்கை பற்றிய தவறான கருத்தை பரப்பினர். (உ-ம் : பொய்யன், ஜின்பிடித்தவன், சூனியக்காரன், கவிஞன்...) இதில் தோல்வியடைய
2. பலவிதமான அங்கத்தவர்களை சித்திரவதை செய்து மதம் மாற்ற முயற்சித்தனர். அதிலும் தோல்வி கண்டனர்.
3. தலைவரை ஆசைகாட்டி விலைக்கு வாங்குதல் அல்லது வழி கெடுத்தல் இதை இரண்டு வகையில் செய்தனர்.
   அ) பெண், தலைமை, செல்வம் தருவதாக வாக்குறுதி அளித்தனர்.
   ஆ) மார்க்கத்தில் கலப்படம் செய்ய முயற்சித்தனர்.
4. அனைவருக்கும் 3 வருடங்கள் பொருளாதாரத் தடைவிதித்தனர். அதிலும் தோல்வியடைய,
5. தலைவரை கொலை செய்கின்ற முடிவுக்கு வருகின்றார்கள். இந்தக் கொலை முயற்சியை அல்லாஹுத்தஆலா ஹிஜ்ரத் என்ற வரலாற்றுத் திருப்பமாக மாற்றி விடுகின்றான். இதன் விளைவால் இஸ்லாம் ஒரு அரசாக மதீனாவில் மாறுகின்றது. இப்போது ஒரு அரசாங்கத்தை எப்படி எதிர்ப்பது? எடுத்த வழிமுறை
6. யுத்தங்கள் : பல யுத்தங்களில் இஸ்லாம் வெற்றி பெற்றது. குப்ர் எப்போதும் தோல்வி அடையும் போது தஞ்சம் அடையும் அடுத்தவழிமுறைதான்,
7. ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை

எப்போது காபிர்கள் முஸ்லிம்களுடன் உடன்படிக்கைக்கு வருகின்றார்களோ அது முஸ்லிம்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்பதையே காட்டுகின்றது. இதனையே சூரதுல் பத்ஹ் பின்வருமாறு கூறுகின்றது.

''நபியே நிச்சயமாக நாம் உமக்கு தெளிவான வெற்றியை தந்து விட்டோம்''. இது ஹுதைபியா உடன்படிக்கையைத் தொடர்ந்து இறங்கியவசனம்.

இதுதான் ஒவ்வொரு தஃவா அமைப்புக்கு-மான அளவுகோள். நாம் எந்த இடத்தில் இருக்கின்றோம் என்பதை இந்த ஸீராவின் அளவு கோளால் அளந்து பார்க்க வேண்டும். மொத்தமா-கப் பார்க்கும் போது இலங்கை முஸ்லிம் சமூகம் முதல் கட்டத்திலேயே இப்போது இருக்கின்றது. நிச்சயமாக அடுத்தடுத்த கட்டங்களை அது அடைந்தே தீரும். ஏனெனில் நபியவர்களின் சுன்னாவாக இது காணப்படுகின்றது.

இவை நபியவர்களின் ஸீரா பற்றிய இரத்தினச் சுருக்கம். இன்ஷா அல்லாஹ் பின் ஒரு சந்தர்ப்பத்தில் இவற்றை விரிவாக நோக்குவோம்.

* * *




With Best Compliments From

KANDURATA HARDWARE

Dealers in All kinds of Hardware items ,
General Hardware Merchants
(CAUSEWAY PAINTS)

K HARDWARE



No. 68, Wanguwakade, Madawala Bazaar.Tel: 077 3202411, 0771751175


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியாளர் அப்துல் ஹஸன் மொஹமட் மவ்ஜூட்

## Personal Information



NAME: Abdul Hassan Mohammed Mawjood

DESIGNATION: Senior Lecturer
Institute of Indigenous Medicine
University of Colombo

OFFICE: Institute of Indigenous Medicine
University of Colombo,
Rajagiriya

EDUCATION:

School Education: From Gr. I to G.C.E. (A/L)
Madina central College, Madawala Bazaar

Higher Education: D.A.M.S. (2nd Class, Upper Div.),
University of Colombo, Sri Lanka

(Six year study course on Diploma M Ayurveda Medicine and Surgery (D.A.M.S.) including one year internship training)

M. Pharm. (Pharmaceutical Sciences)
Faculty of Pharmaceutical sciences
Osaka University, Japan

(Masters M Pharmacy - Specialization is in the field a Pharmacognosy with special reference to Medicinal Plants Chemistry)

Ph. D. (Medical Sciences)
Faculty of Medicine
Osaka University, Japan

(Specialization M the field of Physiology with special reference to Genetic Engineering and Hemoglobin)

LL B
Department of Legal studies
Faculty of Humanities and Social Sciences
The Open University of Sri Lanka

(Graduated from the Open University in 2012)

இப்பகுதியினூடாக நம் மண்ணில் கல்வி, விளையாட்டு, சமூக சேவை, வியாபாரம், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களை அறிமுகம் செய்வதனூடாக அவர்களை நினைவு கொள்வதும், யாவரும் அறியும் நோக்கிலும் கல்விக் கற்கும் மாணவர்களுக்கு ஓர் உந்துதலாகவும் இச் செயற்பாடு அமையும் என்கின்ற நோக்கில் ஒவ்வொரு இதழிலும் இவ்வாறான ஒருவரை அறிமுகப்படுத்துவதில் எமது **F.D.S.C** இலக்கியக் குழு பெருமை கொள்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைத்தேடி வழிநடப்போருக்கு, இறைவன் சொர்க்கத்தின் பாதையை இலேசாக்கி விடுகிறான். கல்விக்காகச் செலவிடும் ஒரு வினாடியும் ஒரு இரவு முழுவதும் நின்று வணங்குவதைவிடச் சிறந்தது. கல்வி எமது சமூகத்தால் தொலைக்கப்பட்ட ஒரு பொருள் - அதை எங்கு கண்டாலும் தேடிக்கொள்ளுங்கள் என எம் பெருமானர் (ஸல்) கூறியுள்ளார்கள்.

கல்வி கற்றலைப்பற்றி அல்குர்ஆன் - நபி(ஸல்) அவர்கள் எவ்வாறு முன்னுரிமை வழங்கியுள்ளார்கள் என்பதனை மேற்சொன்ன கூற்று எடுத்தியம்புகிறது.

இலங்கை வரலாற்றை பொருத்தமட்டில் ஆரம்பத்தில் பாடசாலைகளை கிறித்தவ மிஷனறிகளாலேயே நடாத்தப்பட்டன. இதில் சந்தேகம் கொண்ட இஸ்லாமிய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை மதம்மாற்றிவிடலாம். தனது பிள்ளைகளின் ஈமானில் விரிசல்கள் விழுந்திடலாம் என்கிற அச்ச உணர்வு காரணமாக தமது பிள்ளைகள் கல்வி கற்பதில் ஈடுபாடு காட்டவில்லை. அத்தோடு செல்வம் படைத்தோரின், உயர் குடும்பத்தாரின் சொத்தாகவே கல்வி காணப்பட்டது எனலாம்.

இவ்வாறான காலகட்டத்தில் அன்றைய மடவளை பிரதேசத்தில் கல்வியால் தன்னையும் - தனது ஊரையும் பெருமைப்படுத்தியவர்களில் ஒருவர் அப்துல் ஹஸன் மொஹமட் மவ்ஜுூட் ஆவார்கள்.

இவர் சிறிமல்வத்த வீதி, இலக்கம் 1 வைட் ஹவுஸில் வசித்த மர்ஹூம் அப்துல் ஹஸன் - மர்ஹூமா ஒஸிலா தம்பதியினரின் 7வது பிள்ளையாவர். இவர் ஆரம்பம் முதல் உயர்கல்வி வரை மடவளை மதீனா தேசிய கல்லூரியிலேயே கற்றவர். இவரின் சகோதரர்களே முன்னைய நாள் மதீனா தேசிய பாடசாலை அதிபர் அல்ஹாஜ் சித்தீக் மற்றும் A.H.M. நசீம் என்பதில் இம்மடவளை மண்கர்வம் கொள்கிறது.

புலமையாளர் மவ்ஜுூட் அன்றைய குடும்பச்சூழல், பொருளாதார சுருக்கம், பாடசாலையில் காணப்பட்ட பௌதிகவளம் - ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக கல்வித் துறையில் நாட்டமின்றியே அந்நாளில் காணப்பட்டார்கள். இருப்பினும் தனது சகோதரர் ஏ.எஸ்.பி. நஸீம் அவர்கள் கா.பொ. சாதாரண பரீட்சையில் சித்தியெய்திய சந்தர்ப்பம். தனது புத்திக்கும் - சிந்தனைக்கும் வாழ்விற்கும் திருப்புமுனையாக அமைந்தோர் சந்தர்ப்பமாக நினைவு கூறுகிறார்.

தன்னாலும் முடியும் - என்னாலும் சாதிக்க முடியும் என்கிற உணர்வைத் தட்டிவிட்ட ஓர் சந்தர்ப்பமாக இது மாறிவிட்டிருந்தது. இருப்பினும்,

சுதந்திரமாகவும் விருப்பத்துடனும் கற்பதற்கு ஏற்ற ஓர் அழகியல் சூழல் காணப்படாமையும் வகுப்பறைகள் மாணவரையும் பாடப்பரப்பையும் இணைத்திட வைக்கும் ஓர் இடம். இவ் இணைப்பை சாத்தியமாக்கும் இணைப்பாளராக ஆசிரியர் தொழில்படுகிறார். இருளை அகற்றி அறிவு ஒளியைப் பரப்புபவராக 1974 காலப்பகுதியில் வந்தவராகவே அன்றைய மடவளை மதீனா கல்விச் சமூகம் போற்றும் ஆசிரியர் சஹீட் ஆசிரியராவார். இவர் கண்டியிலிருந்து வருகை தந்து மாணவர்கள் மத்தியில் கல்வி எழுச்சியை, கல்வி வழிகாட்டலை தன் நலம் பேணாது மாணவர்களிடையே வித்திட்ட பெருந்தகையாக போற்றப்படுபவர்.

அதிகாலையிலேயே பாடசாலைக்கு சமூகமளிப்பதுடன் பாடசாலை விட்ட பிறகு பிரத்தியேக வகுப்புகளை இரவு பத்து மணிவரை மாணவர்களுக்கு நடாத்தக்கூடிய பண்பாளராக இருந்துள்ளார். இவ்வாசிரியருடன் அதிபர் S.A.R.M. பாருக், B.M. நதீர், A.S.A. அஸீஸ் ஆசிரியர்கள் தனது கல்வித்துறை விருத்திக்கு வித்திட்ட கணவான்களாவே கல்வியாளர் மவ்ஜுூட் நினைவுக்கொள்கிறார்.

அன்றைய கல்வி நிலையை நினைக்கும் போது, வசதி வாய்ப்புகள் குறைவானதாக இருந்தபோதும் ஆர்வத்தோடு கற்றோம்.

இன்றைய நிலையில் சகல வசதி வாய்ப்புகளும் இருக்கின்ற நிலையிலும் கல்வித்துறையில் ஆர்வமின்றி பொருளாதாரச் சுகத்தில், நவீன தொடர்பாடல் முறைகளில் கவனம் செலுத்தி சீரழியும் ஓர் சமூகமாக மாறிவருவதையிட்டு கவலைக் கொள்ளும் இவர் அன்றைய காலத்தில் மாணவ சமூகத்துக்காக அதிபர் அடிக்கடி கூறும் ஓர் வார்த்தையை இவ்வாறு நினைவு கூறுகிறார்.

"டில்லிக்கு ராஜாவானாலும்
பாடசாலைக்கு பிள்ளையே"
(S.A.R.M. பாருக் அதிபர்)

என்கிற கருத்தை ஒவ்வொரு கல்விச் சமூகமும் முதன்மைப்படுத்த வேண்டும் விடா முயற்சியுடன் மார்க்கக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதைபோல உலக கல்விக்கும் நம் சமூகம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். நான் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று உயர்வு பெற்றதுபோல் நம் சமூகத்திலிருந்தும், ஊரிலிருந்து பல்துறை புலமையாளர்கள் வெளிபட்டு, ஊரின் நாமத்தை திக்கெட்டும் பறைசாற்ற வேண்டும். நாங்கள் ஒவ்வொருவரும் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஆழமாக கற்றுணர்ந்து சிந்தித்து, கடைப்பிடிப்பவர்களாக - மாற வேண்டும். ஏனெனில் மாற்றம் ஒன்றே மாறுதல்களையும், மறுமலர்ச்சிகளையும், வசந்தங்களையும் வசீகரங்களையும் கொண்டுவரும் என்பது என் நம்பிக்கையாகும்.

கற்றவர்களும் கல்லாதவர்களும் என்
சன்னிதானத்தில் சமமமாக மாட்டார்கள்.
(அல்குர்ஆன்)

- FDSC குழு -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஷமா -

# மரணமே எல்லை

காலையிருந்தே இவனைத் தொற்றிக் கொண்ட பதற்றம், மாலையானதும் மாரி காலத்துக் குளம்போல் நிரம்பத் தொடங்கிற்று. பின் அலை அலையாய் நுரைத்து இவன் மனக் கரையில் பேரதிர்வை தந்தது. யுகம் யுகமாக பொத்தி வளர்த்த ஒரு உறவின் அந்தி மக்களால் இவன் செவிகளில் நிறைந்து அலறிக் கொண்டிருந்தது. ஆணிவேர் ஆன்மாவின் அறுந்த கையறுநிலை

எப்படியும் இரவு கூடி விடுவார்கள். இவனுக்கான நிச்சியதார்த்தம் நித்தியமாகி விடும். காலையிலிருந்தே வாப்பாவும் மச்சானும் நெருங்கிய உறவுகளுக்கு செய்தி அனுப்பிக் கொண்டிருந்தார்கள். பெண் வீட்டார் தூரமில்லை என்பதால் அடிக்கொருதரம் நிகழ்வுகளை அவதானித்துப் போனார்கள்.

உம்மா மணக்க மணக்க சமையல் செய்யவென பரபரவென்று ஓடுவதும், கட்டளையிடுவதுமாக பிஸியாக இருந்தார். வீடே அமர்க்களமாக விழாக்கோலம் பூண்டிருந்தது. பிள்ளையின் நிச்சயதார்த்தமே ஒரு திருமணக் காட்சியாய் விரிந்து உம்மாவின் விழிகளில் பிரகாசமடித்தது. தங்கைகள் குறுகுறுவென இவனை பார்ப்பதும், சிரிப்பதுமாக பறந்து திரிந்தனர்.

இடையிடையே நண்பர்கள் வேறு 'அறுவை' செய்து கொண்டிருந்தனர். தபால் வருவதற்கு முன்பிருந்தே பதற்றத்துடன் வாசலில் நின்றான். இன்றாவது அங்கிருந்து கடிதம் வராதா? என்ற ஆதங்கத்தில் உள் மனம் அடித்துக் கொண்டது. ஒரேயொரு கடிதத்திற்காக துடிப்பதை நினைக்கையில் வேதனை மிகுந்த சிரிப்பு இதழோரம் முகிழ்ந்து கருகியது. அந்தக் கடிதங்களுக்-காகவே தான் உயிர் வாழ்வதாகவும் எழுதுவதாகவும் இவன் மனம் அடிமைப்பட்டு போனது.

மாலை மயங்கி, இருள் கவியத் தொடங்கியது. தூரத்திலிருந்து எதிர்ப்பார்த்த நெருங்கிய உறவுகள் வீட்டு முற்றத்தில் கூடிக்கொண்டிருந்தார்கள். நீண்ட இடைவெளிக்குப் பின் ஒருவரையொருவர் சந்திக்கவும் நலன் விசாரிக்கவும் இத்தகைய பந்தங்கள் தோதாக வாய்த்து விடுகின்றன.

வெற்றிலை மென்று உமிழும் சத்தம் நச் நச் சென அடிக்கொரு தடவை இவன் கவனத்தைக் கவர்ந்தது. குழா குழா வென அதக்கிய பொக்கை வாய்க்குள்ளிருந்து ஹாஷ்யங்கள் வெடித்தன. பெண்கள் ஒரு பக்கமும் ஆண்கள் ஒரு பக்கமுமாய் வீடே திமுதிமு வென்றிருந்தது. நிச்சயதார்த்தத்திற்கு இவ்வளவு அமர்க்களம் செய்திருக்க வேண்டாம். இதை உம்மாவிடம் சாடையில் சொல்லி வைத்தான். அவளோ வெனில் இளநகை பூக்க என்ட பிள்ளக்கி ஊரக் கூட்டி செய்திருக்கனும். இதுவே சுமாராப்படுகுது என பாடிவிட்டுப் போய் விட்டாள்.

ஆரவாரங்கள் அடங்குவதாயில்லை. இவன் மனம் ஆங்காரமாய் சுழிகொண்ட கடலாய் மூர்க்கம் கொண்டது. நினைவென்னும் நிலவறையில் கொல்லப்படாமல் ரகஸ்யமாய் வளர்த்து வந்த அவளின் மீதான அபரிதக் காதல் இக்கணத்தில் மூர்ச்சையுற்று விடுமோ என அஞ்சத் தொடங்கினான். விடிவெள்ளி சிதறிக்கிடந்த வானம் இவன் மனப்போர் அறியாமல் ஜாலங் காட்டியது. கனவின் பிடி தளர்ந்து நினைவுகள் பின்நோக்கிச் சரிந்தன. சடசடவென சிறகடிக்கும். காலக்குயிலின் இனிய கானத்திலிருந்து செவியை நிறைக்கும் இன்பகானம் வீசியது. அது அவள் மீதான அன்பின் நறுமணம் கமழத் தொடங்கிய ஆரம்பவயது.

இவன் பத்திரிகைகளுக்கு தீவிரமாக எழுதிக் கொண்டிருந்த காலம். இளமையின் வீர்யம் மணக்கும் பருவம் அழகிய கனவுகள் மட்டும் விழிகளில் துளிர்க்கும். முதல் காதலின் பரிவும் அதன் கொடிய வேதனையும் வெவ்வேறு உணர்ச்சி பிழம்பாய் கவிதைகளும், கதைகளுமாக பிரவாகமெடுத்த காலம். அவற்றைப் படித்தவர்களின் வாழ்த்துக்கள். விமர்சனங்கள், கேலிகள் என தினமும் தபால்கள் வந்து குவிந்து கொண்டிருந்தன. அந்தக் கடிதங்களில் ஒரே யொரு முத்து மட்டும் இவன் மனதைக் கவர்ந்தது. அந்த விமர்சனங்கள் அறிவு பூர்வமாக இருந்தன.

அந்தக் கைதட்டல்களுக்காகவே எழுத வேண்டும் போலிருக்கும். அந்த முகம் தெரியா கடிதக்காரியின் நினைவு மனதை அழுத்தும் போதெல்லாம் எழுது எழுது என உள்ளார்ந்த உணர்வு அடம் பிடித்து எழுந்து விடும். அது வசீகரக் கடிதங்கள் தான். பின்னாளில் அந்தக் கடிதங்கள் வராமல், அதைப் படிக்காமல் எதுவுமே எழுத முடியாமல் போய்விட்டது. அப்படியொரு ஆகர்ஷண சக்தி அந்தக் கடிதங்களுள் புதைந்திருந்து இவனை இயக்கியது. இவனுடன் அந்தக் கடிதங்கள் பேசின, சிரித்தன. கைதொட்டு தழுவின. கனவின் மயக்கத்திலிருந்து மீட்டெடுத்தன. வேகமாகப் பரவும் தொற்று நோய் போல் அவளையும் இவன் கடிதங்கள் வசீகரித்ததை உணர்ந்து கொண்டான். மனசின் உள்ளரையில் அந்தக் கடிதங்கள் உயிரசைவைத் தந்தன. ஒரு மேதாவி எழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தோவியங்களாய் அவள் கடிதங்கள் இவனுள் புதிய மனிதனை உருவாக்கியது. கீறப்பட்டு, குதறி வீசப்பட்ட இவன் இதயத்தை அதன் மெல்லிற கால் வருடிக் கொடுத்து களிம்பு பூசின அவள் எழுத்துக்கள்.

"மாபிள்ள இப்பவே கலியாணத்தைப் பத்தி கனவு காணுறார் போல", உள்ளறைக்குள் மவுனமாக அழுது கொண்டிருந்தவனை அந்தக் குரல் உலுக்கி எடுத்தது. திரண்டு வந்து, இதோ உருளப் போகிறேன் என அச்சுறுத்திய விழி நீரை அவசரமாக கைக்குட்டையில் அமுக்கினான். திரைச் சீலையை விலக்கியப்படி மச்சான் நின்றிருந்தார். மூத்த தங்கையின் கணவன் நல்ல தமாஷ்காரர். தனது திருமணம் பற்றி என்ன பேசினார்கள். எப்போது அது நடைபெறும் என்ற சுரணையே இல்லாமல், அவன் அறைக்குள் புழுங்கிக் கிடந்தான். பத்திரப்படுத்திய அவள் கடிதங்களை மறுபடியும் படிப்பதற்கு விழிகள் பரபரத்தன.

அவ்வப்போது அனுப்பிய நினைவுப் பரிசுகள் மிகப் பத்திரமாகவும், நேர்த்தியாகவும் அலுமாரியுள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவள் கடிதம் வராத இடைவெளிக்குள், பழைய கடிதங்களை எத்தனை தடவைதான் படிப்பது படிக்கப்படிக்க சுவையூறக் கூடிய கடிதங்கள் தான் அவை. ஏன் திடீரென கடிதங்கள் எழுத வேண்டாம் என முற்றுப் புள்ளியிட வேண்டும். அவளளவில் எழுதாமல் இருப்பது மிகக் கடினமானது என்பதை இவனும் அறிவான்.

திடீரென கதவு தட்டப்படும் ஓசை. அவள் நினைவு-களை கட்டிலின் விளிம்பில் வழியவிட்டப்படி கதவை நோக்கித்தாவினான். உம்மா பூரித்த முகத்துடன் நின்றிருந்தா, அவ கையில் இனிப்புத்தட்டு இருந்தது. இவன் கோலம் கண்டு பதறிப் போனாள். "என்ன மகன் தலையெல்லாம் குளஞ்சி இருக்கி கண்ணும் சிவந்திருக்கி சொகமில்லையா?" அவளின் பரிவில் அழுது விடுவான் போலிருந்தது. மிகச் சிரமத்துடன், உதட்டை அழுந்தக்கடித்து, துயரங்களை மென்று கொண்டிருந்தான். "இல்லம்மா நேற்றிரவு தூக்க-மில்லை. அதுதான் தூங்கினேன்."

அவள் இனிப்புத்தட்டை மேசையில் வைத்து விட்டு "கோப்பி எடுத்து வாரன்" என மறுபடியும் குசினிக்குள் நுழைந்தாள். உம்மாவின் நிழல் தேய்ந்துபோனது. சட்டென எழுந்து கண்ணாடியில் முகத்தை உற்றுப்-பார்த்தான். வீங்கிய கண்கள் சிவந்திருந்தன. கைக் குட்டையில் குளோன் அடித்து, முகத்தை அழுந்தத் துடைத்து, தலை சீவிக் கொண்ட பின்பும் விழிகளில் தேங்கிக்கிடக்கும் ஆழ்ந்த துயரத்தின் சாயலை அவனால் அழிக்க முடியவில்லை. ஜன்னலை திறந்து விட்டான். முற்றத்து மல்லிகையில் குழைந்தகாற்று, குபுகுபு வென புகுந்து இவன் மார்பையும், முகத்தையும் வருடியும். அவள் கடிதங்களை பிரிக்கையில் கவிழும் நறுமணத்தை சட்டென நினைவூட்டும் வாசம். எப்போதும் அந்தக் கடிதங்களில் அந்த வாசமும் கூடவே வந்து இவன் உயிரை உறிஞ்செடுக்கும். அது அவள் கரங்களில் வாசமா? கையெழுத்தின் வாசமா?

பேச்சு வார்த்தைக்கு வந்தவர்கள், ஒவ்வொன்றாக கரைந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடன் இயல்பாகவே கதைத்து, வாசல் வரை சென்று வழியனுப்பினான். "என்னா மாப்பிள்ளை இப்படி பேயறைஞ்சவன் போல நிக்கிறிங்க, தக்காளிப்பழம் போல பொண்ணு, பயப்புடாம இருங்க. ஆனால் விடைபெறுகையில் இவனை சீண்டி விட்டுப் போனார்கள். மனிதனின் சுபவமே அது மங்கள வீட்டில் அவனே ஒரு மங்களமாகி விடுகின்றான். சந்தோஷ வாசம் அவனையும் பீடித்து ஆட்டுகிறது. அந்தக் குடியில் அவன் தன்வசமிழந்து தன்னை சூழ விருப்பவர்களையும் குஷிப்படுத்துகின்றான்.

அப்படியொரு மகிழ்ச்சிகரமான நாள் தான் இவனுக்கும் வாய்த்திருக்கின்றது. எனினும் அதை மனம் ஒப்பிக் கொண்டாடவும், பேசவும் முடியாமல் அவள் நினைவுகள் அமுக்கி பிடிக்கின்றனவே! யாரவள் அவள் நிறமென்ன வெள்ளையா? கருப்பா? உயரமா? குட்டையா? எதுவுமே தெரியாது இவன் கவிதைகளில் தடுக்கி, மனசுக்குள் விழுந்தவள் அவ்வளவு தான். உயிரை உறிஞ்சும் ஒரு மகா சக்தியாக இவனில் அவள், பின்னாளில் உறைந்து போனாள்.

மழையடித்து ஓய்ந்தது போல வீடு வெறிச்சோடிக் கிடந்தது. சில உறவுப் பெண்கள் மட்டும் விடிய விடிய உட்கார்ந்து பாத்திரம் தேய்த்து வீடு பெருக்கி, கலகலத்துக் கொண்டிருந்தனர். திருமணக் கலை கட்டிய வீடு, ஓவென்று கிடந்தது. நள்ளிரவின் குளிர் ஜன்னலிடுக்கில் கசிந்து, ஊசியாய் குத்தியது. தூரத்தில் நாய்கள் குறைப்பதும், முணகுவதுமாய் ஓடித் திரிந்தன. வளை முகட்டில் ஓடித்திரியும் எலிகளின் கிச்சுகீச்சு மூட்டல், சுவரில் அப்பியபடி வால் விசுக்கும்


WITH BEST COMPLIMENTS FROM...

TESCO DRUGS & MULTI STORES

YOUR HEALTH IS OUR CONCERN

● English & Western Drugs ● Groceries

● Cosmetics ● Multi Items

No.170/B, Kandy Road, Madawala Bazaar.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லியின் உற்சாகம், எல்லாமே 'நைற்லாம்பின்' வெளிச்சத்தில் எடுப்பாய் தெரிந்தது.

நினைவுகளின் உஷ்ணம் இவன் கழுத்து வரை தீய்ந்தது. உறக்கம் நழுவி, வெகுதூரத்திற்கு அப்பால் சென்று விட்டது போல முசுப்புக் காட்டியது. பக்கத்து அறையில் வாப்பாவின் குறட்டை ஒலி. புரண்டு படுக்கையில் கிரீச்சிடும் கட்டிலின் கிறிச்சொலி சிலசமயம் எரிச்சலூட்டியது.

அலுமாரியைத் திறந்து வைத்து, அவள் கடிதங்களை படிக்கத் தொடங்கினான். கண்கள் சிவந்து பொங்கி வந்தன. சீறிவந்த கடுந்துயரை தலையணைக்குள் புதைத்தப் படி உறங்க முற்பட்டான். அவனையறியாமலே, உடம்பு குலுங்கத் தொடங்கிற்று. வியூகம் வகுத்து அவன் வசந்தத்தைக் கவர்ந்தது போல் அவள் கடிதங்கள் திடீரென முற்றுப் பெற்றதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

நேற்றிரவின் நெஞ்சத் தீ காலை எழுந்ததும், கண் எரிச்சலைத் தந்தது. இலேசாக தலைவலித்தது. இருந்தும் நன்றாகக் குளித்தான். வேலைக்குச் செல்வதற்கு எல்லாமே தயாராக இருந்தன. இளைய தங்கை எல்லா சேவிதங்களையும் பிசகாமல் செய்திருந்தாள். அலுவலகப் பணிகளுக்கிடையில் அவள் நினைவுகள் சற்றுப் புதைந்து போயினும், அவ்வப்போது எம்பிக்குதித்து "நானிருக்கிறேன் உன் மனசுக்குள்" என பறையடித்துக் கொண்டிருந்தன.

பியோன் கொண்டுவந்த கடிதங்கள் மேசையில் இறைந்து கிடந்தன. எதையும் வாசிக்கப் பிடிக்கவில்லை. கடிதங்களை மேலோட்டமாக நோட்டமிட்டவனின், விழிகளில் பரிச்சயமான அந்தக் கையெழுத்து சிக்கியது. பதற்றம் அவனை தொற்றிக் கொண்டது. இரண்டு வருஷங்களுக்குப் பின் அவள் கடிதம் எழுதியிருக்கின்றாள். அவனால் நம்பமுடியவில்லை. உதிர்ந்து போன ஓராயிரம் மலர்கள்.

யுகங்கள் கடந்தாலும் அவளால் நினைவு கூறப்படுகிறேன் என்ற நினைப்பே அவனில் புது இரத்தம் பாய்ச்சியது. திடீரென முகம் கறுத்தோடிச் சிறுத்தது. கடிதம் வந்ததும் என்ன பயன் தலைக்கு மேல் வெள்ளம் பாய்ந்து விட்டதே!

துடிக்கும் நெஞ்சை பொத்தியபடி கடிதத்தை படிக்க ஆரம்பித்தான். அவள் வாழ்வில் தான் எத்தனை இழப்புக்கள். ஓர் அநாதை போல் அவள் பொட்டல் வெளியில் நின்று அழுவதான பிரேமை இவனை கவ்விக் கொண்டது. ஓடிச் சென்று தன்மார்பில் சாய்த்து தலை கோதி, ஆறுதல் சொல்லனும் போல் மனம் பரபரத்தது. அவளை மடியில் கிடத்தி இனி எல்லாமே நான் தான் உனக்கு என தேற்ற வேண்டும் போல இருந்தது. அதே அன்பின் ஆழம் துளியளவும் குறையாமல் அவள் கடிதம் பேசியது. நீண்ட இடைவெளி இவனை தவிக்க விட்டதற்காக வருத்தியது, கெஞ்சியது. எதுவெதுவோ இவன் காதோடு பேசியது.

பகல் உணவுக்கு 'கென்ரீனுக்கு' நண்பர்கள் சென்று விட்டபின்பு, தனிமையின் மௌனம் ஆழமாகக் கவ்வியது. சாப்பிடப் பிடிக்கவில்லை. பணியிலும் கவனம் செலுத்த முடியவில்லை. அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு ஊரின் எல்லையில் இருக்கும் ஆற்றங் கரைக்குச் சென்றான்.

ஆற்றின் முதுகு நிறைய சருகுகள், அலைமடியில் ஆரோகணித்துச் சென்றன. இவன் நெஞ்சுக்குள் குமுறும் அவள் நினைவுகள் போல் சில நீர்க்காகங்கள், அலைக்குள் தலை அமிழ்வதும் எழுவதுமாய் ஆங்காரமாய் நீந்தித் திரிந்தன. மண்ணின் ஈரலிப்பில் ஆடை நனைய ஆரம்பித்தது. எதையும் ரசித்து அனுபவிக்கும் மனோநிலையில்லை. நேரம் பிந்தியே வீடுபோய் சேர்ந்தான். இவனைத் தவிர எல்லாமே வீட்டில் கலகலப்பாகத் தெரிந்தன. சுவர் கடிகாரம் கூட துள்ளித் துள்ளி ஓடுவதாக்கப்பட்டது. அவள் கடிதம் சட்டைப் பையுள் ஈரலித்தது. அழுதிருப்பாள் என மனம் கூவியது.

எப்படி எழுதுவது எனக்கு திருமணம் நிச்சயமாயிற்று என்று எழுதிவிடலாம். நான் உனக்காக இத்தனை காலம் காத்திருந்தேன் என்று எப்படி எழுதுவது? எப்படியாயினும் அவளுக்கு பதிலிட வேண்டும். காலத்தின் நிர்ப்பந்தம் திருமணம் நிச்சயமாயிற்று முன்கூட்டி உன்னுடன் தொடர்பு கொள்ளாமைக்கு உனது தடைகளே காரணம் என எழுதி அஞ்சலிட்ட பின்பு மனசு உறைந்தாற் போல் சலனமற்றுக் கிடந்தது. இவ்வருடம் பெய்த அடை மழையில் ஊர் முழுக்க வெள்ளக்காடு படிக்கட்டில் கால் வைக்க நீர் எட்டிப்பார்த்தது. எங்கு நோக்கினும், நீர்ச்சுவர் திருமணத்தை இன்னுமொரு மாதம் தள்ளிப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுவதற்கு தோதான காரணத்தை இந்த வெள்ளம் தந்து விட்டது. தள்ளிப் போகப்போக ஒருவகை ஆறுதல் கிடைத்தது. இது அவளின் மீதான உரிமையை தக்கவைத்துக் கொள்ளும் பிரயத்தனமே அன்றி வேறில்லை.

வெள்ளத்தில் இவனது எதிர்கால துணைவியின் வீடும் மூழ்கிவிட்டதாக தகவல். பார்த்து வரலாம் என்றால் வீட்டில் ஏகக்கட்டுப்பாடு. ஜலதோஷம் நீருக்குள் அதிக நேரம் உலவக்கூடாது என உம்மாவேறு தடை போட்டுவிட்டா. எனினும் தடைகளை மீறுவதில் ஒரு சுகம். இவன் தடைதாண்டி அங்கு சென்று வந்தான். மாப்பிள்ளை வந்திருக்கின்றார் என்பதில் அவர்களை விட அவளுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. வீட்டுக்குள் நிலை கொள்ளாமல் அவள் ஓடித்திரிவதை கவனிக்கவே செய்தான். அவள் கைபட டீ வந்தது. இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. ஒரு புன்னகை மட்டும் போதும் என்பதுடன் நிறுத்திக் கொண்டனர்.

திருமணப் பேச்சுக்குப் பின் இருவரும் பேசிக்கொள்ள ஒரு அவகாசம் கிடைத்தது. அவள் சொன்ன வார்த்தைகள் மனசில் எழுந்து ஆரவாரம் செய்தன. "நீங்கள் எழுதுறவர் என்கிறது தெரியும். உங்கட எழுத்துக்கும், ஆற்றலுக்கும் நான் எப்போதும் தடையாக இருக்க மாட்டேன். அதுபோல பல பேர் கடிதம் போடுவாங்க. அதில் கேர்ள்ஸு'ம் இருப்பாங்க. அதெல்லாம் எனக்கு பிரச்சினையே இல்ல, நல்ல நட்பும், தொடர்பும் என்றைக்கும் நிலச்சி நிற்கனும்" இன்னும் எதுவெதுவோ கூறி இவன் நெஞ்சுக்குள் புகுந்து உட்கார்ந்து விட்டாள் என்பது வேறு விடயம்.

இவனது கடிதத்திற்குவர வேண்டிய பதில் வெள்ளத்தை முன்னிட்டு, தாமதமாக வருமென்று, இலங்கை வானொலி எல்லோருக்கும் பொதுவாக அலறியது. மணமகளுக்கு தேவையான துணிமணி-களை தெரிவு செய்யவென இரு தங்கைகளும் பிரளயத்தையும் பொருட்படுத்தாமல் நகருக்குச் சென்று விட்டார்கள். இவன் நண்பர்களுடன் இணைந்து திருமண ஆடைகளை தேர்ந்தெடுக்கச் சென்றான். திருமண அழைப்பிதழும் அச்சடிக்கக் கொடுத்தாயிற்று. தபால் சேர்வதற்கு தாமதமாகும் எனத் தெரிந்த ஊர்களுக்கு ஆளனுப்பி சொல்லியாயிற்று, திருமணத்திற்கு சரியாக 10 நாட்கள் இருக்கையில் அழைப்பிதழ் அச்சாகி வந்துவிட்டது. முதல் அழைப்பிதழ் அவளுக்கே எழுத வேண்டும் என ஏற்கனவே தீர்மானித்தபடி, எழுதி தபாலில் சேர்த்துவிட்டு திரும்ப கையில் வீட்டில் அவள் கடிதம் வந்து காத்திருந்தது. நடுக்கம் விரல்களால் அதை உடைத்துப் படிக்கப் படிக்க இதயம் உருகி கண்களில் நீர் வழிந்தது.

அவள் இவனை தீவிரமாக நேசித்தது பற்றியும், அதை அவள் கடிதங்கள் ஊடாக அவள் இதயத்தைப் புரிந்து கொள்ளவில்லையா? என உக்கிரகமாக அக்-கடிதம் பேசியது. அதன் விம்மல் இவனை சுட்டுப் பொசுக்கியது. இவன் புதிய வாழ்க்கைக்கு வாழ்த்துக் கூறி ஆசீர்வாதத்துடன் முடிவுற்றது. அந்திம காலத்தில் அவளுக்கே உரித்தான இவனை இழந்து என்றும் ஈடு செய்ய முடியாத இழப்பு என எழுதியிருந்தாள். அத்துடன் ஒரு வேண்டுகோள் "என் பிரிய கவிஞரை நான் என்றென்றும் தனக்குரியவராக கொண்டாட வேண்டும். அதற்கு இவனிடமிருந்து ஒரு சின்ன அனுமதி வேண்டுமாம். இதென்ன விசித்திரமான அனுமதி. மனங்களில் நினைவுகளை தேக்கிவைப்பதற்கும், பொத்திப் பொத்தி அதை வளர்ப்பதற்கும் யாரும் தடைபோட்டு விட முடியாதே! அது ஒரு விந்தையான கனவுலகம். அகச்சுவரில் அஜந்தா ஓவியங்களாய் அந்தக் காதல் வெட்டுக்கள் நீடுழிகாலமாய் இருக்கும்.

அவள் மனமெனும் வனாந்திரத்துள் இவன் கவிதைகளும், நினைவுகளும் விடிவெள்ளியாயின. இவனுள் அவள் அத்வைதமானாள். இதற்குப் பின் இருவரும் நிறையவே கடிதங்கள் பறிமாறிக் கொண்டனர். இருவரின் பிசுபிசுத்த வேதனையை சுமந்து கொண்டு தபால்கள் ஆறுதல் தந்தன.

இந்த மனப் போரில் இவன் உண்மையில் இவன் ஆடித்தான் போனான். இது முற்றிலும் எதிர்பாராத தாக்குதல். இரு உள்ளங்களின் இந்த சம்ஹாரம் இருந்து இனி ஓயப் போவதில்லை. அவளின் இழப்பை ஜீரணிப்பது கடுத்துன்பமாக இருந்தது. எல்லாவற்றை-யும் காலம் மாற்றும் என அவள் ஆறுதல் சொன்னாலும் காலத்தால் அது சாத்தியமற்ற ஒன்றாகவே ஆகிற்று.

திருமணம் முடித்து, ஒரு மாதம் கடந்து விட்டது. புதிய உறவு, அன்பான மனைவி அமைதியான சூழல்,

MR.S.M.Yoosuf
PROPRIETOR:

A.M.S. TRADERS

H-1,TELDENIYA ROAD,MADAWALA BAZAAR. 0777489188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து விழுந்து கவனிக்கும் குடும்பம் என உறவுகளின் தித்திப்பில் காலம் சுழன்று கொண்டிருந்தது. ஆகாய வெளியில் கும்மென்று பறக்கும் சந்தோஷங்களிடை அவள் நினைவுகளும் இடையிடையே நானிருக்கிறேன் என்பதாக தலைகாட்டிப் போயின.

அவள் ஆரம்பக் கடிதங்கள், நினைவுச் சின்னங்கள் என எல்லாவற்றையும் இவன் மனைவிக்கு காட்டிவிட்டான். அவள் படித்ததுடன் நின்றுவிடாமல் மனம் திறந்து பாராட்டவும் செய்தால் "அற்புதமான பெண், உங்கள் கவிதைகளை அவள் ரசிக்கும் அளவிற்கு ஒருதரம் கூட நான் ரசிக்கவில்லையே! எப்படியெல்லாம் புதிய அர்த்தங்களை கவிதைகளில் காண்கிறாள். அவள் தேடலின் இன்சுவையே உங்கள் கவிதைகளை விஞ்சும் போல் உள்ளதே! இவன் மனைவி முழுக்க முழுக்க அவள் ரசிகையாகி விட்டது வேறு விஷயம்.

திருமணம் முடித்த கையோடு வெளியூர் பயணம், அலுவலகப்பணி என ஏகப்பட்ட வேலைகள் பின்பு நிரந்தரமாகவே கொழும்புக்கு குடி வந்தாயிற்று. அவ்வப்போது வரும் அவள் கடிதங்கள் நின்றுபோய் திடீரென தொலைபேசியில் அவளின் குரல் இழைந்தது. இவனால் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. பிரபஞ்சத்தில் எல்லா இனிய கானங்களையும், தூக்கிச் சாப்பிடும் அளவிற்கு ஒரு இன்ப லாகிரி அந்தக்குரலில் வழிந்து, இவன் காதை நிறைத்தது. அதிலும் இவன் பெயர் கூவி அழைக்கையில் சிலிர்த்துப் போனான். விழிகளில் நீர்தளும்பி, ஆனந்தத்தால் தள்ளாடினான். இவனின் சுகதுக்கங்கள் புதிய வாழ்க்கையின் அந்நியோன்யம் என ஓராயிரம் கேள்விகள் அவளைப் பற்றி எதுவுமே கேட்க முடியாமல் எல்லாமே இவனைப் பற்றியதான விசாரிப்புக்கள்.

வெகு நாட்களாகியும் அந்தக் குரலில் இழைந்த இனிமையான சோகம் இவன் நெஞ்சை வறுத்திக் கொண்டே இருந்தது. அவள் பாசத்தின் பரிதவிப்பும் இழப்பின் கருமையான கண்ணீரும், இவனுள் ஆராவரித்தன. இவன் சற்று நேரம் திகைத்து நின்றான். இன்னும் நான் அவளால் ஆசீர்வாதிக்கப்படுகிறேன் என்ற தைரியம் மனசில் சுழன்று புதுத் தெம்பைத் தந்தது.

இவன் மனைவி கர்ப்பமாயிருந்த ஒரு மாலைப்பொழுது அவளுக்குத் திருமணம் என்ற நற்செய்தி வந்தது. காலம் அவளை மாற்றும் என்ற நம்பிக்கை இவனுள் துளிர்த்தது. காலத்தைவிட துயரங்களை துடைத்தெறியும் சுத்திகரிப்பாளன் யார்? அவள் மாப்பிள்ளையை பார்க்கவே இல்லையாம் என்றும் குடும்பத்தின் வற்புறுத்தலுக்காகவே இந்த திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்ததாகவும் டெலிப்போனில் பேசினாள். விம்மலை அடக்கியபடி "நீங்க எங்க இருந்தாலும் நல்லா இருக்கனும்" என்றவளின் தொடர்பு திடீரென அறுந்துவிட, இரு தினங்களுக்கு முன்பும் டெலிபோன் இவனை மறந்து அவளுக்கொரு வாழ்க்கை இல்லை என்றாள். அப்படி வாழ்வதவிட சாவது மேல் என்றாள் இவன் கவிதைகளும் நினைவும் எந்த உறவு வந்தாலும் இனி அவள் சொந்தம் என்றாள். டெலிபோன் முழுக்க அவள் விம்மலின் கசிவே பிசுபிசுத்தது. எப்படித் துடைப்பது இவன் காதினுள் அவள் குரல்.

இவனுள் வெறுமைபடர்ந்து இருள் கவ்வியது. இனி எக்காலத்திற்கும் அவள் குரலினிமையை கேட்க முடியாமல் போய் விடுமோ? இடைவெளிகள் பல தாண்டி அவள் நழுவிப் போவதான பிரேமை, முன்னெப்போதுமில்லாத ஈர்ப்பும், ஈடுபாடும் அவளின் குரல் கேட்ட நாளிலிருந்து தொட்டுக் கொண்டு ஆட்டுகிறது.

மொழுமொழுவென்ற வயிற்றுடன் மனைவியை பார்க்கையில் உவகை பீறிட்டது. காலத்தின் வேகம் கட்டுக்கடங்காதது. கற்பனையில் கசிந்துருகும் இரகசிய ஊற்றாய் காலம் என்ற கற்பாறையுள், அவள் நினைவுகள், ஊறிக் கொண்டே இருந்தன. ஜல்லிக்கட்டுக்காளாய் அதன் வேகம் சொல்லிமாளாது. மூர்க்கத்தனமான அதன் பாய்ச்சலில் சில நினைவுகள் அடி மனத்திலிருந்து தூர்ந்து போயின. சில நினைவுகள் துலாம்பரமற்று மங்கிக் கிடந்தன. சில நினைவுகள் மட்டும் எதிர்நீச்சலடித்து, வாழ்வுடன் வாழ்வாய், ஊனுடன் ஊனமாய் தொடந்தபடி, துரத்தி வருகின்றன. குழந்தை கிடைத்த புதிதில் தற்காலிகமாக எல்லாம் மறந்து போயிற்று, குழந்தை வளர்ப்பும் அழகும் கருவண்டு விழிகளும் பொக்கை வாய்ச்சிரிப்பில் இந்த



M.R.M .FRUITES
NO.134/C , KANDY ROAD,MADAWALA BAZAAR.
TEL:0770339930


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகையே மறக்கவைத்தன. மனத்தின் சர்வ துன்பங்களையும் துடைத்தெறியும் அமிர்தமாய் மகனின் முகம் உவகை தந்தது.

அது ஒரு விசித்திரமான அனுபவம் நீடுழிகாலம் ஏங்கித்தவித்த வறட்சி மிகு எண்ணங்களில் இன்பச் சுணையின் பிரவாகம் நினைத்திடும் பொழுதெல்லாம் இவனுள்ளே ஒரு புது மனிதன் குதிக்கத் தொடங்கினான். வாழ்வில் ஒரு மகா கனவு நனவாயிற்று.

ஒரு மலைப்பொழுது, அலுவலகத்தி-லிருந்து வந்தவன் தேனீர் பருகிக் கொண்டிருந்தான். குழந்தை அவன் முன் தூக்கத்திலிருந்தது. "இன்றைக்கு ஒரு முக்கியமான டெலிபோன் உங்களுக்கு வந்துச்சி, மகிழ்ச்சியான செய்தியும் தான். ஆனா சொல்ல-மாட்டேன்." என மனைவி பீடிகை போட்டு, கண்ணா மூச்சிக்காட்டினாள். இது அவளுக்கும் இவனுக்கு-மான போர்தான். இவன் யாரெனக் கெஞ்சுவதும், அவள் பிகு பண்ணுவதும், ஈற்றில் வாப்பா பேசினாரே, என கலகலவென்று சிரித்து, இவன் அசடுவழிய நிற்பதை ரசித்திருப்பதும் மனைவியின் வழக்கம். அது போல் இன்றும் இவனை அல்லாட வைக்க பீடிகை போட்டுள்ளாள். எனக் கர்விக் கொண்டு, அப்படியா என்பதுடன் நிறுத்திக் கொண்டான்.

சற்று நேரம் மௌனமாக இருந்தவள். "யாரென்று கேட்கலியே" என தன் கரங்களால் இவன் கழுத்தைச் சுற்றியபடி மேவாயை தோளில் தேய்த்தாள். இவன் சுரத்தில்லாமல் "உன் வாப்பா" என்றான். "இல்லை உம்மா அவவுமில்ல ம் மாமா, அவருமில்ல. அப்ப நீயே சொல்லு" என எரிச்சலுடன் முத்தாய்ப்பு வைத்தான். உங்க ரசிகை எடுத்தா அவளுக்கு பெண்குழந்தை பிறந்திருக்காம். பெயர் கூட உங்கள் ஞாபகப்படுத்தும் ஒரு பெயர் தான், இப்பவே போன் பண்ணி 'விஸ்பண்ணுங்க, போங்க" என விரட்டினாள்.

அவள் சொல்லச்சொல்ல இவன் மனசுக்குள் பனிமழை உடைந்தது. அபூர்வ மலர்கள் எல்லாம் ஒருசேர இதழ் விரித்து மலர்ந்தன. இவனை சூழவும் திடீரென நறுமணக் கதம்பம். அவள் தாயாகிவிட்டாள் என்றே நினைவே இவனை குளிரவைத்தது. முகம் நோக்கிப்பாயாத நினைவுகளின் இம்சைகள் இவன் நெஞ்சில் அதிரத் தொடங்கின.

அவள் குழந்தை மனதை நினைவில் இழுத்தபடி அவளுக்குப் போன் செய்யவென ரிஸிவரை தூக்கினான். ஹோவென்ற இரைச்சலுடன் இவனுள் ஒரு சிற்றாறு குதித்தோடத் தொடங்கியது. இனி அதற்கு யார் தான் அணைபோட முடியும்.

★ ★ ★


*With Best Compliments From*



Mr. Sabry
Building contractor

*Building Construction, Electrical & Carpentry Works & Tiles Fittings*

*Specially Shutter with Concrete and All Block Items*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமியின் ஆன்மா ஆதமை வரவேற்றல்.....

- பண்ணாமத்துக்கவிராயர் -

விழிகளைத் திற
பூமியை, வளிமண்டலததை
நட்சத்திரக் கூட்டங்களை
கிழக்கே உதிக்கும்சூரியனைப்பார்!

பிரிவின் நாட்கள் தரும்
வேதனையைப் பார்!
பதற்றம் வேண்டாம்
நம்பிக்கையும் அச்சமும்
நடத்தும் போட்டியைப் பார்!

மேக மண்டலம்
மலைகள், காற்று,
பாலை வனங்கள்
சமுத்திரங்கள்
வான்முகடு
விண்வெளியின் மௌனம்
யாவும் உனதே.:.

கட்டுப்படுவதற்கு!
கட்டியாள்வதற்கு!
நேற்று வரையும்
தேவதூதர்களின்
திவ்விய உருவம் - உன்
கண்களுக்குக் களிப்பூட்டியது
காலக் கண்ணாடியில் - இன்று
உன்னுருவம் நோக்கு
காலம் புரிந்து கொள்ளும் -
உன் கண்ணோட்டத்தை
தொலைவிலிருந்து உன்னை
நோக்கும்
தாரகைக் கூட்டங்கள்
எல்லை யறியாதது - உன்
எண்ணச் சமுத்திரம்
உம்பர் வானைத்தொடும்
உன் அக்கினிப் பொறிகள்
உன் அகத்தை வளர்
உன் பிரிவின் எல்லைக் கோட்டை
அப்போது நீ
அறிந்து கொள்வாய்

உன் பொறிகளில் மறைந்துள்ளது
சூரிய ஒளி
உன் காலையில் மறைந்துள்ளது
புதியதோர் உலகம்
உன் இதயக்குருதியில் மறைந்துள்ளது
உயர் சுவனம்
களிமண் உருவமே
சளையாத போராட்டம் தரும்
சன்மானத்தைப் பார்!

இருத்தலின் உதயப் பொழுதில்
உன் யாழ் நரம்புகள்
அதிர்வதைப் பார்!
காதல் தேட்டம் கொண்டவனே
இருத்தலின் உதயப் பொழுதில்
இரகசியங்களை அறிந்தவனே
இருத்தலின் உதயப் பொழுதில்
கடின உழைப்பைக் கண்டவனே
உதிரம் வடிப்பவனே
சமாதான விரும்பியே
பிரபஞ்சத்தின் விதிமீது
உன் சித்தம்
சவாரி செய்வதைப் பார்

மூலம் - அல்லாமா இக்பால்


*With Best Compliments From*

M.M. Nawfer
Proprietor

**CITY IRON WORKS**

Grill, Gate, Tovelrack, Steelbed,
Dinning Table, Spray Paints & Etc...



**No. 303, Kandy Road, Madawala Bazaar. Mob: 077 3666817**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி யாருக்காக?

அன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் அந்த அழகான மாலை பொழுதினில் தனது 7 மாடி வீட்டின், மொட்டை மாடியில் வானத்தைப் பார்த்த வண்ணம் தன் உற்ற நண்பன் ஸாஹிட் வந்திருந்ததையும் பொருட்படுத்தாது ஆழ்ந்த சிந்தனைவயப்பட்டிருந்தான். கால்தீன் அச்சிந்தனையை ஸஹிடின் கேள்வி "என்ன மச்சான் கப்பல் கவிழ்ந்தது போல யோசிச்சிக் கொண்டிருக்கிற" கால்தீனை திரும்பி பார்க்க வைத்தது.

ஆம் மச்சான் கப்பல் கவிழ்ந்தாலும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் என் வாழ்க்கையே கடலில் மூழ்கியாச்சி மச்சான் என்று தனது கவலையை ஒரேடியாக கொட்டிவிட. விடயமறியாத ஸஹிட் விபரமறியும் நோக்கில் தனது கேள்விகளை தொடுத்தான். என்ன மச்சான் சொல்ற இல்லடா என்ட மனைவி கரீமா மிகவும் கோபம் கொண்டவளாக என்னுடைய சகவாசமே தேவையில்லை என்று சொல்லிவிட்டு காதிகோட்டில் சந்திப்போம் என்று சொல்லிவிட்டு கோவித்துக் கொண்டு பிள்ளைகளையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு ஊருக்குப் போயிட்டா ஒரு கிழமையாகியும் எந்த தகவலுமில்ல மச்சான் போன் பண்ணினாலும் பதிலெதுமில்ல. பிள்ளைகளை நினைக்க நினைக்க மிகவும் வேதனையாகவுள்ளது மச்சான் பிள்ளைகளை பார்க்காத உலகம் எனக்கு தேவையில்லை மச்சான் என்று புலம்பியவனாக அழத் துவங்கிவிட்டான்.

எனவே கால்தீனை ஒருவாறு சமாதானப்படுத்தி விசாரித்த போது அவனிடம் திருமண பந்தத்தில் இணைந்து புதுதிலிருந்தே அடிக்கடி இருவருக்குமிடையில் ஊடல்கள் அது சண்டையாக மாறுவதும் பின்னர் இருவரும் சமாதானமாவதுமாகத் தான் வாழ்க்கை ஓடியதாகவும் ஆனால் இம்முறை சண்டை மிகவும் அகோரமாகவே என்னை விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள். நான் அவ திரும்பி வருவா என்று நம்பமாட்டேன். எனவே எனக்கு என் பிள்ளைகளைப் பெற்றுத்தர ஏதாவது செய்ய முடியுமா என்று பார் மச்சான் என அழத் தொடங்கிவிட்டான்.

எனவே இருவரும் உடனடியாக சட்டத்தரணி மரீக்கார் அவர்களை சந்தித்த போது பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பான பின்வருமாறு விளக்கினார். இலங்கையில் பொதுச்சட்டத்தைப் பொறுத்த வரையில் பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பாக தந்தைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் விதிவிலக்கான சந்தர்ப்பங்களும் இருக்கின்றன.

ஆனால் இலங்கையில் வாழும் முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம் சட்டமே ஏற்புடையதாகும். அந்த வகையில் முஸ்லிம் சட்டத்தைப் பொறுத்த வரையில் பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பாக தாய்க்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. "ஒரு நாள் ஒரு தாய் நபி ஸல் அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே இது எனது பிள்ளை என் கருவின் பழம் எனது மார்பை உருஞ்சி குடித்தவள் The fruit of my womb, cherished in my bosom and suckled at my breast" ஆனால் இப்பிள்ளையின் தந்தையோ பிள்ளையை அபகரித்துச் செல்ல முற்படுகின்றார் நபி ஸல் அவர்கள் பதிலளிக்கையில் பிள்ளையின் பாதுகாப்பு தாய்க்கே சொந்தம் என்றார் ஏனெனில் பிள்ளைகள் மீது கவனம் எடுப்பது மற்றும் கல்வியூட்டுவது மட்டுமன்றி பிள்ளைகளின் சிந்தனைகளை வளர்ப்பதுவே பாரியவொரு விடயமாகவுள்ளதால் அதனை சரிவர நிறைவேற்ற தாயைத் தவிர எவராலும் அதனைச் சாதிக்க முடியாது எனவே பிள்ளைகளின் பாதுகாப்புக்குச் சொந்தக்காரி தாயைத் தவிர வேறு எவரும் கிடையாது. ஆனால் தாயானவள் மீண்டுமொரு மறுமணத்தைச் செய்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் இந்நிலைமை வேறுபடுவதைக் காணலாம்.

அதாவது தாய் பிள்ளைகளுக்கு அல்லது தந்தையின் அல்லது தாயின் குடும்பத்துக்குப் புதியவர் (Stranger) ஒருவரை மறுமணம் செய்து கொள்ளும் சந்தர்ப்பத்தில் இந்த முன்னுரிமை தாயை விட்டகழ்வதை காணலாம். அவ்வாறான

fancy park
look good. feel good.
Islamic Books · Fancy Goods · Stationery · Communication
Phone Center · Photo Copy · Laminating
No. 89D, Kandy Road, Madawala Bazaar. Tel: 0812 476880 / 077 3876566. Fax: 0812 475777
E mail :fancy.park@gmail.com
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் நலன் கருதி அப்பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பான முன்னுரிமையை தந்தை பெற்றுக் கொள்கின்றார்.

அத்தோடு தாயின் பாதுகாப்பானது பிள்ளைகளின் பால் அதாவது ஆண் பிள்ளை, பெண் பிள்ளை என்று வித்தியாசப்படும் சந்தர்ப்பங்களில் வித்தியாசப்படுவதைக் காணலாம்.

**பெண் பிள்ளையின் பாதுகாப்பு**

ஸாபி மாலிகி மற்றும் ஹம்பலி மத்ஹப்களின் பிரகாரம் பெண்பிள்ளைகளின் பாதுகாப்பு அப் பிள்ளை திருமணம் முடிக்கும் அல்லது திருமணம் முடித்துக் கொடுக்கும் வரை தாயின் பாதுகாப்பிலேயே இருக்க வேண்டும் ஏனெனில் ஒரு சிறந்த பெண்ணை உருவாக்குவதற்கான நல்ல பண்புகளை பிள்ளைக்கு படித்துக் கொடுக்க தகுதியானவள் தாய் மாத்திரமே.

ஆனால் ஹனபி மத்ஹப்களின் பிரகாரம் பெண்பிள்ளைகளின் பாதுகாப்பு தாயிற்குள்ள முன்னுரிமை பெண்பிள்ளை பருவ வயதை அடைவதன் நிமிர்த்தம் முற்றுப் பெறுகின்றது என நீதிபதி அமீர் அலி 'Hanifi Jurists hold that the mother's custody ends when the child attains puberty" (Mohammadan Law Vol II) என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்.

இதற்கான காரணத்தை தெளிவுபடுத்தும் போது

**ஆண் பிள்ளையாயின்**

ஒரு ஆண் பிள்ளை தனது இயற்கையான தேவையான உண்ணல் பருகல் மற்றும் தன்னை சுயமாக சுத்தம் செய்து கொள்ள முடியும் வயதை அடையும் போது தாயின் பாதுகாப்பிலிருந்து விடுபடுகின்றான். இவ்வயதை 7 வயதாக அறிஞர்கள் கணக்கிட்டுள்ளனர். எனவே ஒரு ஆண் பிள்ளை 7 வயதை பூர்த்தியாக்கும் போது அப்பிள்ளை தனது பாதுகாப்பை தீர்மானிக்கும் தகுதியைப் பெற்றுக் கொள்கின்றது. ஆகவே ஒரு பெண்ணின் பாதுகாப்பிலிருந்து விடுபடுகின்றது என்பது தந்தைக்கு முன்னுரிமை வழங்குவதென்பது அர்த்தமல்ல. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அப்பிள்ளையின் பாதுகாப்பை தாய் அல்லது தந்தை பெற்றுக்கொள்ள தகுதியைப் பெறுகின்றனர். ஆயினும் அப்பிள்ளை தனது பாதுகாவலர் யார் என்பதைத் தீர்மானிக்கும் உரிமையைப் பெறுகின்றார்.

- சட்டத்தரணி பைஸர் அலி -

★★★


*With Best Compliments From*

# RAZY MOTORS



MITSUBISHI · TATA · Mahindra · NISSAN · ISUZU · ISUZU

NO. 50, KANDY ROAD MADAWALA BAZAAR. TEL 0812 475 502, 0776 629 729


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from...*

# AN-NOOR INVESTMENT LIMITED AND FINANCIAL SOLUTION

*The Islamic Investment System*



✡ An-Noor Baithul Mal Fund
அந் நூர் பைதுல் மால் நிதியம்

✡ தமது அவசர தேவைகளுக்காக வங்கியை நாடும் எமது சகோதரர்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது ஊரின் வட்டியுடன் கூடிய வங்கியை நாடும் அனைவரும் பாதுகாக்கப்படுவீர்கள்

இதற்காக தங்களது உதவியை எதிர்பாக்கின்றோம்

| | |
|---|---|
| நன்மை | நரகவிடுதலை |
| பரகத் | நோய் நிவாரணி |
| திருப்தி | அல்லாஹ்வின் அன்பு |

## ஒற்றுமையே எமது வெற்றி

No.44, Kandy Road, Madawala Bazaar,
Kandy, Sri Lanka.
Tel: +94 81-5623235
e-mail : annoor001@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1937 இல் பிறந்த சீதாகாந்த மஹாபாத்ரா ஒரு இந்தியக் கவிஞர். கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் சம்பந்தமாகக் கற்றவர். அவரது கற்கைநெறி இந்தியாவின் ஆதிவாசிகள் அவர்களது குலச் சம்பிரதாயங்கள் பற்றியெல்லாம் அறிய நிறைய உதவிற்று. அக்கோத்திரத்தார் பாடிய வாய்மொழிமூலக் கவிதைகள், பாட்டுகள் போன்றவற்றைத் தொகுத்தும், ஆய்வு செய்தும் எட்டு நூல்கள் வெளியிட்டிருக்கிறார். பல விருதுகளை வென்றவர். ஜனாதிபதி விருது, சாகித்திய அகாடமி விருது, ஒரிசா அகாடமி விருது, சோவியத் நாட்டின் நேரு விருது என்பன அவற்றுள் சிலவாகும். ஹவாய் பல்கலைக்கழகத்தில் சர்வதேச கவிஞர்கள் மண்டலத்திலும் அங்கம் வகிப்பவர்.

# சீதாகாந்த மஹாபாத்ரா

தன் தந்தையோடு பாட்டியின் மரணவீட்டுக்கு வருகின்ற ஒரு சிறுவனது குரலாக ஒலிக்கிறது இக்கவிதை. தொலைதூர ஊரிலிருந்து பாட்டி வாழ்ந்த ஒரு கஷ்டப் பிரதேசக் கிராமத்தை பல இன்னல்களுக்கு மத்தியில் மகன் வந்தடைகிறான். எனினும், பாட்டியின் முகத்தைப் பாராமலேயே மரணக்கிரியைகள் நடந்தேகியிருக்கிறபடியால், அப்புதல்வனது அழுகை கப்பிய மனநிலையைக் கண்ணெதிரேக் கொணர்ந்து இக்கவிதையானது வாசகர் மனதை பெரும் வதை செய்கிறது. இலங்கையில் உயர்தரத்தில் ஆங்கிலமொழிப் பாடத்திட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்ட ஒரு கவிதையும் ஆகும் இது.

## பாட்டி

தீப்பெட்டியில் தீக்குசிகள் போல
பயணிகளை அடைத்திருந்த பேருந்து
நண்டுகளும் இறந்த நத்தைகளும்
நிரம்பிக்கிடந்த பயிர்நிலங்களிடையே
ஆற்றுநீர் குறுக்காய் ஓடும்
குன்றும் குழியுமாய் நீண்டிருந்த
சமதளமற்ற பாதையிற் பயணித்து
சிடுசிடுத்து தூறல்தூறலாய்
பொழிகின்ற மழையினூடு
பெரும் பிரயத்தனத்தில்
நாம் அங்கே வந்தடைய
ஏலவே அந்திப் பொழுதாகியுமாயிற்று

இரவை அண்மிக்கிற மாதிரி
அவள் அடிக்கடி சொல்வாள்
“மரணத்தின் கடவுள் கூட போராடி
சுணங்கித்தான் வந்தடைவான்
நமது இந்தக் கிராமத்தே”
எல்லாமும் முந்து போயாயிற்று
ரொம்பத்தான் தாமதித்தும் விட்டது
சவப்பெட்டியைச் சுமந்து செல்வோர்
ஆயத்தங்கள் அனைத்தையும்
செய்தாகியாயிற்று
நீண்ட அவளது இரண்டாம் பயணம்
ஏறத்தாழ ஆரம்பிக்கப்படப்போகின்றது
முன்னம் ஒரு தடவை அவளது பயணம்
நிகழ்ந்து விட்டிருந்தது

புளியமரத்து நிறத்தில் ஆடையணிந்து
மணக்கோலத்தில் ஒரு நாணம்மிகு பெண்ணாய்
மாட்டு வண்டியிலமர்ந்து
தன் தந்தையின் இல்லத்திலிருந்து
நமதுக்காய் நிகழ்ந்திருந்தது
அவள்தன் முதற்பயணம்
“கடலால் கழுவித்துடைக்கப்பட்ட
பாதி விழுங்கப்பட்ட கரையாக இருக்கிறேன்
முடிந்தால்வந்து போ என் மகனே!

சிலவேளை உன்னைப் பார்க்காமலேயே
நான் போய்விடலாம் யாரறிவார்?
வெள்ளநீரில் இம்மரம்
நிலைக்க முடியாமற் தட்டுத்தடுமாறுகிறது




**New Pearl Jewellers**
(மடவளையின் முத்து தங்க நகையின் தனிச்சொத்து)
எமது புதிய கிளை வாடிக்கையாளர் நலன் கருதி
Madawla City Center இல் திறந்துவைக்கப்பட்டுள்ளது
இன்றே விஜயம் செய்யுங்கள்...


Madawala City Center
No. 23, Kandy Road, Madawala Bazaar.(Opp Madawala Pharmacy)
Mob: 0777 787303


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்திப்பினதும் கூக்குரலினதும்
தேவைப்பாடு இருக்கையில்
இடைபுகும் பேய்க்காற்றோ
அனைத்தையும் துடைத்துக்கழுவிச் செல்கிறது

உள்ளறையில் நான் அந்த
வெண்போர்வையைத் தூக்கியெடுத்தே
விசும்பினைப்போலும் விரிந்திருந்த
பூமிபோலும் மௌனித்துக்கிடந்த
சரித்திரத்தின் வதனத்துள் எட்டிப்பார்த்தேன்
மறுபடி ஒருமுறை
மௌனம் ஒரு நீள் பெருமூச்சை
வெளியேற்றிற்று

இரவில் சில்வண்டுகள் பாட
மூங்கில் காட்டுக்குள் மின்மினிப்பூச்சிகள்
மின்னிச் சிறகடித்தபடியிருக்கின்றன.
ஆகாயத்திலேயும் ஒருசில தாரகைகள்
பளிச்சிட்டுக் கொண்டிருக்கின்றன.
மரணவீட்டு உணவும் பறிமாறப்பட்டாகி
வந்தோர் புறப்பட்டுப் போயும் ஆகிவிட்டது.
சாணம் தெளித்துக் கழுவியான சுவர்களின் மீது
நிழல்கள் நடமிடுகின்றன.
சுவருக்குத் தன் முகம் திருப்பி,
தன் முதுகுபுறத்தை எமக்குக்
காட்டியபடி நின்று அப்பா அழுதார்
அவர் அழுவதை நான் பார்த்த
முதற்தடவை அதுவேயாகும்
அவரை ஆற்றுப்படுத்த
நான் என்னதான் இயம்பிட முடியும்?
வீட்டைவிட்டு வெளியேறிப்போய் வெறுமனே
பாட்டி ஒரு தாரகையாய் மாறிவிட்ட
வானத்தைப் பார்க்கிறேன்.

அந்நாளில் நான்
முதற் தடவையாக உணர்ந்தேன்,
இந்த வாழ்க்கையின்
ஒவ்வொரு அழுகிற நடவடிக்கையும்
மறைவான முறையில் ரகசியமாய்
எங்ஙனம் நிகழ்த்தப்படுகிறது என்பதனை

ஆங்கிலத்தில் : சீதாகாந்த் மஹாபாத்ரா
தமிழில் : கெகிறாவ ஸுலைஹா

*With Best Compliments From*

M.A.M.RISHAD
(PROPRIETOR)



# AL-MADINIAN

**Wholesale & Retail Dealers in all Kinds of Abayas**
**Scalf, Shocks, Gloves, Abaya Shoes,Abaya Showl**
**Hand Bags, Abaya Pins ,Face Cover**

**No. 160/A, Kandy Road, Madawala Bazaar.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# KWIK FIT MOTORES

**Dealers in Two Wheeler, Three Wheeler Spare Parts and Repairing Service**








**No. 127, Katugastota Road,**
**Madawala Bazaar, Kandy.**
**Tel: 081 2054460**
**E-mail: kwikfit5400@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சிறு சஞ்சிகைகள்

சர்மிளா தேவி

மலையகம் என்ற கருத்து பதம் இன்று எல்லோ-ராலும் உச்சரிக்கப்படுகின்றது. இப்பதம் மிக அண்மைக் காலத்தில் தான் வழக்கத்துக்கு வந்தது. சி.வி. வேலுப்பிள்ளை அவர்களே முதன் முதலில் 'மலைநாடு' என்று சுட்டுகின்றார். இந்திய தமிழர்கள் பரந்து வாழும் பிரதேசங்கள் மலைநாடு என்றே பரவலாக அழைக்கப்படுகின்றது.

புவியல் எல்லைகளைக் கடந்து ஒரு சமூகத்தை காட்டுவதாக 'மலையகம்' அமைகிறது. இம்மக்களு-க்கு சுமார் 160 வருட கால வரலாறும், சமூக பொருளாதார பின்னணியும் உண்டு. மலையகம் வெறும் புவியலை அடிப்படையாகக் கொண்டு கற்பிப்பதன்று தனித்துவமான பெருந்தோட்ட பயிர்ச் செய்கைகளையும் அதன் பக்க விளைவுகளை சிறு முதலாளித்துவ சுரண்டல்களையும் வெளிப்படுத்தும் சமூக அமைப்பாக விளங்குகிறது.

மலையக மக்களின் அரசியல் பொருளாதாரம் கலை கலாச்சாரம் பண்பாட்டு விடயங்களை பிரதிபலிப்பவையாக மலையகச் சஞ்சிகைகள் அமைகின்றன. சஞ்சிகைகள் என்பது நாம் கருதுகின்ற விடயங்களை வெளிக் கொணரும் ஊடகமாக இருக்கின்றது. பல்வேறு விடயங்களை தாங்கி, குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை வெளிவருவனவாக உள்ளது. நாளிதழ்கள் தவிர்ந்த சிலவற்றை நாம் சிறுசஞ்சிகைகளாக இனம் காண்கிறோம்.

இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மாதக்-கடைசியில் ஆண்டுக் கொருமுறை வெளி வருகின்றதாகவோ அல்லது பலவருடங்களுக்கு ஒரு முறை வருவதை சஞ்சிகைகள் என்கிறோம். சஞ்சி-கைகள் இரண்டு வகையினதாக வெளிவருகின்றது.

01. நிறுவன ரீதியான இலாப நோக்குடன் திட்டமிட்டு வெளியிடப்படுவன.

02. தனிமனித ஆர்வ மேலீட்டினாலும், சிறு குழுக்-களின் ஆர்வத்தினாலும் வெளிவருகின்றன.

இவைகள் குறிப்பிட்ட ஒரு விடயத்தை தாக்கியனவாகவே முகிழ்கின்றன.

மலையகத்திலிருந்து வெளிவருகின்ற சஞ்சிகைகள் இம்மக்களின் பிரச்சினைகளை பிரதிபலிப்பனவாகவும் அவர்களின் தனித்துவத்தை மேன்மைப்படுத்துவதாகவும் வெளிவருகின்றமையை அவதானிக்கலாம். பிரதேச ரீதியாக முகிழ்கின்ற சஞ்சிகைகள் ஈழத்து இலக்கியத்திற்கு வளமான பங்களிப்பை வழங்கி வருகின்றது. சிறு சஞ்சிகைகள் ஆத்மார்த்த குரலாக பிரதிபலிப்பதோடு பிரதேசத்தின் மொழிப் பற்றிய சிந்தனை வளர்ச்சிக்கும் தம்மால் இயன்ற பங்களிப்பினை ஆற்றி வருகின்றன.

மலையகத்து சஞ்சிகைகள் மலையகத்து பிற பிரதேசத் சஞ்சிகைகள் என வரையறுப்பது கடினமாக உள்ளது. மலையகத்திலிருந்து வெளிவருபவற்றை மலையக சஞ்சிகை என்பதா.... அல்லது மலையகம் பூராதழுவி வெளிவருகின்ற சஞ்சிகைகளை மலையக சஞ்சிகை என்பதா... அல்லது பிற பிரதேசத்திலிருந்து மலையக பிரச்சினைகளை தாங்கி வெளிவருவன-வற்றை மலையக சஞ்சிகை என்பதா?

பிற பிரதேசத்திலிருந்து வெளிவருகின்ற சஞ்சிகைகள் மலையக பிரச்சினைகளுக்கு எவ்வாறு முன்னுரிமை வழங்குகின்றது. மலையகத்தினுள்ளே-யிருந்து வரும் சஞ்சிகைகள் மலையகத்து பிரச்சினை களுக்கு முன்னுரிமை தாங்கி வெளிவருகின்றனவா... என்பன பிரச்சினைக்குரிய விடயங்களாக பாகுப்பாய்வதில் சிரமங்கள் காட்டி நிற்கின்றன.

மலையக சஞ்சிகையை எவ்வாறு வரையறுப்பது. மலையக விடயங்களை அதிகமதிகம் தாங்கி வருகின்ற சஞ்சிகைகளே மலையக சஞ்சிகை என்பது எனது கணிப்பீடாகும். மலையக


With Best Compliments From

NEW HOTEL DE AFRA

feel the the taste of goodness

• Special Buriyani • Sawarma • Fried Rice • Palandy • Short Eats
• String Hoppers Buriyani • Nan Rotty • Cheese Kottu • Chilly Chicken

NO 89/E MADAWALA BAZAAR .0812060260,0779452611,077 6115695




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசத்திற்கென்று சஞ்சிகைகள் வரவேண்டிய அவசியமென்ன. இலங்கையை பொருத்தமட்டில் மலையக மக்களின் பிரச்சினைகளை புதுமைப்பித்தன் 'துன்பக்கேணி' யிலும் பாரதியார்க் கூட 'சிங்களத் தீவுக்கு பாலம் அமைப்போம்' கரும்புத் தோட்டத்தில் கவிதை பிலிப்பின் மக்களது வேதனையை கூறுவதாக இருப்பினும், சொல்லப்படுகின்ற துன்பங்களை பொருத்தமட்டில், மலையகத்தையும் நினைத்துதான் பாடினாரோ என்ற ஐயம் எம்மில் பரவலாக தொக்கி நிற்கின்றது.

மலையகத்தை தவிர்ந்த பல இலக்கிய வாதிகள். தமது படைப்புகளை இம்மண்ணுக்கு சமர்பணம் செய்துள்ளனர். ஆசை முருகானந்தம், நந்தி, அ.ந. கந்தசாமி, தி. ஞானசேகரன் போன்றவர்கள் மலையக பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டு கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் வரைந்துள்ளனர். இவைகள் மற்றையப் பிரதேசத்து பத்திரிகை - சஞ்சிகைகளில் பரவலாக வெளிவருகின்றன. ஆனால் எங்களது தேவைகளை பூர்த்தி செய்ய கூடியதாக இவை வெளிவருவதில்லை. இவ்வெழுத்-தாளர்கள் காட்டுகின்ற பிரச்சினைகளைவிட, இம்மக்களுக்கு நிறைய பிரச்சினைகள் உள்ளது.

ஏதாவது ஒரு மூலையில் இல்லாவிட்டால் ஒரு பகுதியை மலையகத்திற்கென்று ஒதுக்கி அதில் மலையகம் தொடர்பான விடயங்களை வெளியிட்டு-விடுவதன் மூலம் எமது பிரச்சினைகளை தீர்த்து கொள்ள முடியாது. எங்களது பிரச்சினைகள் என்று வெளியுலகத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றதோ.... அன்று எம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய அடித்தளமாவது இடப்படும்.

எங்களுடைய பிரச்சினைகள் எங்களுக்கு மத்தியில் இருக்கின்ற வரை அது வெளியுலகத்திற்கு தெரியவாய்ப்பின்றி போவதுடன் எமது சந்ததியினருக்-கும் தெரிய வாய்ப்பின்றி போகின்றது. ஆகவே இத் தேவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு மலையகத்தில் சஞ்சிகைகள் தோற்றமும் வளர்ச்சி-யையும் எவ்வாறு வகைப்படுத்துவது அல்லது, வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்துவது.

1918 இல் மலையகத்திலிருந்து இதழ்கள் வெளிவரத் தொடங்கின. முத்து கிருஷ்ணன் வெளி-யிட்ட 'ஜனமித்திரன்' பத்திரிகையே மலையகத்தில் தோன்றிய முதலாவது பத்திரிகையாகும். அதாவது மலையக பிரச்சினைகளை முழுமையாக தாங்கி வெளிவந்திருந்தன. இதன் பிறகு நிறையப் பத்திரிகை கள் வெளிவந்திருப்பினும் அவைகள் சஞ்சிகை என்ற தரத்தை அடையவில்லை. 1918 - 1930 வரையில் தேசபிமானி, தேசநேசன், இந்தியன், லங்காவிடன், தொழிலாளி, தேசதொண்டன், சத்தியமித்ரன், தேச ஊழியன், சமத்துவ ஊழியன், தொழிலாளர் தோழன் போன்ற தொடர்ச்சியாக நிறைய சஞ்சிகைகள் வெளிவரத் தொடங்கின.

1930 ற்கு பின்னர் இந்தியாவில் சிறுகதைக்-கென்றே மணிக்கொடி சஞ்சிகை வெளிவரத் தொடங்கியது. அதன் தாக்கத்தினால் இலங்கை-யிலும் 1940 இல் 'மறுமலர்ச்சி' எனும் சஞ்சிகையை வரதர், நாவற்குழியூர் நடராசன், ஆசை முருகானந்தம் போன்றோர் வெளியிட்டனர்.

1946 இல் கே. கணேசும் - ராமநாதன் அவர்களும் இணைந்து 'பாரதி' என்ற சஞ்சிகையை வெளியிட்டனர். பொதுவுடமை கொள்கையை மிகுதியாக தாங்கியவாறு சிறிது காலமே வெளிவந்தது இச்சஞ்சிகை. இதன் பிறகு நிறைய சஞ்சிகைகள் வெளிவந்தாலும், 1960 இற்குப் பிறகு சஞ்சிகைத் துறையில் புதிய உத்வேகம் உருவானது.

க.ப. சிவமும், ஈழக்குமாரும் இணைந்து மலைமுரசு சஞ்சிகை வெளியிட்டனர். இதில் இன்றைய பிரபலமான எழுத்தாளர்களான தெளிவத்தை ஜோசப், சாரல் நாடன் போன்றவர்கள் அறிமுகமானார்கள். பாரதி சஞ்சிகைக்குப் பின் தோன்றிய மலைமுரசு மலையகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி நகர்த்திச் சென்றது. இதன் பின்னர் மலைதேவி, ஈழத்தென்றல், மலைக்குருவி, தீப்பொறி, மலைமகள், விடிவு, பூங்குன்றம், அம்மா, அஞ்சலி... தொடரும் சஞ்சிகையை இவ்வாறு பட்டியலிட்டுச் செல்லலாம்.

1980 களுக்கு பின்னர் வெளிவந்த சஞ்சிகைகளில் மிகவும் குறிப்பிடக் கூடியது. 'தீர்த்தக்கரை' மலையக சஞ்சிகை வளர்ச்சியை ஆராயும் எவரும்




U.R.M.TRADERS
GROCERIES
No.44 G, MAVILMADE ROAD, KANDY
Tel : 0779 230193


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தக்கரை தவிர்ந்து ஆராய இயலாத அளவுக்கு மிகவும் காத்திரமானதாக வெளிவந்தது.

எமது சஞ்சிகைகள் இந்திய தரத்துக்கு தரமானதாக இல்லையெனினும், தீர்த்தக்கரை தொடர்ந்து வெளிவந்திருப்பின் ஓரளவு இந்திய சஞ்சிகைகளுக்கு நிகரானதாக வெளிவந்திருக்கும் சிறு சஞ்சிகைகளுக்கே உரிய பிரச்சினைகள் காரணமாக ஐந்து இதழுடன் தீர்த்தக்கரை நின்று போனது துரதிஷ்டவசமானது.

இதன் பிறகு உக்குவளையிலிருந்து கவிப்ரவாகம், ப்ரவாகமும், தற்போது தொடர்ந்தும் வெளிவருகின்ற கண்டியிலிருந்து ஞானம் என்று மலையகத்திலிருந்து நிறைய சஞ்சிகைகள் வெளிவந்தாலும், வியாபார நோக்கம் கருதாது ஏதோ ஓர் கருத்தியல் நிலையில் நின்று கொண்டு மலையக சஞ்சிகைகள் வெளிவர வேண்டும். ஆனால் இன்று வெளிவருகின்ற சஞ்சிகைகள் பல்வேறு காரணங்களுக்காகவும் வியாபாரத்தையும் மையமாக கொண்டு வெளிவருகின்ற போது, தவிர்க்க இயலாதவாறு, சிற்சில அம்சங்களுக்கு தங்களது தேவை கருதி இடம்பெற வேண்டியதால் மலையக சஞ்சிகையின் காத்திரத்தன்மை குறைந்து வருகிறது. கூடிச்செல்லுகின்ற விதியல்லாமல் குறைந்து செல்கின்ற ஓர் நிலையை நாம் அவதானிக்கலாம்.

மலையகத்திலிருந்து வெளிவருகின்ற எல்லாச் சஞ்சிகைகளுக்கும் இவ்விடயம் பொருந்துகிறது. ஏனெனில் நம் பிரதேச அல்லது பிற நாடுகளிலிருந்தோ வெளிவரும் சஞ்சிகைகளுடன் ஒப்பீட்டு பார்க்கின்ற பொழுது நாம் மிகவும் பின்தங்கியுள்ள நிலையை அவதானிக்க முடியும். அந்த வகையில் சில மாற்றங்கள், காலசூழ்நிலையின் காரணமாக மலையக சஞ்சிகைகள் தடம்மாறி போய்விட்டதையும் நாம் அவதானிக்க முடிகின்றது.

இந்நிலை மாற வேண்டும். மலையகம் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. எங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யகூடிய வசதிகள் வளங்கள் இருக்கின்றன. ஆகவே நாம் கருத்தியல் தளத்தில் நின்று கொண்டு எங்களுடைய ஆத்மீக குரலாக, எமது பிரச்சினைகளை வெளிபடுத்துகின்ற போது நிச்சயமாக அது தரமான சஞ்சிகையாக வெளிவரும். ஏனைய சஞ்சிகைகள் போன்று மலையக சஞ்சிகைகளும் சிகரங்களைத் தொடும். அது மட்டுமன்றி பேராசிரியர் கைலாசபதி கூறியது போன்று "ஈழத்து இலக்கியத்திற்கும் மலையக இலக்கியம் என்னும் வகையில் மலையக சஞ்சிகை புது இரத்தம் பாய்ச்சும்"

★ ★ ★





# S.M.HARDWARE

WHOLE SALE & RETAIL DEALERS IN GENERAL HARDWARE, ELECTRICAL ITEMS, PVC PIPES, FITTINGS & BUILDING MATERIALS

49 KANDY ROAD MADAWALA BAZAAR. TEL: 0775 144597, 0773563073


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சூழ்ச்சி

- அம்ரிதன் -

நிர்வாணமாக படைக்கப்பட்ட நாம் வர்ணங்களால் நிறமாக்கப்பட்டோம். பதுங்குவதற்-கும் ஓணான்களாக நிறங்களை சூழலுக்கேற்ப மாற்றிக் கொள்வதற்கும் சமூகம் நம்மை பக்குவப்படுத்தியிருந்தது. பச்சை, சிவப்பு நம்மை ஆக்கிரமித்து கனவுலகில் ஆதிக்கம் கொள்ளும். ஆள்வதற்கும், ஆளப்படுத்துவதற்கும், புள்ளடி மனிதர்களாக நம்மை அடிமைப்படுத்தினர். அவர்களின் பேச்சுக்களையும் அறிக்கைகளையும், சிந்தனைகளையும் உள்வாங்கி எதிர்ப்பின்றி கிரகிக்கக் கூடியவர்களாக நம்மை செதுக்கியிருக்-கிறார்கள் எனலாம்.

திரும்பும் திசைதோறும் கட்சிகளும் கட்சிக் கொடிகளும் கட்சித் தலைவர்களின் கட்டவுட்களும் நம்மைப் பார்த்து இளிப்பதான விளம்பர பதாதைகள் நிறப்பிரிகைகளும் இலட்சினையை வடிவமைத்து தமக்கான தமத்தினத்திற்கான விடிவெள்ளியாக நமது மனங்களில் பொய்மைக-ளையும் விம்பங்களையும் தோற்றுவித்து அவர்கள் அவர்களின் அடிவருடிகளும் சொகுசாக வாழ்வ தற்கு நம்மை நம் சமூகத்தை அடிமையாக்கியு-ள்ளனர். அவர்களின் அரசியல் சதுரங்கத்தில் பகடைக்காய்களாக ஆண்டாண்டு காலம் நகர்த்தப் -பட்டிருக்கிறோம். இருந்தும் விடா முயற்சியும் தோற்றுப் போய் விடுவோம் என்றுணரும் தோல்வியின் கடைசி நகர்வுகளை மாத்திரம் நமது மூலதனமாக வர்ணங்களின் இலட்சினைகளின் நிழல்களிலும் தவிர்க்க முடியாத நமது பயணங்கள் தொடரத்தான் செய்கின்றன.

எங்களது காத்திருப்பும் எமது மௌனங்களும் அவர்களின் கர்வத்தின் அகம்பாவத்தின் சர்வதிகாரத்தின் வெற்றிகளாக்கி நம்மை அலைக்கழிக்க வைத்தனர். இத்தருணத்தில் எனது சிந்தனை தடைப்பட்டது. வலது கையை ஈவிரக்கிமில்லாமல் ஒரு நுளம்பு கடித்திருந்தது. அதை நான் அடித்த சத்தத்தில் எல்லோரும் ஒருமுறை திரும்பி பார்த்தனர். பின் ஒரு தவம் போல் மௌனமாக மந்திரியும் அவர் மகனும் வரும்வரை இப்போது காத்திருப்பதைப் போல மௌனமாக பலரும். சிலர் சத்தத்துடன் கதைத்துக் கொண்டிருந்தனர். சுவர்களில் விதவிதமான போட்டோக்களில் மந்திரியானவர் ரெடிமேட் புன்னகையுடனும் செயற்கைத் தன உடல் அசைவுகளுடன் பலவிதமான டிசைன்களில் எங்கும் போட்டோக்கள் தொங்கின. எனக்கு அலுப்பாகவும், வெறுப்பாகவும் இருந்தது. இன்னும் எத்தனை மணித்தியாலத்திற்கு இவர்களின்

ஆபிசில் காத்திருப்பது?
அவர்கள் எப்போது வருவார்கள்?
வந்து கொண்டிருப்பதாக அவரின் உதவியாளர் சற்று முன் கூறிவிட்டு சென்றார். உண்மையாகவா?
அப்படியே இருப்பதாக நம்புவோம்.
இப்படி காத்திருப்பது எமக்கு தேவையா?

நம்மட மற்றைய சோளிகளை விட்டு விட்டு இவர்களுக்காகவே காத்திருப்பது

இது பழக்கப்பட்டவொன்று புதிதாகவல்ல. பழமைத்தொட்டோ நாங்கள் அவர்களை நாடிச் செல்வதும், அவர்கள் எங்களை தேடிவருவதும், நமக்குள் உள்வவாங்கப்பட்ட ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் போன்றதே.

எங்களது கோரிக்கையென்ன? வருகிற தேர்தலில் அமைச்சரின் மகனை எங்கள் ஊரார் ஆதரிப்பதாக நாம் சொல்வதும் எங்கள் கிராமத்தின் தேவைகளை பூர்த்தி செய்து தருவதோடு, படித்த இளைஞர் யுவதிகளுக்கு அரச தனியார் வேலை வாய்ப்புகளை கோருவதும். நிறைவேற்றித் தருவாரா? நம்புவோம். இப்படி நம்பித்தானே சோர்ந்து போகாமல் தலைமுடி விழுந்தும். வாயில் பற்கள் கழன்று கிழடு


MADAWALA Wood Workers



MADAWALA Wood Workers

Dealers in All kinds of Timbers & Woodworks

292/A, 6th Mile Post,Kandy Road, Madawala Bazaar.Mob: 0777 689857

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிபோயும். வெள்ளையும் சொல்லையுமாக எமக்கு வழிகாட்டிகளாக எமது கிராமத்தின் முதியவர்கள் தமக்கு பின்னாலிலுள்ள ஆசனங்களை சூடாக்கி எமக்கு உறுதுணையாக வந்திருக்கிறார்கள். அவர்களால் முடியாமற் போனதை எங்களால் சாதித்துவிட முடியுமா? இது புதிய தலைமுறை புதிய தலைமைத்துவம், புதியவைகளை சிந்திப்பதும் அதனை நடைமுறைப்படுத்தவும் இளைய தலைவர்கள் முயற்சித்து வெல்ல வேண்டும். சாதிக்க வேண்டும் என்கிற வெறி அந்த இளைஞர் தலைவனுக்குள்ளும் இருக்கும். அதுவே நமக்கு சாதகமாக அமையலாம்.

நமக்கு முன்னால் அங்குமிங்கும் அதிகாரத் தோரணையுடன் ஏவல்களையும் அதிகாரங்களையும் கக்கும் இந்த முதியவர்கள் யார்? இவர்கள் தான் எமது வழிகாட்டியான சமூகத் தொண்டர்கள். இவர்கள் நாளைய சமூகத்தை விருத்தி செய்வதற்கான திட்டங்களை செயற்படுத்தி நமக்கான தலைவர்களை தெரிவு செய்வதும் இவர்களே!

இவர்களா? இவர்கள் சமூகத்தில் பெரிய தனவந்தர்கள். நம்மை பகடைக்காயாக்கி அவர்களின் குடும்பத்திற்காக சுயநலமாக செயற்படும் பச்சோந்திகள்...

என்ன யோசிக்கிறாய்... இவர்கள் தான் உரிமையுடன் கோரிக்கைகளை முன்வைத்திடவும் அரசியல்வாதிகளை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்பவர்களும் இவர்களே. இவர்கள் கண்ணியமானவர்கள் என்று பெருமிதத்துடன் கூறினார்.

ஆமாம் இவர்கள் தான் எமது மொடல்கள். தேர்தல் காலங்களில் இந்த அரச பணியகத்தில், அந்த கூட்டுத்தாபனத்தில் வேலை பெற்றுத் தருகிறோம் உங்கள் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுத் தருகிறேனென்று ஆசை வார்த்தைகள் கூறி, போஸ்டர்கள் ஒட்டவும், கட்சியின் துண்டு பிரசுரங்களை விநியோகிக்கவும், நிறக் கொடிகளை பாதையெங்கும் கட்டி அலங்காரமிடவும் மேடை அமைக்கவும் அவர்களின் கூட்டங்களுக்கு ஆடு மாடுகள் போல் வாகனங்களில் கோஷமிட்டு செல்லவும் எதிர்கட்சிக்காரனை அடிக்கவும் அவனது மேடை, கொடிகளை அடித்து பிய்த்து எறியவும் எமது இயலாமை ஏழ்மையை மூலதனமாக்கி ஈனச்செயலால் வயிறு வளர்க்கும் இவர்கள் தான் முன் மாதிரிகளா?

என்ன முணங்குகிறாய்... எனக்கும் கேட்கக் கூறேன்.

இல்லை ஒன்றுமில்லை.

கேக் துண்டுகளும் சுடச்சுட பிளேன்ரியும் வாழைப்பழமும் வந்திருந்தோர் எல்லோருக்கும் பரிமாறப்பட்டது. பிளேன்ரியின் சூடு தொண்டையை சுட்ட போது இதமாகவிருந்தது. வெளியில் இருள்போர்த்திய சூழல் - குளிர் நமது ஊர்களைப்போல சோம்பறித்துப் போயிருந்தது. வந்துவிட்டாராம். வந்துவிட்டாராம் எல்லோருக்குள்ளும் முணுமுணுப்பும், படபடப்பும் தொற்றிக் கொண்டது. நம்மனைவரையும் உள்ளே அழைக்கிறார்கள். வாருங்கள் போவோம். தலைமையேற்றிருந்தவர் புதுதெம்புடன் அழைத்தார். எல்லோரும் கௌரவ விருந்தினர்கள் போல் உள்ளே சென்று அமர்ந்தோம்.

வரிசைக்கிரமமாக கதிரைகள் போடப்பட்டிருந்தன. இரண்டு பெரிய மேசைக் காற்றாடிகள் காற்றை விசிறிக் கொண்டிருந்தன. 'க்ளிக்', 'க்ளிக்' கெமராக்கள் 'ப்ளஸ்' சத்தம் வெளிச்சம் கண்ணை கூசச்செய்தன.

எல்லோருக்கும் ஆயுபோவன், வருகிற தேர்தலில் எனது மகனையும், கட்சியினையும் ஆதரிப்பதாக எடுத்திருக்கிற முடிவு சாலச்சிறந்தது. உங்களது ஊரின் குறைகளையும், பிரச்சினைகள் பற்றியும், வேலைவாய்ப்பு பற்றியும் உங்களது தலைவர் விரிவாக கூறியுள்ளார். அதற்கான வேலைத்திட்டங்களை கூடிய விரைவில் கவனத்திற்கொள்வேன்.


*With Best Compliments From*

POONANA VEGETABLE STORES

129, Wanguwakade, Madawala Bazaar.

Tel: 081 3818388, 072 9189481

S.M. Faizal
(Proprietor)
0777-884667







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் எழுந்து நின்றார்
'ம்' சொல்லுங்கள் உங்கள் பிரச்சினையை

எல்லோரையும் சுற்றும் பார்த்தார்... வந்து வந்து தயங்கினார்... சொல்வோமா? வேண்டாமா? என்கிற தயக்கம். வார்த்தைகள் வெளிவர திக்கின முகமெங்கும் வியர்வைப் பூக்கள் மலரத்தொடங்கின. உடல் நடுங்கியவறாக மெல்ல கதிரையிலேயே அமர்ந்தவாறே ஒன்றுமில்லை என்றார். மீண்டும் அமைச்சராகவிருந்தவர் 'நீங்கள் ஏதாவது சொல்வதாக இருந்தாலும் பயப்படாமல் சொல்லலாம். நான் உங்கள் பிரதிநிதி, உங்களின் பிரச்சினைகளை செவிசாய்க்கவும் அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள என்னால் முடியுமாகவிருக்கும், தயங்காமல் சொல்ல வந்ததை நீங்கள் சொல்லலாம்.

கொஞ்சம் அச்சம் தவிர்ந்தவராக, தற்போது எங்கட நாட்டிலுள்ள சூழலில் எங்கட சில பிரதேச பள்ளி வாயில்களில் ஐந்து நேர கடமையை நிறைவேற்றுவது முடியாமற் போயியுள்ளது. சுதந்திரமாக மத அனுஸ்டானங்களை மேற்கொள்ள முடியாமற் துன்பியலுக்குள் சுருண்டிருக்கிறோம். இவை சில குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் உங்களது அரசு ஆக்கப்பூர்வமான உறுதியான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லையே! என தான் சொல்ல வந்த கருத்தை சொல்லி முடித்த சந்தோஷத்தில் அமர்ந்தார்.

எங்கும் நிசப்தம் நிலவியது. அங்கு கூடியிருந்தோர் பலருக்கு பாராளுமன்றத்தில் நமது அரசியல் தலைவர்கள் இவ்விடயம் தொடர்பாக மூச்சுவிடாமல் இருப்பதைப் போன்று இங்கும் அமைதியாக இருக்க வேண்டியது தானே. இவருக்கு என்னத்து இக்கேள்வி மனதிற்குள்ளேயே அதிருப்தி கொண்டனர்.

அமைச்சர் தொண்டையை செருமியவாறு இவ்வாறான சில செயல்கள் சில இடங்களில் நடந்தேறுவதையிட்டு நாம் மிகவும் மனவேதனையடைகிறோம். இது சில தீயவர்களின் செயற்பாடுகள் எமது கட்சியினதல்ல என்பதை மிக உறுதியாக தெரிவிக்கின்றேன். எமது தலைவரின் ஆட்சியில் எந்த மத ஆலயங்களும் உடைக்கப்படாது என்பதை அரசியல் மேடையில் தலைவரே கூறியதை நினைவூட்ட விரும்புகிறேன். 'இன்னாங்க இந்த லெட்ஜரில் உங்கட பெயர் விலாசம், போன் நம்பரை எழுதுங்க' என்று அருகில் இருந்தவர் பேனாவுடன் வந்தார்.

இந்தநாட்டின் மன்னர்களுக்கும் அரசர்களுக்கும் உங்களது மூதாதையர்கள் விசுவாசமானவர்களாக இருந்திருக்கிறார்கள். அதனால் தான் எங்களது பெண்களை திருமணம் முடித்து இங்கு வாழ்வதற்கான நிலங்களை வழங்கியும், உங்கள் இனத்தாரை உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமா?

தவளம் முறை வியாபாரத்தை இங்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்நாட்டில் ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார முறையை அறிமுகப்படுத்தி பொருளாதாரத்தின் முதுகெழும்பாக இந்நாட்டில் திகழ்ந்திருக்கிறார்கள் உங்கள் மூதாதையர். இனிவரும் காலங்களில் இவ்வாறான நிகழ்வுகள் நடை பெறாவண்ணம் நாம் ஆவண செய்வோம்.

ஆகஸ்ட் 09

எங்கும் பட்டாசு வெடிகளால் தேசம் அதிர்ந்தது
நாட்களும காலமும் விரைந்தது
எங்களது ஊரும் பிரதேசமும் அப்படியே இருந்தது.

பத்திரிகை தலையங்கங்களில், ம.ஃரிப் அதான் கூறிய வேளையில், பள்ளிவாயினுள் அத்துமீறி நுழைந்த சிலர் மைக்கை பிடுங்கியெறிநது அட்டகாசம்

'தம்புள்ளை பள்ளிவாயில் உடைக்கப்படும் அபாயம்'

செய்திகளும் செயல்களும் தொடரத்தான் செய்தன.

★ ★ ★

With Best Compliments From

UNITED STORES
❖ Printed Books ❖ Stationery ❖ Gift Items
❖ Fancy Goods ❖ Ever Silver Items ❖ Photocopy
❖ Book Binding ❖ Greeting Cards ❖ Laminating
❖ Local & IDD Calls ❖ Fax ❖ Electric Items,
❖ Oven & Gas Cooker, Rice Cooker
No. 170/A, Madawala Bazaar.Tel: 081 2476536 Mobile: 075 8898411
E-mail: unitedsala@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்துப் பயணம்

பின்ந் ஏ. ரஸாக்
தம்பாளை, பொலன்னறுவ

முன் பின் பாராமல் கால்கள்
நகர்ந்தன பேருந்தில் ஏறி
ஜன்னலருகில்.... அமர்ந்திருந்தேன்
என் தனிமையுடன் பயணிக்க
என்னருகில் அமரும் ஆத்மாவை
பற்றிய சிந்தனை துளிர்விட்டது
பல வேண்டுதல்கள்
மனிதாபிமானத்திற்கு உருவம்
பெற்றவன் அமைய வேண்டி......

பேருந்து நகர ஆரம்பித்தது
இது வரையில் எனக்குத் துணை
எனது பையே
பத்து நிமிட்கள் கழிந்திருக்கும்
அருகில் வயோதிபர்
அசட்டுப் புன்னகையுடன்
பற்கள் முழுதும் எதையோ
கூற எத்தனிக்கிறது

வீட்டின் வசந்தங்களின்
வாடையை பையில் சுமந்து
விடுதியின் வாயில்களோ வரவேற்கும்
எங்களையும் சிட்டுகளென்று
பயணம் கனக்கிறது
கண்கள் கசிகின்றன
எத்தனையோ காட்சிகள்
தோன்றினாலும் சிந்தை மட்டும்
வீட்டை விட்டு அகலவில்லை

ஒரு மணிநேரம் கழிந்திருக்கும்
உணர்வுக்கலங்கள் அறுவருப்பை
ஆர்ப்பதித்தன. பேச எத்தனிக்கும்
வயோதிப வாலிபனின் ஆரம்பப் படிகள்
ஸ்...... ஸ்........ சீற்றமாய்!
இதயம் வேகமாய் சுழல்கிறது!

தேநீர் இடைவேளை பயணிகளுக்கு
எனக்கோ நரகின் விளிம்பு
பலர் இருந்தும் வெறுமையை உணர்கிறேன்
மீண்டும் பயணம் பேருந்து அசுர
வேகத்தில் அடைவை நோக்கி
எக்ஸ் டொபி நீட்டப்பட்டது
இதயத்தின் வேகமோ பேருந்தை
மிஞ்சி விடும் போலிருந்தது
கூச்சலிட்டு அபயம் தேட
எண்ணுகையில்.....

தொல்லையின் பயணம் முடிந்தது
போலும் அறியாமலே பெருமூச்சுக்கள்
அரக்கர்களின் வஞ்சகத்தை அறியாது
தொல்லையோ தொடர்கதையாக
விசிடிங் கார்ட் உருகொண்டு
விழுந்தது என் மடியில்

செய்வதறியாது தவிக்கையில்
இவன் கள்வன் ஒரு வருடம் சிறை
சென்றவன் இவனுடன் தொடர்பு
பேணப்போகிறாயா?.............
அறிவுரைக்காய் அவதரித்த
சீர்திருத்த வாதியின் வார்த்தைகள்
முழங்கின
நான் செய்த பாவம் என்ன?
பெண்ணாய் மண்ணில் உதித்ததா?
கல்விக்காய் களம் தேடியதா?

மெல்லமுடியவில்லை, துப்புவவுமுடியவில்லை
ஆறுதலுக்காய் நண்பர்களுன் பகிர
அவளும் காம அரக்கர்களின் சூழ்ச்சியில்
விதிவிலக்கானவலல்ல
இவை பெண்ணினமே பெற்ற சாபம்



# ELEGANCE TEXTILES

**Dealers in Fancy Goods, Baby Suits, Baby Items, Wedding Suits, Scurt & Blouse, Shirting & Suiting, Readymade Items, Textiles & Tailoring**

**No. 36, Main Street, Wattegama. Tel: 081 2475169**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# CITY LINE

## M.R.M. Razaan



**City Plaza Shopping Complex**

**1st Floor, No. 71/1/3, Colombo Street, Kandy.**

**Shop: 0814 902323 Mob: 0777 912475, 077 9196209**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவக் கண்ணோட்டம்

J.M. Nizar (Dip.in.MLT)

## நீரிழிவு நோயும் (Diabetes Mellitus) அதற்கான ஆலோசனையும்

**01. நீரிழிவு நோய் என்றால் என்ன?**

நீரிழிவு நோய் என்பது ஒருவரது உடலின் குருதியில் குளுக்கோசின் அளவு கூடுதலாக இருப்பதைக் குறிக்கும். எமது குருதியில் குளுக்கோசின் அளவைக் கட்டுப்பாடாக வைத்திருக்க இன்சுலின் எனும் ஒரு சுரப்பு (Insulin Hormone) உதவுகின்றது. இந்த இன்சுலின் தொழிற்பாடு குறைவதினாலும் அல்லது அது சுரக்கும் அளவு குறைவதினாலும் நீரிழிவு நோய் ஏற்படலாம். இன்நிகழ்வையே அண்மைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**02. அப்படியானால் நீரிழிவு நோயாளரில் குளுக்கோசின் அளவு கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மட்டும் தான் பிரச்சினையா?**

இல்லை.

அடிப்படையில் குளுக்கோசின் அளவுக் கட்டுப்பாட்டில் தான் பிரச்சினை. இருந்தாலும் இன்சுலின் இலிப்பிட்டு (Lipids) புரதம் (Protein) மற்றும் வேறு பல உடற் தாக்கங்களிலும் பங்கெடுப்பதால் இதனை ஒரு பல்நிலை உடற்தாக்கங்களில் ஏற்படும் பிரச்சினையாக கருத முடியும். இதனை Multiple Metabolic Dysfunction State என்பர்.

**03. இன்சுலின் உடலில் என்னென்ன வேலைகளைச் செய்கிறது?**

இன்சுலின் என்பது ஒரு புரத வகைக்குறிய ஹோர்மோன் ஆகும். இது உடலின் Pancrease எனும் வயிற்றில் உள்ள சுரப்பியால் சுரக்கப்படுகின்றது. இதில் உள்ள சிறப்புக் கலங்களான Beta (β) cells இன்சுலினை சுரக்கின்றது. இங்கிருந்து இந்த இன்சுலின் ஈரலை அடைகின்றது. இன்சுலினின் பெரும்பகுதி ஈரலிலேயே தனது தொழிற்பாட்டை புரிகின்றது. சிறிதளவு இன்சுலின் குருதியில் கலந்து உடலில் உள்ள அனைத்து கலங்களுக்குள்ளும் சென்று அங்கு அதன் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**இன்சுலினின் பிரதான தொழில்கள்**

i. உடனடித் தொழில் (in seconds) குளுக்கோசு, அமைனோ அசிட், $K^+$ என்பவற்றை கலத்தினுள் செலுத்துதல்.

ii. இடைக்கால (Intermediate) தாக்கம்.
   * கிளைகோசன் செய்கையை தூண்டுதல்.
   * புரத செய்கையை ஊக்குவித்தல்.
   * புரத உடைப்பைத் தடுத்தல்.

iii. நீண்ட நேரத்தாக்கம்
   MRNA இன் அளவைக் கூட்டி இலிப்பிட்டு, மற்றும் புரத செய்கை நொதியங்களை தொகுத்தல்.

**04. நீரிழிவு நோய்களில் என்னென்ன வகைகள் உண்டு?**

பொதுவாக நீரிழிவு நோயை DM Type I, DM Type II என வகைப்படுத்தலாம். இளம் வயது நீரிழிவு நோயாளிகளில் இன்சுலின் குருதியில் சிறிதளவேனும் இல்லாத நிலையில் இவர்களுக்கு இன்சுலினை ஏற்றி பராமரித்தனர். இவர்களுக்கு Diabetic drugs பயனற்றது. இவர்களை ஆரம்பத்தில் IDDM (Insulin Dependaer Diabetis Mellitus) என அழைத்தனர். அதாவது DM Type I என்பதாகும். ஆனால், தற்போது வயது


With Best Compliments From



ASTRON COMPUTERS

DEALERS IN BRAN NEW & USED PC'S AND ALL KINDS OF COMPUTER ACCESSORIES AND HARDWARE,SOFTWEARE SOLUTIONS



43/F KANDY ROAD,MADAWALA BAZAR 0777 700943 , 0727 705588 , 0772 731729


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களிலும் குருதியில் இன்சுலின் இருப்பதோடு, குளுகோசும் அதிகமாக இருக்கின்றது. இப்படிப்பட்டவர்களுக்கு Insulin Resistance தான் பிரச்சினையாக உள்ளது. இவர்களை NIDDM (Non Insulin Depereent Diabetus Mellitus) DM Type II என அழைப்பர். இதனால் இன்சுலின் பாவிப்பதை வைத்து வகைப்படுத்தல் பயனற்று போக Type I என்றும் Type II என்றும் நீரிழிவை தற்போது வகைப்படுத்தியுள்ளனர். கொள்கை அளவில் இவை IDDM NIDDM Type I ஐ ஒத்தது.

**05. Type II DM ஐ பற்றிய சில விளக்கமும் அவர்களின் இன்சுலின் தேவை பற்றியும் விளக்குக.**

90% மான நீரிழிவு நோயாளிகள் Type II வகைக்குரியவர்களே. இவர்களில் இன்சுலின் தாக்குதிறன் குறைவதாலேயே இன்நோய் ஏற்படுகின்றது. குறிப்பாக இது 30 வயதுக்கு மேற்பட்டோரில் ஏற்படும் சடுதியான நீரிழிவு நோயில் குணம், குறிகள் மிகவும் குறைவு. அநேகமானோர் வேறு காரணங்களுக்காக இரத்தப் பரிசோதனை செய்யும் போது கண்டுபிடிக்கப்படுகின்றனர். அனேகரில் தாய் அல்லது தந்தை வழியாக பரம்பரையாக இந்நோய் வந்திருக்கலாம். உணவுக் கட்டுப்பாட்டுடன் குளுசைகள் மூலம் குருதியின் குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால் பிற்காலத்தில் அநேகரில் இன்சுலின் தேவை ஏற்பட வாய்ப்புண்டு.

மற்றும் அனேகமான Type II DM நோயாளிகளில் குருதியில் இன்சுலின் கூடுதலாக இருந்த போதிலும் Insulin Resistance தான் பிரச்சினையாக உள்ளது. இவர்களில் Insulin ஏற்ற வேண்டும் என்றால் அண்மைய ஆய்வுகளின்படி ஏறக்குறைய 60% மான Type II DM இல் நீண்ட கால நோக்கில் இன்சுலின் தேவைப்படும் என்கின்றனர். இன்றைய காலங்களில் நீரிழிவு நோயாளர்களில் குளுக்கோசின் அளவு மிகவும் இறுக்கமாக கட்டுப்படுத்தப்படுகின்றது. இதனை HBA 1C எனும் பரிசோதனை மூலமே நிர்ணயிக்கின்றனர். இதன் அளவை 7% இற்கும் குறைவாகப் பேணவேண்டும். இதற்கு அனேகர் இன்சுலினை ஏற்ற வேண்டிவரும். இவர்களில் இந்த மேலதிக இன்சுலின் எப்படி தொழிற்படுகின்றது என்பது இன்னும் தெளிவில்லை. இன்னும் ஒன்று நீண்ட நாட்களில் குளுசைகள் β cell களை களைப்படையச் செய்துவிடுகின்றன. இதனால் இன்சுலினும் குறைவடைகிறது. இந்நிலையை β Cell Exhaustion and Failure என்பர்.

**06. Type II DM நோயாளிகள் அனைவரும் உடற்பருமன் கூடியவர்களா?**

இல்லை, அப்படி இருக்க முடியாது. ஆனால் அநேகமான Type II DM நோயாளிகள் உடற்பருமன் கூடியவர்களாக இருப்பர். ஒரு சிலரில் உடல் நிறை சாதாரணமானவர்களும் இருக்கலாம். இதில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். உடற்பருமன் அதிகரித்தல் (Obesity), இப்போது ஒரு நோயாக மாறிவருகிறது. இதனால் Type II DM உம் அதிகரிக்கிறது. இன்னும் ஒரு விடயம் Maturity onset Diabetes of the young (Mody) எனும் வகை Type II DM நோயாளிகளும் உள்ளனர். இவர்களில் இளம் வயதில் Type II DM ஏற்படும். ஆனால் உடல் பருமன் சாதாரணமானதாக இருக்கும். இதனால் இவர்கள் பிழையான Type II DM என வகைப்படுத்தப்பட சாத்தியம் உள்ளது.

**07. என்ன பரிசோதனைகளைச் செய்து DM உண்டு என உறுதி செய்யலாம்?**

நீரிழிவு நோயினை குருதியில் உள்ள Fasting Blood Sugar (FBS) இன் அளவை மதிப்பிடுவதன் மூலம் நிர்ணயம் செய்ய முடியும். இங்கு Fasting என்பது நன்றாக சாப்பிட்டு 10-12 மணித்தியாலங்கள் எந்தவித உணவும், பானமும் இன்றி (தண்ணீர், வெறும் தேயிலைச்சாயம் தவிர) இருந்த பின்னர் இரத்தப்பரிசோதனைக்கு உட்படல் வேண்டும். அத்துடன் நீங்கள் வழமையாகப் பாவிக்கும் மருந்துகள் ஏதேனும் இருப்பின், சாப்பாட்டின் பின் அவைகளையும் எடுத்திருக்க வேண்டும். FBS இன் சாதாரணமான அளவு நிலை 75-115 Mg/dl ஆகும். 115 mg/dl க்கு மேல் இரு தடவை வெவ்வேறு நாட்களில் FBS இருப்பின் நீரிழிவு அவருக்கு உள்ளது என முடிவு செய்யலாம்.

இன்னுமொரு முறையிலும் குருதியின் குளுகோசின் அளவை மதிப்பீடு செய்யலாம். அதாவது Post parandial Blood Sugar (PPBS). PPBS என்பது நன்றாக சாப்பிட்டு இரண்டு (2) மணித்தியாலங்களின் பின் இரத்தப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும். ஆனால் நீங்கள் வழமையாக பாவிக்கும் மருந்துகளையும் எடுத்த பின்னரே இப்பரிசோதனைக்கு உட்படுத்துதல் அவசியம். PPBS இன் சாதாரணமான அளவு நிலை 75-140 mg/dl ஆகும். PPBS 140 mg/dl க்கு மேல் இரு தடவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு நாட்களில் இருப்பின் அவருக்கு நீரிழிவு நோய் உண்டு என தீர்மானிக்கலாம்.

நீங்கள் சாப்பிட்டு எந்த நேரத்திலும் கால நேர வரையறையின்றி உங்கள் குருதியில் குளுகோசின் அளவை அறிதலை Random Blood Sugar (RBS) என அழைப்பர். இதுவும் 140 Mg/dl க்கு மேல் இருப்பின் இவருக்கு DM உள்ளது என நிர்ணயம் செய்யலாம்.

**08. DM இற்கான அறிகுறிகள் எவை?**

சாதாரணமாக அதிக அளவு சிறுநீர் வெளியாதல், அதிகரித்த தாகம், வாய் வரண்டு போதல், உடலின் பாரம் குறைதல், என்பன ஏற்படும். Type II DM இல் இக்குணம் குறிகள் மிக அரிதாகவே ஏற்படும்.

மேலும் உடலில் பல இடங்களில் தொற்று நோய் ஏற்படுதல். அவையாவன தோலில் தொற்று (Cellulitis corbuncle) காதில் தொற்று (Otitis media) மற்றும் மூளைக்காச்சல் நியுமோனியா என்பன. கால் வீக்கம், காலில் விறைப்பு, நெஞ்சுவலி, கண்பார்வையில் மங்கல், மாறாத கால் புண், பாரிச வாதம் என்பன கூட ஏற்பட்ட பின்னர் தான் சிலரில் Type II DM இருக்கிறது என கண்டுபிடிக்கப்படுகிறது. அனேகமானோரில் 10-20 வருடங்கள் இது குணம்குறி இன்றி இருந்துவிடும். இதனாலேயே எல்லோரும் குருதியில் FBS ஐ பரிசோதனை செய்துகொள்வது அவசியம்.

**09. அறிகுறி அற்ற அனைவரும் நீரிழிவு உள்ளதா என பரிசோதிக்க வேண்டுமா?**

அனைவரும் தேவையில்லை. பின்வரும் நபர்கள் தமது FBS ஐ பரிசோதித்துக் கொள்ளுதல் நல்லது.

a) 45 வயதுக்கு மேற்பட்டவர்கள்.
b) உடல் பருமன் கூடியவர்கள்
c) தாய், தந்தை அல்லது சகோதரர்களுக்கு DM இருத்தல்.
d) உயர் குருதி அமுக்கம் (High Blood pressure) உள்ளவர்கள்.
e) கொலஸ்ரோல் (Cholestrole) அதிகம் உள்ளவர்கள்.
f) முன்னர் Impaired Glucose Tolerance இருந்தவர்கள்.
g) 3.5kg இற்கு மேல் எடையுடைய குழந்தை பெற்ற தாய்மார்கள்.

குறிப்பு :
ஒரு சிலரில் Type II DM இற்கு ஒரு தனிப்பட்ட காரணி என்று இல்லை, ஆனால் சில நோய்கள் கூட குருதியில் குளுக்கோசின் அளவைக் கூட்டி விடலாம். இது தற்காலிகமானது. உதாரணமாக Haemochromatosis, எனும் நோய், மற்றது Cushing syndrome இவற்றை ஆரம்பத்தில் கண்டறிந்தால் குணப்படுத்த முடியும்.

**10. நீரழிவு நோயாளிகள் வேறு என்ன பரிசோதனைகள் செய்வது நல்லது?**

(a) HBAIC (b) Lipid profile
(c) Urine full report
(d) Blood urea, serum creatinine, serum electrolytes
(e) Urine micro albumin (f) Full blood count
(g) E.C.G (h) Thyroid Function Test
(i) Liver function tests.

**11. நீரிழிவு நோய்க்கான (வைத்திய) பரிகாரங்கள் எவை?**

நீரிழிவு நோயிற்கு மூன்று முறையான பரிகாரங்கள் உள்ளன.

(a) உணவுக் கட்டுப்பாடு
(b) Oral Hypogycemic Agents குளுசைகள்
(c) Insulin ஏற்றுதல்.

**12. நீரிழிவு நோயாளிகளின் உணவுக் கட்டுப்பாடு பற்றி சற்று விளக்கவும்**

அனைத்து நீரிழிவு நோயாளிகளும் உணவில் மிகவும் கட்டுப்பாடாக இருத்தல் வேண்டும். சிலரில் இவ் உணவுக் கட்டுப்பாடு மட்டுமே குருதியில் குளுக்கோசை கட்டுப்படுத்த போதுமானதாக அமையும். இவருக்கு குளுசைகள் பாவிக்க வேண்டி ஏற்படாது.

இந்த உணவுக் கட்டுப்பாடுகளை Medical Nutrient Therapy (MNT) என அழைப்பர். குருதியில் குளுக்கோசை கட்டுப்படுத்துவதுடன் மட்டும் இல்லாமல் அவரது உடல் பருமனை குறைத்தல், கொலஸ்ரோலை குறைத்தல், மற்றும் குளுக்கோஸ் சடுதியாக குறைதலை தவிர்த்தல், நன்றாக தினமும் உடற்பயிற்சி செய்தல் என்பன முக்கியமானது.

உணவுக் கட்டுப்பாடு என்பது கிரமமாக குளுகோசை எடுப்பதைவிட முக்கியமானது, நாம் தினமும் குளுசை எடுக்கிறோமே என நினைத்து உணவுக் கட்டுப்பாட்டை எவரும் கைவிட கூடாது. அத்துடன் தான் ஒரு நீரிழிவு நோயாளி என்பதை உள ரீதியாக தாக்கப்படாமல் பாதுகாத்துக் கொள்ளுதலும், இதைக்கட்டுப்படுத்தும் ஒரு பொறி முறையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13. சாதாரணமான ஒரு DM நோயாளியின் தினசரி உணவு வகைகளைக் கூறவும்?**

நீரிழிவு நோயாளி ஒரு நாளைக்கு 6 முறைகள் உணவை உண்ண வேண்டும். அதாவது ஒரு நாளைக் குறிய உணவை அதன் அளவைக் குறைத்து அதனை பல முறை உண்ண வேண்டும். அதாவது,

* காலை 6 மணிக்கு சீனி இல்லாத பால் தேனீருடன் 2 சீனியற்ற பிஸ்கட்.
* 8 மணிக்கு பாண் 3 துண்டு / இடியப்பம் 6 இதில் ஏதாவது ஒன்றுடன் குரக்கன் பிட்டு / வாழைப்பழம்.
* 10 மணிக்கு ஒரு கோப்பை தேநீர், கடலை / பயறு ஒரு Plate
* 1 pm க்கு மதிய உணவு சோறு (சிவப்பரிசி) 3 அகப்பை, கூடிய அளவு மரக்கறி / இலைக்கறி வகை, மீன் 1 துண்டு அல்லது கோழி இறைச்சி 1 துண்டு இத்துடன் போதியளவு பழங்கள் எடுக்கவும்.
* 4 மணிக்கு தேனீர் உடன் சீனியற்ற பிஸ்கட் or பயறு, கடலை / கௌபி ஒரு அகப்பையளவு எடுக்கவும்.
* 8 மணிக்கு பாண் 3 துண்டு / இடியப்பம் 4 உடன் பிட்டு 1 துண்டு. இதில் ஒன்றுடன் மரக்கறி எடுக்கவும். சீனி அற்ற ஒரு கோப்பை தேனீர், (ஒரு கிழமைக்கு 3 முழுமுட்டைகளை எடுக்கலாம். மேலதிகமாக எடுக்க விரும்பினால் ஒவ்வொரு நாளும் முட்டையின் வெள்ளை கரு பகுதியை மட்டும் எடுக்கலாம்.)

**14. நீரிழிவு நோயாளிகள் தவிர்க்க வேண்டிய உணவுகள் எவை?**

சீனி, பனங்கட்டி, குளுக்கோசு, தேன், கற்கண்டு, சர்க்கரை, பழச்சாறு, இனிப்பு வகை, சொக்லேட், ரின்பால், ஐஸ்சிங் கேக், ஐஸ்கிறீம், ஜேம் வகைகள்.

**15. இவர்கள் என்ன உணவுகளை அதிகம் உண்பது நல்லது?**

* மரக்கறி வகைகள், இலைக்கறிகள், நார் பொருட்கள் (Fibre), Fibre கூடிய பழங்கள், கிழங்கு வகைகள், தானியப் பொருட்கள், கடலை பருப்பு, பயறு, கௌபி (தட்டைப்பயிறு) வகைகள் என்பன சிறந்த உணவுகளாகும்.
* பழவகைகளும் கூடுதலாக எடுப்பது நல்லது. உதாரணமாக ஒரு நாளைக்கு 2 வாழைப்பழம், பாதி அப்பிள், 1 துண்டு பியாஸ், அன்னாசி பழம் ஒரு துண்டு என்பவற்றை எடுக்கலாம்.

குறிப்பு : திராட்சை, தோடம்பழம் என்பனவற்றை தவிர்ப்பது நல்லது. உணவு சம்பந்தமாக ஒரு Dietician ஐக் காண்பது நல்லது.

★★★

*With Best Compliments From*

**Al Haj S.M. Mashoor**
Proprietor

**AL RAJHI**
**FARM SHOP**

Wholesale & Retail Dealers in Broiler Chicken,
Chicks Feed & Farm Equipments

**No.137, Kandy Road, Madawala Bazaar.Tel : 081 2404202**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COLOMBO
STORES

# COLOMBO STORES

## General Merchants









No. 13 C/1, Kandy Road, Madawala Bazaar.
Tel : 081-2476504, 081-2470570
Mob : 0777-422166, 0727-422166


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mediline
## LABORATORY DIAGNOSTICS

*We feel your Pulse*

# 225/2B, Kandy Road, Madawala Bazzar.
Contact No. Lab: 0718385505, Mobile: 077-6402803

Quality Control Human Germany
MICRO LAB 300
Semi Automated
Bio Chemistry Analyser
(Vital Scientific)

10 வருடங்களாக மடவளை மண்ணில் உங்கள் நன்மதிப்பை வெண்ற ஒரே ஒரு மருத்துவ ஆய்வுக்கூடம்

Mediline Laboratory மட்டுமே.

இங்கு...

- ❖ இரத்தப் பரிசோதனைகள்
- ❖ சிறுநீர் பரிசோதனைகள்
- ❖ **E.C.G.** போன்ற எல்லா வகையான பரிசோதனைகளையும்

**குறைந்த விலையில் நிறைந்த சேவையை , தகுதியான மருத்துவ பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்டு 1 மணித்தியாலத்திற்குள் முற்றிலும் அதி நவீன கணனி மயப்படுத்தப்பட்ட துல்லியமான பெறுபேறுகள் வழங்கப்படும்**





**வேலை நேரம்**

**திங்கள் - சனி வரை காலை 7.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

**போயா , ஞாயிறு தினங்களில் காலை 7.30மணி முதல் மாலை 1.00 மணி வரை**

நாடவேண்டிய ஒரே இடம்...

**Mediline Laboratory**

225/2B, Kandy Road,
Madawala Bazaar. Tel: 081-2060437 Lab: 071-8385505 Mobile: 077-6402803

மடவளை கிராமிய வங்கிக் கிளைக்கு முன்னால்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# BRAVO LANKA (PVT) LTD.

**Makers of Quality Garment Woven & Printed Labels, Shirt Packing Box Board, Corrugated Boards, Sponge Boards and Garment Accessories.**











**J. Hyder Hassen 0752 663988**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW CITY PLAZA

NCP

உங்கள் முழு குடும்பத்தினருக்கும் தேவையான
மனம் கவரும் அனைத்து வகையான ஆடைகளை
ஒரே கூறையின் கீழ்
மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

நிவ் சிட்டி ப்லாஸா

- T-சேர்ட்ஸ்
- சேர்ட்ஸ்
- டெனிம்
- சல்வார்
- கவுன் வகைகள்
- WEDDING சாரி வகைகள்
- சிறுவர் ஆடைகள்



**No. 8/A, Wattegama Road,**
**Madawala Bazaar.**
**Tel : 077 3299950 / 081 4934844**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய வங்கி முறைமையும் அடிப்படையும் அறிமுகம்

M.S.M. Rismy (J.P)
ABP / PGD in Islamic Finance / DIBM

இஸ்லாமிய நிதி செயல்பாடுகளில் இஸ்லாமிய வங்கிமுறை இறையச்சத்தையும், மறுமை பற்றிய உணர்வையும், கேள்வி கணக்கு பற்றிய பயத்தையும் அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய சூழலை கருத்திற்கொண்டு ஷரீஆ வரையறைகளுக்கு உட்பட்ட பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வட்டி வங்கி முறைகளுக்கு மாற்றீடான ஆத்மீகத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாத ஒரு துறையாகும்.

"இஸ்லாமிய பொருளாதார வழியில் செல்வத்தைப் பயன்படுத்துவதற்கும் வளப்பங்கீட்டை சீர்படுத்துவதற்கும் நீதியையும் சமூக பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கும் சேவைகளை வழங்குவதற்கும், செல்வத்தைப் பயன்படுத்துவதற்கும், வளப்பங்கீட்டை சீர்படுத்துவதற்கும் சேவைகளை வழங்குவதற்கும், செல்வங்களை ஒன்று திரட்டி தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற நிறுவனமே இஸ்லாமிய வங்கியாகும். Dr. Ahmed Najjath என்ற அறிஞர் கூறுகிறார்.

மேற்குறிப்பிட்ட விளக்கங்களை வைத்து நோக்கும் போது இஸ்லாமிய வங்கி முறைமை (Islamic Banking System) இலாபம் நட்டம் ஆகிய இரண்டையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு நிதிக் கொள்கையாகும். மேலும் இஸ்லாமிய பொருளாதாரத்தினுடைய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உதவி புரியக்கூடிய வகையில் செயற்பாடுகள் அமைத்துக் கொள்வதுமாகும்.

**இந்த வகையில் இஸ்லாமிய வங்கியியலின் அடிப்படைகளை பின்வருமாறு நோக்கலாம்**

01. வட்டியிலிருந்து விடுபடல்
02. நிச்சயமற்ற தன்மையிலிருந்து தவிர்த்து கொள்ளல்.
03. சூதாட்டத்தை நிராகரித்தல்.
04. ஹராம் ஹலால் பற்றி கவனத்தில் கொண்டு இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட வியாபாரங்களிலிருந்து தவிர்த்துக் கொள்ளல்.
05. ஸகாத் - இஸ்லாமிய வரியை பேணி நடைமுறைபடுத்தல்.

எனவே இஸ்லாமிய வங்கி அல்லது நிதிநிறுவனம் தனது செயல்பாடுகளை செயல்படுத்தும் போது மேற்குறிப்பிட்ட இஸ்லாமிய அடிப்படை தத்துவங்களை முன்வைத்தே செயலாற்ற வேண்டும் ஏனெனில் தூஆவையாவும் இஸ்லாமிய பொருளியல் கோட்பாடுகள் அடிப்படையாக கொண்டதாகும். இஸ்லாமிய பொருளியல் கோட்பாடு ஏனைய கோட்பாடுகள் போன்றல்லாது இக்கோட்பாடானது அல்குர்ஆன், அல் - ஹதீஸ் என்பவற்றால் தெளிவுபடுத்தப்பட்டதாகும். எனவே ஒவ்வொரு முஸ்லிமும் வட்டியில்லாத வங்கிமுறை அடிப்படையில் தனது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் வாழ வேண்டும்.




இன்று இஸ்லாமிய வங்கிகளது தோற்றமானது அவற்றின் தொழிற்பாடுகளுடன் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. முஸ்லீம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளிலும் கனிசமான வளர்ச்சியை கண்டுள்ளன. குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளிலும் இஸ்லாமிய வங்கிமுறை இன்று சிறந்த வரவேற்பையும் வளர்ச்சியையும் பெற்றுவருவதையும் காணக்கூடிய இந்த நிலையில் இஸ்லாமிய வங்கியியல் முறை பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது என்பதும் மறுப்பதற்கில்லை.

இந்த வகையில் இஸ்லாமிய வங்கியியல் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் முஸ்லீம்கள் சிறுபான்மையாக வாழுகின்ற இலங்கை போன்ற நாடுகளில் இஸ்லாமிய வங்கி முறைமையை நடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைபடுத்துவதில் தற்போது நடைமுறையிலுள்ள கவர்ச்சிகரமான வட்டி வங்கி அல்லது பாரம்பரிய வங்கிகளுடன் போட்டி போட முடியாமை. இஸ்லாமிய வங்கிகளின் வளர்ச்சியில் அரசினது அல்லது மத்திய வங்கியினது கூடுதல் தலையீடு, இஸ்லாமிய பொருளாதார முதலீட்டு நடவடிக்கைகளில் போதிய அறிவின்மையும், முதலீடுகளில் திருப்தி கொள்ளாமையும் பிரதான தடை காரணிகளாக காணப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட தடைகளுக்கு மத்தியிலும் இலங்கையில் 1988 ஆம் ஆண்டு வங்கியியல் சட்டமானது 2005 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டதன் பின்னர் வர்த்தக வங்கிகளுக்கும் விஷேட வங்கிகளுக்கும் "ஷரீஆ" அடிப்படையில் செயற்பாடுகளை மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் தான் இலங்கையில் இஸ்லாமிய வங்கிகள் தோற்றம் பெற்றன. அதுமட்டுமன்றி பாரம்பரிய வங்கிகளும், நிதி நிறுவனங்களும் இன்று இஸ்லாமிய வங்கி பிரிவுகளை (Islamic Banking Windows) உருவாக்கி தனது சேவைகளை இலங்கையில் பல பாகங்களிலும் விஸ்தரித்துள்ளது. உதாரணத்திற்கு எங்கள் ஊர் (மடவளை) யை எடுத்துக்கொள்ளலாம். நூறுவீதம் இஸ்லாமிய அடிப்படையிலான 'Alnoor" முதலீட்டு நிறுவனம் மற்றும் இலங்கை வங்கி 'Alnoor Islamoc Banking Unit" அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்ஷா அல்லாஹ் இனிவரும் "அலைகள்" வெளியீடுகளில் இஸ்லாமிய வங்கி பொறி முறைகள் இஸ்லாமிய வங்கியியல் வரலாறு அதன் தோற்றம் வளர்ச்சி, இஸ்லாமிய வியாபார முறைகள், வியாபாரத்தில் இஸ்லாமிய பண்பாடுகள் போன்ற விடயங்களை பகிர்ந்து கொள்வோம்.

★ ★ ★

## முலைக் காம்பு

குண்டுச் சத்தம் கேட்கும் பொழுது
ஒரு சமூகம்
நிம்மதியாய் தூங்கும் வேளை
பசியின் கொடுமையில்
ஒட்டிப் போன வயிற்றுடன்
ரவைகளால் சிதறிப் போன
தாயின் உடலில்
முலைக் காம்பைத் - தேடி அலைந்து

தவழும் குழந்தை
ரவையின் நுனியை
முலையென நினைத்து
சூப்பிச் சுவைத்து
பசியாறும் குழந்தைக்கு
கிடைப்பதற்கு ஏமாற்றமல்ல!.....
சூப்புவதற்கு - இதுவாவது
கிடைத்த சந்தோசம் தான்!....

-இறக்காமத்தான் றகீப்-

## பெளர்ணமியும் கற்பழிப்பும்

பிறந்த மேனியுடன்
முழு நிர்வாணமாய்
விரிந்து கிடக்கும் -
வான வெளியில்
சுதந்திரமாய் தனிமையில்
முழு நிலா - உலாவருகையில்
சந்தர்ப்பம் பார்த்து
கற்பழிக்கின்றது - ஒரு
பழுத்த பட்ட மரம்!....

பெண்கள் மீது
பட்டப் பகலில்
நடந்தேறும்
பாலியல் வன்புணர்ச்சி போல்!.....

-இறக்காமத்தான் றகீப்-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலைப் பொழுது

காலைக் கதிரவன்
கண்விழித்தெழுந்து
பூமித்தாயின் மடியிலிருந்து
இறங்கி
பூலோகத்தைப் பார்க்கப்
புறப்பட்டான்.......

கதிர்க் கரம் நீட்டியே
ஆகாயத் தந்தையின்
கரம் பிடித்தே.....
செக்கச் சிவந்த மேனியில்
செங்கதிர் பட்டவுடன்
கொக்கரக்கோ..... என்றே
வரவேற்புப் பாடியது சேவல்

கூக்..... கூ..... என
குயில்களும் பாடிட
கீ...... கீ...... என கிளிகளும்
மகிழ்ந்தன
வண்ணப் பறவைகளின்
வாழ்த்தொலிகள் கேட்டன
புன்புறுல் பூத்த மலர்கள்
புன்னகைத்து வாசம் வீசின
வெண்டாமரை முகம் மலர்ந்து
வரவேற்றது கதிரவனை

பச்சை நிறச் சேலைக்கட்டி
நாணம் கொண்டு தலை
குனிந்து
நடனமாடின
நெல் நாற்றுக்கள்
கதிரவனின் வெப்பம்
கட்டிலை எட்டி
சுட்டது கால்களை
துள்ளிக் குத்தவன்
எழுந்தோடி குளித்தான்

இத்துனை இனிமையான
காலைப் பொழுதினை
இரசித்திட
நேரம் இல்லை அவனுக்கு
சூரியனை விட வேகமாக
ஓடுகிறான் அவன்......
பஸ்ஸை பிடிக்கவே.....
ஆனால்
அதை விட வேகமாக
ஆனது மாலை.......
மாலை நேரத்தையும்
இரசித்திட
அவனுக்கு இல்லை
வேளை..............

- பர்ஹானா சியார்டீன் -

## உதிர்ந்த பூக்கள்

நேற்றுக்கூட நீ...
நான் போகும் வழியில்
சிரித்துக் கொண்டே
நல்லபடியாய்
நின்றிருந்தாய்
தன்னந் தனியே!.....

ஆனால் இன்றோ
உன்னைப் பார்த்தேன்
இந்த நிலை
ஏன் உனக்கு?
யார் உன்னைக்
கீழே தள்ளிவிட்டவர்?
வீழ்ந்து கிடக்கின்றாய்
பூமித்தாயின் மடியில்

- பர்ஹானா சியார்டீன் -

*With Best Compliments From*

# R & R ENTERPRISES

**Distributors of Baby Products**




**No. 52, Madawala Bazaar.**

**Mob: 0777 147434  Tel: 081 2476210**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் சமூகங்களின் வரம்

சியானா அக்ரம்
வங்குவக்கடை

பெண் என்பவள் உயர் திரு குணங்களின் பல்கலைக்கழகம் போன்றவள். ஒரு பெண்ணாளே தான் ஆண் மாண்புடையவனாகிறான். தாயாக, மாமியாக, மகளாக, தங்கையாக, மனைவியாக அவளின் பாத்திரவார்ப்புகள் வாழ்வில் கனகச்சித-மாக பல இடங்களில் பொருத்தப்பாடுடையவாக உருவாக்கப்பட்டுள்ளன.

பெண்கள் அடிமைப்படுத்தப்படுவதாக அவளின் சுதந்திரங்கள் சிறகுடைக்கப்பட்ட பறவையாக சிறை-வைக்கப்பட்டுள்ளதாக இன்று நவீன ஊடக வலைய-மைப்புகளால் மதங்களுக் கெதிராக இக்குரல் இடப்படுகின்றது. நாகரீகமடைந்த நாடுகளால்... நாகரீகமடைந்த மேற்குலக நாடுகளில் தான் பெண் உரிமை காக்கப்படுவதாகவும் பெண் பெண்ணாக மதிக்கப்படுவதாக பறைசாற்றப்படுகின்றது.

மாயை வலைக்குள் பெண் சுரண்டப்படுகி-றாள். அவள் வியாபார பண்டமாக கவர்ச்சிப் பொருளாக பெண் சுதந்திரம் என்கிற சொல்லாடலில் அவள் களங்கப்படுத்தப்படுகிறாள் என்கிற உண்மையை பெண்ணவள் ஏற்கமறுத்து ஒளியைத் தேடிவரும் விட்டில்களாக அன்றாடம் அவள் கருவருக்கப்படு-கின்றாள்.

கலை இலக்கியம் மூலம் அவள் ஆராதிக்கப்-படுவது அவள் அங்கங்களையும், அவள் ஆண்களை மகிழ்விக்கக் கூடியவளாக மாற்றப்படுகிறாள் அல்லது போதிக்கப்படுகிறாள். வியாபார உலகில் பெருத்த முதலாளி வர்க்கத்-தாள் கவனமாக ஏமாற்றப்படுகிறாள். அவள் உடம்பின் எந்தெந்த பாகங்கள் வெளியே காட்டப்பட வேண்டும். அதன் மூலம் தமது வியாபாரத்தை எவ்வாறு மேலெழச் செய்ய முடியும். பணத்தை எவ்வாறு சம்பாதிக்க முடியும் என்கிற தோரணையில் பெண் மாசுப்படுத்தப்படுகிறாள். அவள் ஆத்மாவைப் பற்றி எவரும் கவனத்திற் கொள்ளாமல் மொடலிங், மீஸ் வேர்ல்ட் என்கிற சொல்லாடலில் அசிங்கப்படுத்தப்-படுகிறாள்.

இன்று பெண்விடுதலை பெண் சுதந்திரம் - பெண்களுக்கு சமத்துவம் என்று கோஷமிடும் மேற்குலகின் மதங்கள் பண்டைய காலத்தில் எவ்வாறு பெண்களை கணிப்பிட்டார்கள் என்பதை கீழ்வரும் பந்திகளில் பார்ப்போம்.

கிரேக்கர்கள் பெண்களை விற்பனை பொருட்க-ளாகவே கருதினர். எந்த உரிமையும் அவர்களுக்குக் கிடையாது. உரிமை அனைத்தும் ஆண்களுக்கே என்றனர். இன்னும் அப்பெண்க-ளுக்கு சொத்துரிமை, கொடுக்கல் வாங்கல் போன்ற உரிமைகள் தடுக்கப்-பட்டன. அவர்களில் பிரபல்யமான தத்துவஞானியான சோக்ரடீஸ் பெண்கள் இருப்பது உலகின் மிகப்பெரும் அழிவிற்கு மூலக்காரணம். நிச்சயமாக பெண்கள் விஷ மரத்திற்கு ஒப்பானவர்கள் அம்மரத்தின் புறத்தோற்றம் அழகாக இருக்கிறது. எனினும் அதிலுள்ளதைச் சிட்டுக்குருவிகள் தின்றவுடனேயே மரணித்து விடுகின்றன என்றார்.

ரோமானியர்கள் பெண்களை உயிரற்ற பொரு-ளாகவே கருதி எந்த மதிப்பும், உரிமையும் வழங்காமல் கொதிக்க வைக்கப்பட்ட எண்ணெயை ஊற்றியும், தூண்களில் கட்டியும் வேதனை செய்த-தோடு, குற்றமற்ற பெண்களை குதிரை-களின் வால்களில் கட்டி அவர்கள் உயிர் பிரியும் வரை குதிரையை வேகமாக ஓடவிடுவர்.

சீனர்கள் பெண்கள் நற்பாக்கியத்தையும், செல்வங்களையும் கழுவிவிடக்கூடிய தண்ணீருக்கு ஒப்பாக்கி மனைவியரை உயிரோடு புதைக்கவும், விற்றுவிடுவதற்கும் ஆண்களுக்கு உரிமை வழங்கியிருந்தன. யூதர்கள் பெண்கள் சாபத்திற்-குரியவர்கள் அவள் தான் ஏதாமை வழிகெடுத்து, மரக்கனியை சாப்பிடச் செய்து விட்டாள் என்றும், அப்பெண்களுக்குச் சகோதரர்களிருந்தால் அவள்தன் தந்தையின் சொத்தில் எந்தப் பொருளுக்கும் உரிமை பெறமாட்டார் எனவும் கருதினர்.

கிறிஸ்தவர்கள் பெண்களை ஷைத்தானின் நுழைவாயிலாகக் கருதுகின்றனர். கிறிஸ்தவ அறிஞர்களில் பெண் மனித இனத்தைச் சார்ந்தவ-ளல்ல எனவும் 'சென்பூனா பொன்தூரா' என்பவன் நீங்கள் பெண்களைக் கண்டால் அவளை மனித இனத்தைச் சார்ந்தவளல்ல எனக் கருதிவிடாதீர்கள். அதுமட்டுமல்ல அவளை ஒரு உயிருள்ள ஜீவனாக கருதவிடாதீர்கள். நிச்சயமாக அவள் ஷைத்தானின் உருவம், இன்னும் நீங்கள் செவியேற்கும் அளது சப்தம் பாம்பின் சீற்றம் என்று கூறினான்.

ஸ்லோவேனிக் சமுதாயத்தில் பாலியல் பலாத்காரத்திற்குப் பயந்து பெண்கள் தங்கள் பெண் மக்களைக் கொன்றுவிடும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள். தியேட்னார் எனும் ஜெர்மன் நூலாசிரியர் கூறுகிறார். 'ஸ்லோவேனிக் பெண்களில் கணவன் இறந்த பிறகு அவனுடைய சொத்தைப் பங்கு போட்டுக்கொள்ள மனைவியையும் கொன்று விடுவார்கள். ஸ்காண்டிநேவியாவின் பெண்கள் திருமணம் ஆனாலும், ஆகாவிட்டாலும் நிரந்தரமான பாதுகாப்புப் பொறுப்புக்கு கீழ் அடங்கியவர் 17ம் நூற்றாண்டுவரை மதபோதகர்களுடைய அனுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமல் திருமணம் செய்து கொண்டால், அவளுடைய சொத்துக்கள் அனைத்தையும் நிர்வகிக்கும் பொறுப்பு மதப்போதகர்களுக்கு வந்து சேர்ந்து விடுகிறது என்கிற சட்டம் இருந்து வந்துள்ளது.

பண்டைய பாபிலோனியாவில் ஹம்ரோபியுடைய சட்டம் ஆட்சி செய்த காலத்தில் பெண்ணைத் தகப்பன் விருப்பப்பட்டவனுக்கு மணம் செய்து கொடுப்பான். இல்லையென்றால், ஆலயங்களில் ஒப்படைத்துவிடுவான். ஒருவன் மற்றொருவனுடைய மகளைக் கொடுமைப்படுத்தினால் அல்லது கொன்றால் அதற்குப் பழிதீர்க்கும் விதமாகக் கொடுமைக்காரனின் மகளைக் கொடுமைப்படுத்த வேண்டும் அல்லது கொலைசெய்ய வேண்டும் என்பதுதான் ஹம்முராபியுடைய சட்டமாக இருந்தது.

அராபிய நாட்டில் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு மிகவே சர்வசாதாரணமாக உள்வாங்க இதனால் பெண் குழந்தை பிறப்பதையே வெறுத்தனர். ஒருவனுக்கு பெண்குழந்தை பிறந்தால், அவன் முகங்கருத்து கோபமுற்று அதைத் தீயதாகக் கருதிச் சமூதாயத்தை விட்டே ஓடி ஒழிந்து கொள்வான். அல்லது அந்தப் பெண் குழந்தையை உயிரோடுப் புதைத்து விடுவார்களாம். மேலும் 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை ஆங்கிலேயே பொதுச் சட்டப்படி பெண்கள் பிரஜா உரிமை கொடுக்கப்படாதவர்களாக இருந்தனர். 1567 ஆம் ஆண்டு ஸ்கொட்லண்ட் பாராளுமன்றம் பெண்களுக்கு எந்த அதிகாரமும் கொடுக்கக்கூடாதென சட்டம் இயற்றியது. இவ்வாறே எட்டாவது ஹென்றியின் காலத்தில் ஆங்கிலேயப் பாராளுமன்றம் பெண்கள் அசுத்தமானவர்களாக இருப்பதால் இன்ஜீலைப் படிப்பது கூடாதென சட்டம் இயற்றியது. பிரான்ஸ்காரர்கள் 586 ஆம் ஆண்டில் பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்களா? இல்லையா? என ஆய்வு செய்து முடிவெடுக்க ஒரு சபை அமைந்தனர். அச் சபை பெண்கள் மனித இனத்தைச் சார்ந்தவர்கள் தான் எனினும் அவர்கள் ஆண்களுக்குப் பணிவிடை செய்வதற்காகவே படைக்கப்பட்டார்களென முடிவு செய்தது.

1805 ஆம் ஆண்டு வரை ஆங்கிலேயரின் சட்டத்தில் ஒரு கணவன் தனது மனைவியை விற்பது கூடுமென்றே கருத்து வந்துள்ளது. "பெண் என்பவள் எல்லாத் துக்கங்களுக்கும் தோஷங்களுக்கும் காரணமானவள் எல்லாத் துக்கங்களும், தோன்றுவது அவளிலிருந்தே ஆகும். ஆகவே அவளிடமிருந்து விலகியிருப்பதே ஆணுக்கு நல்லது. யாஜ்ருவல்யோ உபநிஷத்சுலோகம் - 12 பெண்களை பெறுங்கள் விவாகம் செய்யாதீர்கள். அப்போதே முக்தியடைய முடியும். (சுலோசம் 24)

"பெண்களோடு அன்னியோன்யமாகப் பழகாதீர்கள். அவள் இதயம் கழுதைப் புலியுடைய இதயம் போன்றது" (நிர்வேதம் 10 : 95 : 15)

நீ மனைவி இல்லாதவனாயிருந்தால், மனைவியைத் தேடாதே.
(11 கொறிந்தியர் 7.7 பவுல் புதிய ஏற்பாடு)

இவ்வாறு தான் பெண்போற்றப்படுகிறாள். ஆராதிக்கப்படுகிறாள். வஞ்சிக்கப்படுகிறாள். பெண் சுதந்திரமானவள் என்கிற அடைமொழியோடு இன்று உலகெங்கிலும் பெண்கள் சுரண்டப்படுகிறாள். அவளது பெண்மை சூறையாடப்படுகிறது. களங்கப்படுத்தப்படுகிறது. இருந்தும் கவர்ச்சியென்கிற மாயை வலைக்குள் அனுதினமும் பெண்கள் பெண்மையிழக்கப்பட்ட பேதை போதையாக கவனிக்கப்படுகிறாள் என்பது வருந்தத்தக்கதே.....

★★★

---

## ஒரு பாதை ஒரு நம்பிக்கை

அவள்!
பயணித்த திசை வழி
நீண்டதொரு மண்பாதை
முடிவிலோர் பட்டமரம்
உச்சிக் கொப்பில்
தனித்தொரு குயில்

புழுதி வாரி வீசும் காற்று
சுட்டெரிக்கும் வெயில்
நிழலில்லா கிளையும்
ஒடிந்து விடுமோ....?
சரிந்து விடுமோ....?
எச்சரிக்கையுடன்
தள்ளாடியது மரம்

ஒட்டியிருந்த உடம்பு
சூம்பிப்போன மார்புகள்
பசியால் உடல் தோய்ந்த
அவலம்
பால் கேட்டிடும் பிள்ளை
பேயாய் சுழன்றடிக்கும்
காற்று

கால்கள் தள்ளாடி
மயங்கி விழுந்தாள்
வீறிட்டழுந்தது
குழந்தை....
இன்னும் நீண்டிருந்தது
ஒற்றையடிப் பாதை

மீண்டும் சுழன்றடித்த
காற்றில்
சரிந்து விழுந்தது மரம்
கீச்சென்று பதறி
வெருண்டு பறந்தது குயில்

வாழ்வும் கனவும்
சோகம் கவடித்து
விடைகளாகிட
எப்போதே நிழல்
மரங்களாகும் வரை
காத்திருந்தது
ஒற்கைக் குயில்

- சிக்ரா அஸ்மி -

## குமிழ் நீர்

யார் யாரோ
நடந்த பாதைகளில்
நம் பாதங்கள் விரைகின்றன

எவர் எவரோ
அணிந்த பெஷன்கள்
இன்றைய நவீனமென
அணிவித்துக் கொள்கிறோம்

எந்தக் கவிஞனோ
வரைந்த கவிகளின்
அடிகளை
அருட்டுணர்வால்
இன்னொன்றாக புதிதாய்
கிறுக்கிறோம்

எல்லா பழையனவும்
புதியனவாய் நம்மை
அரவணைக்க
தனித்துவமின்றி
கனவுகளில் மிதக்கிறோம்
நனவை தொலைத்தவர்களாய்

நாம் கனவான்களாக
சஞ்சரிக்கிறோம் - நிஜவாழ்வில்
நிர்வாணத்தையும்
உண்மையும்
தொலைத்து

- சியானா அக்ரம் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தின் மணம்

சூழ்ந்து கொள்கிறது
மரணத்தின் மணம்
கைகளை அசைக்க விடாமல்
கால்களை நகர விடாமல்
உடம்பை அழுத்தும் அந்த மணம்.....
அதுவே மரணத்தின் நிழலுமா?

நள்ளிரவின் அமைதியில்
திடீரென ஒலித்த
தொலைபேசியின் ஒலி.......?
படுக்கையோரத்தில்
குத்தும் மூட்டைப்பூச்சி......?
இதமாய் ஒலிக்கும்
தனிமையின் ராகம்
இமை தடவும் போது
நடுவே தோன்றும் அபஸ்வரம்.....?

பகலில் உழைத்து
இரவில் களைத்து
தூங்க ஆயத்தமாகும் பின்னிரவில்
முகத்தில் அறைந்து போகின்ற
வைகாசி மாதக் காற்றைப் போன்று வரும்
மரணச்செய்தி
ரொம்ப அதிர்வைத் தருகிறது

அழகுபார்க்க வந்து
கண்ணாடியில் மோதி
பின் அதிலேயே உயிர்துறந்து
உறைந்து போகின்ற வண்ணாத்தி.....?
ஜன்னலிடுக்கில்
துடிக்கும் பல்லியின் வால்?
கதவோரத்தில் நசிந்து
ஒட்டி உலர்ந்து சப்பையாகிப் போன
தேரையின் உடலம்......?

இரவின் இருட்டு
தனிமையின் துயர்
சில்லிட்ட மண்குழியின் நினைவு....
எதுவோ கொண்டு வருகிறது
அந்த மணம்.....!

- கெகிறாவ சஹானா -

# அறிவுப் புரட்சி

A.R. Rasheek Rahman

அறிவுப் புரட்சி செய்த
ஆளுமைச் சமூகமே.....
அறிவு வரட்சியில் நீ இப்போ
ஆழ்ந்து கிடப்பது ஏன்?

அத்தனை அறிவையும் மிச்ச
சொச்சமின்றி மொத்தக்
குர்ஆனில் வைத்திருக்கும் நீ

சூரியனைக் கையில் வைத்துக்
கொண்டு இருளுக்குள்ளேயே
ஏன் இன்னும் சுற்றி வருகிறாய்?

அடுத்தவர் கண்ணில் குருவாய்த்
தெரிய வேண்டிய நீ
ஏன் இன்னும்
துருவாய்த் தெரிகிறாய்!

வா;
ஓர் அறிவுப் புரட்சி
உன்னால் தேவைப்படுகிறது
உலகுக்கு!
எழு...... ஏனெனில்,
நீ புரட்சி செய்யப்
பிறந்தவன்!

# பாலர்.....

- பர்ஹானா சியார்டீன் -

வெண்புறா கூட்டம் போல்
வெள்ளை உடை அணிந்து
முதுகிலே சுமையைத் தாங்கி
மனதிலே கனவுகள் ஏந்தி
பள்ளிச் சிறார்கள்

பாடசாலை நோக்கியே
பரவசமாய்ச் சென்றனர்
பள்ளியறையிலே...
பாடங்கள் பயின்று
பண்புடனே வாழ்ந்து
உயர்ந்த மனிதர்களாய்
உலகிலே வாழ்ந்திடுவார்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENT FROM....







# AQUENCHE CONTINENTEL (PRIVATE) LTD.

AL HAJ M.M KALEEL

077 3817475

292/E/1, 6th Mile Post, Madawala Bazaar.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வி மாணவர்களின் ஆளுமை விருத்தியும், அவர்களுக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் மனப்பாங்குகளும்

**T.F. Razeen (Ph.D. Reading)**
விரிவுரையாளர் - மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி (MNCOE)




கல்வித் துறையானது இன்று மிகப்பரந்த ஒரு துறையாகப் பரிணமித்துள்ளது. ஒருவரது முழு வாழ்க்கைக் காலத்தினுள் ஒரு தனிப்பட்ட பாடப் பரப்பையேனும் முழுதாகக் கற்று முடிக்க முடியாத அளவிற்கு அது வியாபித்துள்ளது. கல்வி என்பது ஒருவரால் மற்றவருக்கு வழங்கக்கூடிய ஒன்றல்ல. மாறாக அது சுயமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். குறிப்பாக ஆரம்பக் கல்வியானது சிறந்த அனுபவங்களை பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்கான சிறப்பான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுப்பதேயாகும் என்பது இன்று உணரப்பட்டுள்ளது.

ஆசிரியனுக்காக மாணவர் சமூகம் படைக்கப்படவில்லை. பாடசாலைக்காகவே ஆசிரியன் படைக்கப்பட்டுள்ளான் என்ற அடிப்படைத் தத்துவத்திற்கமைய ஆசிரியனின் பணியின் முக்கியத்துவமானது இன்று தெளிவாக்கப்பட்டாலும் ஒரு மாணவனை சமூகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறப்பான உற்பத்தியாளனாக அல்லது அச் சமுதாயத்தின் நற்பிரஜையாக உருவாக்குவதே என்ற நோக்கத்தை எய்துவதில் ஆசிரியரின் பங்களிப்புக்கள், தியாகங்கள், மனப்பாங்குகள் மிகப் பிரதானமானவையாகும்.

கடந்த கால கல்வி முறைமையின் மூலம் உருவாக்கப்பட்ட பெரும்பாலான மாணவர்களிடத்தே செயன்முறைத் திறன்கள், சுய நம்பிக்கை, ஆளுமைப்பண்புகள் போன்றன போதியளவில் விருத்தியடைந்துள்ளதாகத் தென்படவில்லை. ஏனெனில் அப்போதைய கல்விக் கோலமானது பாடவிடயங்களை மனனம் செய்து பரீட்சை வினாத்தாள்களுக்குப் பொறிமுறை ரீதியில் விடையளிப்பதற்கு மாணவர்களைப் பயிற்றுவிக்கும் ஒன்றாகவே அமைந்து காணப்பட்டது எனலாம். இருப்பினும் அதிலிருந்து விலகிச் செல்லும் முயற்சியில் கல்விச் சிந்தனைகள் இன்று முன்வைக்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் "மனனமும் பரீட்சையும்" என்ற எண்ணக்கருவிலிருந்து ஆசிரியர்கள் முழுமையாக இன்னும் விடுபடவில்லை என்றே கூறலாம். இத்தகைய மனனப் பயிற்சியின் விளைவே பிற நாடுகளில் நடைபெறுகின்ற மனனப் போட்டிகளில் எமது மாணவர் சமூகம் வெற்றியினை இலகுவாக ஈட்டிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. இத்தகையோரை ஒரு சிலர் கற்றறிந்தோர் என வகைப்படுத்திக் கூறுவதும் உண்டு.

பொதுவாக ஒரு மாணவனை சிறப்பான ஒருவனாக சமுதாய சீர்த்திருத்தவாதியாக மக்கள் ஏற்றுக் கொள்ளும் ஒருவனாக உருவாக்க வேண்டிய பணி ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. **அதாவது நீங்கள் உங்கள் பிள்ளைகளை என்னிடம் ஒப்படைத்துச் செல்லுங்கள். நீங்கள் அப்பிள்ளைகள் எதிர்காலத்தில் எவ்வாறு ஆக வேண்டும் என்று விரும்புகின்றீர்களோ அவ்வாறு மீண்டும் உங்களிடம் உருவாக்கி ஒப்படைக்கின்றேன்** என்பது ஒரு சமூகவியலாளரின் கூற்றாகும். இக்கூற்றிற்கு அமையக் கூறுவதாயின் எதிர்கால நல்லோர்களை இன்றைய நல்லாசிரியர்களால் உருவாக்கிக் கொள்ள முடியும் எனலாம்.

ஆரம்ப நிலைக் கல்வியில் வகுப்பறைக் கற்பித்தல் முறை முற்றிலும் ஆசிரியர் செயற்பாடாகவும், முயற்சியாகவும் மற்றும் அவரது வாய்மொழிக் கற்பித்தலாகவும் அமையாது பிள்ளைகளின் செயற்பாடுகளுக்கும், குழுப்பணிகளுக்கும், சுயசிந்தனைக்கும், கருத்து வெளிப்பாட்டுக்கும், ஆளுமைத் திறன்களை வெளிக்காட்டுவதற்கும் இடமளிப்பதாயும் பல்வகைத் தன்மை கொண்டதாயும் அமைதல் வேண்டும் எனும் கருத்துக்கள் நவீன கல்விச் சிந்தனைகளில் வலியுறுத்தப்படுகின்றது.

மேலும் ஆரம்ப நிலைக் கல்வியில் பிள்ளைகள் சுதந்திரமாகச் செயற்படவும், விளையாட்டு முறையில் கற்கவும் தாமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டறியவும், கலந்துரையாடவும், சிந்தனைகளை வெளியிடவும் வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்ற தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஆலோசனைகளை மிகத் தெளிவாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அறிந்து வைத்துள்ளனர் என்பதும் வியப்பான விடயமும் அல்ல எனலாம்.

எனவே ஆரம்பக் கல்வி மாணவர்களின் ஆளுமை விருத்தியில் அவர்களுக்கு கற்பிக்கின்ற ஆசிரியர்களின் பணி முக்கியம் வாய்ந்ததாகும். அவர்களின் தொழில்வாண்மை நிபுணத்துவம் சிறந்த கற்றல் - கற்பித்தல் முறைகளின் ஒழுங்கமைப்பு போன்றவற்றிலேயே இம் மாணவர்களுடைய எதிர்கால வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகின்றது என சுருக்கமாகக் கூறலாம்.

மேலும் ஆசிரியர்களுக்கு எவ்வளவு தான் தொழில் தகமை இருந்த போதும் மனப்பாங்கு ரீதியான மாற்றம் ஏற்படாதபட்சத்தில் அக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது உயிரோட்டமானதாகவோ, உண்மை அர்த்தத்தினை வெளிக்கொணரக்கூடியதாகவோ அமையாது. அதாவது பிள்ளைகளிடத்தே அறிவுத்திறன், மனப்பாங்குகள் போன்ற முழுமையான விருத்தியை அடையச் செய்து கொள்ள முடியாது. இந்நிலையில் எவ்வாறு சிறப்பான மனித நேயமிக்க வாழ்க்கைக்கு சிறந்த ஆளுமைமிக்க ஒருவனை இன்றைய சமுதாயத்திற்கு ஒப்படைக்கலாம் என்பது இன்றைய கல்வியியலாளர்களின் சிந்தனைகளில் ஒன்றாகும்.

கல்விக் கோட்பாடுகள் கல்வி என்பதனை இரண்டாக வகைப்படுத்தி விளக்க ஆரம்பித்து விட்டன.

I. லௌகீக கல்வி

ii. ஆத்மீக கல்வி

இவ்வாறு இன்று இது இரண்டாயினும் உண்மையில் கல்வி என்பது ஒன்றே. எனவே ஒரு மாணவனது எதிர்கால வாழ்வியல் போக்கை நிர்ணயிப்பது அவனது ஆரம்ப கல்வியாகும். இச் சந்தர்ப்பத்தில் அவன் பெறும் அனுபவங்களே கல்வியாகும் என்பதனை எவராலும் மறுக்க முடியாது. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் ஆத்மீக ரீதியான கருத்துக்கள் அவர்களின் கல்வி வளர்ச்சியில் சிறப்பான களம் ஒன்றினை அமைத்துக் கொடுக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அதாவது ஆரம்பக்கல்வி தரம் ஒன்றில் நுழையும் மாணவர்களின் மனத்தினை ஒரு வெற்றுக்குடத்திற்கு அல்லது எழுதப்படாத வெள்ளைக் கடதாசிக்கு ஒப்பீடாகக் கூறலாம். எனவே அதில் எழுதப்படுகின்ற ஒவ்வொரு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களும் அர்த்தமுள்ளதாக, மனிதனுடைய வாழ்க்கைக்கு என்றும் பயனளிக்கக்கூடியதாக அமைதல் வேண்டும். இதில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மிக முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும்.

ஆரம்ப வகுப்புக்களில் ஒவ்வொரு முதன்மை நிலைகளிலும் அடைய வேண்டிய தேர்ச்சிகள் இருவகைப்படும்.

i. பாடம் சார் தேர்ச்சிகள்
ii. பாடம் சாராத தேர்ச்சிகள்

பாடம் சாராத தேர்ச்சிகள் என்பதனை பின்வரும் எண்ணக்கரு மாதிரி உருவின் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.




இவை சந்தர்ப்பத்தைப் பொறுத்து பாடம் சார் தேர்ச்சிகளாகவும் அமையலாம். அத் தேர்ச்சிகளின் மையமாக அமைவது மாணவர்களின் ஒன்றிணைந்த ஆளுமை விருத்தியாகும்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களினால் முறையான கற்றல் அனுபவங்களையும் ஒழுங்கான கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தப்பட்ட மாணவர்கள் இடைநிலைக் கல்வி என்றாலும் சரி உயர்கல்வி என்றாலும் சரி தங்களை மேலும் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்வர் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் கிடையாது. மாறாக ஆரம்பக்கல்வியில் புறக்கணிக்கப்படும். மாணவர்கள் பல்வேறு வகையில் இடைநிலை வகுப்புக்களில் இன்னல்களையும், முரண்பாடு-களையும் எதிர்நோக்கினாலும் முன்னைய குறைந்த கற்றல் அனுபவங்கள் அவர்களைத் தோல்வியடையச் செய்கின்றன. இது இறுதியில் அவர்களை நெறிப்பிறழ்வான நடத்தைகளுக்குக் கொண்டு செல்கின்றது. இதனையே நாம் இடைநிலை ஆசிரியர்களாலும், பெற்றோர்களாலும் தற்பொழுது கூறக்கேட்டுக் கொண்டு இருக்கின்றோம்.

*With Best Compliments From*

# UNION HARDWARE STORES

**Dealers in Hardware, Electrical Goods, PVC Pipes & Fittings, Water Tanks & Paints etc.**




**No. 225/2-A, Kandy Road, Madawala Bazaar.**
**Tel: 081 2476444 Mob: 077 3853743**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியலாளரான 'சிக்மண்ட் புரொய்ட்' என்பவர் தனது ஆராய்ச்சியில் **சிறுபராயத்தில் ஒருவனால் நிறைவேற்றப்படாத ஆசைகள் மற்றும் மற்றவர்களால் புறக்கணிக்கப்படுகின்ற தன்மைகள் மற்றும் பெற்றோரினால் கிடைக்கப்பெறாத தேவைகள் போன்றன அவர்களுக்கு முறையாக கிடைக்கப்பெறாத பட்சத்தில் அப்பிள்ளைகள் பல்வேறு உளப்பிரச்சினை-களுக்கு ஆளாக நேரிடும்** என்கிறார். எனவே அவன் சிறந்த ஆளுமையுள்ள நற்பிரஜையாக மாற வேண்டுமாயின் அவனின் ஆரம்பக்கல்வியானது பொருத்தமானதாக, அர்த்தமுள்ளதாக அவனது சுயாதீன சிந்தனைக்கு வழியமைப்பதாக இருத்தல் வேண்டும்.

ஏனெனில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு உள்ளாகின்ற மாணவர்கள் அத்தேவைகளை குறிப்பாக தங்களது ஆசிரியர்க-ளிடம் எதிர்பார்ப்பர். இச் சந்தர்ப்பத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் முனைப்பாக செயற்பட வேண்டும். இதனை அவ்வாசிரியர்கள் வெற்றிக் கொள்வதற்கு கல்வி உளவியல் தொடர்பான அறிவை பெற்றிருந்தால் மட்டும் போதாது. அதனை முறையாக வகுப்பறை-களில் பிரயோகிக்கவும், தெரிந்திருக்கவும் வேண்டும்.

மேலும் பிள்ளையின் தேர்ச்சி மட்டத்தினை விட கூடுதலான கற்றல் பெறுபேறுகளை அவர்களிடமிருந்து எதிர்பார்த்தல் அல்லது தேர்ச்சி மட்டத்தினை விட குறைவான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வழங்கி ஈடுபடுத்தலானது அப்பிள்ளையின் ஆளுமைகளை பாதிப்படையச் செய்யும் எனலாம். குறிப்பாக பிள்ளையின் தேர்ச்சி மட்டத்தினை விட கூடுதலான அடைவுகளை தொடர்ந்து தேர்ச்சியாக ஆசிரியர்கள் எதிர்ப்பார்க்-கின்ற போது பிள்ளையிடம் "இயலாமை" என்ற எண்ணக்கருவினை தோற்றுவிக்கும்.

கற்றல் - கற்பித்தல் முறையியலில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் போதிய அறிவினை பெற்றிருந்தாலும் **கற்பித்தல் என்பது இன்று அறிவைக் கடத்துவதன் ஊடாக மாணவர்களைத் தகவற் களஞ்சியங்களாக ஆக்குவதற்குரியதல்ல.** மாணவரிடையே விடயம் தொடர்பாக சிந்திக்கும் வழிமுறைகள், பெற்ற அறிவைப் பிரயோகிக்கும் திறன்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்குரியது. ஆரம்பக் கல்விக் கலைத்திட்டம் தேர்ச்சி மையக் கலைத்திட்டமாக இருந்தாலும் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் நோக்கிய செயற்பாடுகளின் போது மாணவர்கள் சிலரிடையே கற்றல்


*With Best Compliments From*

**MADEENA FURNISHING HOUSE (PVT) LTD.**

**Furniture Dealers**



**Office:**
No. 87, Kandy Road,
Madawala Bazaar.
Res: 081 2475698
Tel: 081 2476546, 081 2475524

**Branch:**
No: 29, Kandy Road,
Madawala Bazaar.
Tel: 081 2475697


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னடைவு காணப்படுவதற்கு பின்வரும் காரணமாகவும் அமையலாம்.

* கற்றல் பொருள் விளங்காமை.
* சொற்கள் குறிக்கும் எண்ணக்கருக்கள் விளங்காமை.
* படிமுறைக் கற்றலில் ஒரு படி விளங்காமை.
* மாணவரின் நுண்மதி.
* சுய ஊக்கமின்மை.

தத்துவஞானியான 'பிளேட்டோவின்' கருத்துரையில் **ஒரு ஆரம்பக்கல்வி ஆசிரியரானவர் ஒரு தாய் பிள்ளைகளை அவர்களின் உடலை அழகுபடுத்துவது போல் ஆசிரியர் நல்ல கதைகளின் மூலம் பிள்ளைகளிடம் நல்ல மனப்பாங்கினை வளர்க்க வேண்டும்** என கூறுகின்றார். எனவே இவர்களின் மனதை செழுமைப்படுத்தக்கூடிய நல்ல சிந்தனைக்கும் உயிரோட்டமான வாழ்க்கைக்கும் வித்திடக்கூடிய வகையில் ஆசிரியர்களின் மனப்பாங்குகளின் தேவை இன்று உணரப்பட்டு வருகின்றதெனலாம்.

அத்தோடு ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் கட்டாயம் முன்மாதிரியாக இருக்க வேண்டிய நிர்பந்தமும் காணப்படுகின்றது. ஆசிரியரின் தொடர்பாடல் முறைகள் சமூகத்திற்கும், கற்றல் கற்பித்தல் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவகையில் பிள்ளைகளை வழிநடத்தக் கூடியதாகவும் அமைய வேண்டும். ஏனெனில் ஆரம்பக்கல்வி மாணவர்கள் அவ்வகுப்பு ஆசிரியர்களையோ அல்லது ஏனைய பாடசாலை ஆசிரியர்களையோ அவதானிக்கக்-கூடும். எனவே அவரைப் போன்று தங்களை மாற்றி தங்களது அன்றாட வாழ்விலும் பின்பற்ற நினைப்பார்கள். எனவே ஆசிரியர்களுக்கே உரிய தனித்துவமான நல்ல பண்புகளுடைய ஆசிரியனாக தன்னை பரிணமித்துக் கொள்ளுதல் சிறப்பானது. இந்த நடவடிக்கை தனியே வகுப்பறை சூழலில் மட்டுமன்றி ஏனைய எல்லா சந்தர்ப்பங்களிலும், எல்லா இடங்களிலும், சமூகத்தின் மீது நல்ல கணிப்பை ஏற்படுத்துகின்ற வகையில் தம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய ஒரு கட்டாய நிலை இன்று காணப்படுகின்றது எனலாம்.

ஆரம்பப் பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் தண்டனைகளை வழங்குவதில் உள்ள ஆர்வத்தினை, அப்பிள்ளைகளை பாராட்டுவதில், கணிப்பதில் காட்டுவது குறைவே என்றே கூற


With Best Compliments From




All branded Tyres & Tubes, Tyre Retreading & Scrap Tyre Rubbers.

Workshop:
No 59, Kandy Road, Madawala Bazaar, Kandy, Sri Lanka.

Factory:
No 150, Paniwila Road, Wattegama, Rasela, Kandy Sri Lanka.

email : ktt.inter@gmail.com Tel/Fax 0812 470428


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு தண்டனைகள் எந்தக் காரணங்களுக்காக வழங்கப்பட வேண்டும்? அவை எவ்வாறு வழங்கப்பட வேண்டும்? தண்டனைகளை வழங்க முன்பு தண்டனைகளைப் பற்றிய விளக்கத்தினை பிள்ளைகள் பெற்றுள்ளனரா? என்ற அறிவினை முன் கூட்டியே ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றிருக்க வேண்டும். எனவே தண்டனைகள் அப்பிள்ளையின் உடல் பெற வேண்டுமே தவிர அதன் உள்ளம் பெறக்கூடாது. இன்று ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகள் தண்டிக்கப்படுகிறார்கள் என்பதை விட அவர்களின் ஆளுமைகள் தகர்க்கப்படுகின்றன என்று தான் கூற வேண்டும்.

இதனாலேயே தான் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) அறிக்கை ஒன்றின்படி இலங்கை ஆரம்பப் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவோரில் பல்கலைக்கழகத்திற்கு நுழைவோரைவிட உளப்பாதிப்படைந்தோராக பாடசாலை-களிலிருந்து வெளியேர்வோர் அதிகமாக காணப்படுகின்றனர்.

இறுதியாக கூறவருவது என்னவெனில் ஆசிரியர்கள் பிள்ளைகளை கணிப்பீடு செய்வதற்கு முன்னர், பாடசாலை சமூகத்தினால் தாங்கள் கணிப்பீடுகளுக்கு உள்ளாக்கப்-படுவதற்கு முன்னர் தங்களை தாமாகவே ஆரம்பத்திலிருந்தே கணிப்பீடு செய்து கொண்டு வருவார்களேயானால் நல்ல மனப்பாங்கை கொண்டவர்களாயும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகவும் காணப்படுவார்கள். அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அவர்களாகவே இனங்கண்டு சீர்செய்யக்கூடிய ஒரு சீர்த்திருத்தவாதியாக தன்னை பரிணமித்து செயற்படுவார்களாயின் நல்லாசிரியர்களின் பட்டியலில் தங்களுடைய பெயர்களையும் பதியவைப்பார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனலாம்.

எனவே காலத்தால் என்றும் அழியாத உண்மைக் கருத்துக்களை, பொய்யுடன் கலக்காது மாணவர் சமூகத்தின் ஆளுமைப் பண்புகளை மேலோங்கச் செய்பவர்கள் ஆசிரியர்களே! என்றால் அது மிகையாகாது எனலாம்.

★★★


**36928 likes us on facebook**

Thank you for the support : Team Madawalanews




**www.madawalanews.com**

madawalanews@yahoo.com

0772 681813 / 0777935077 / 0777664054

Main Sponsors : Hillcountry Int. School (Madawala Bazaar), Pearl Jwellers (Madawala Bazaar), Aichi Lanka Pvt ltd. (kandy).




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிட்டுத் தன்மையும் பேச்சாற்றலும்

**Mrs. Rizwan**
(Speech Therapist)

ஒரு குழந்தையின் செவிப்புலன் என்பது அதனால் கேட்கக்கூடிய தன்மையாகும். மானிடராய் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் செவி மற்றும் அதனுடைய அனைத்து பாகங்களும் இருந்தாலும் செவிப்புலன் அதாவது கேட்கும் தன்மை இல்லாதிருக்கலாம். சாதாரணமாக ஒரு குழந்தை கருவரையில் இருக்கும் போதே கேட்க ஆரம்பிக்கிறது. இக்குழந்தை பிரசவத்திற்கு பின்னர் தான் கேட்கும் சத்தங்களுக்கான காட்சியை கண்களால் பார்த்து மேலும் புரிந்து கொள்கிறது. இவ்வாறு படிப்படியாக கேட்பதன் மூலமே 12ம் மாத தொடக்கத்தில் ஒரு சில சத்தங்களோடு பேச ஆரம்பிக்கிறது. இப்பேச்சு 24ம் மாத முடிவில் முழுமையான வாக்கியங்களாக கேட்பவருக்கு புரியும் விதத்தில் தெளிவானதாக-வோ அல்லது தெளிவற்றதாகவோ அமைகிறது.

கேட்கும் திறனை இழத்தல் பொதுவாக பிறப்பிலேயே ஏற்படும் ஒன்றாகும். பிறக்கும் 1000 குழந்தைகளில் அண்ணளவாக 2-4 குழந்தைகள் கேட்கும் திறனின்றி பிறக்கின்றனர். ஆரம்பத்தி-லேயே அதாவது மூன்றாவது மாதமளவில் இனங்கண்டால் கேட்டலுடனான பிரச்சினைகளை குணமாக்க இடமுண்டு. பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் மூளையில் ஒரு பேச்சு மையத்துட-னேயே பிறக்கிறது. ஆனால் கேட்கும் திறன் இருந்தால் மட்டுமே இப்பேச்சு மையம் வேலை செய்யும். விரைவாக இக்குழந்தை கேட்கும் பட்சத்தில் இப்பேச்சு மையம் திறம்பட விருத்தியடையும். செவிடாக பிறக்கும் குழந்தை ஆரம்பத்திலேயே இனங்காணப்படாவிடின் ஒலியானது மூளையை அடையாததுடன் இக் குழந்தையின் பேச்சுத்திறனும் விருத்தியடையாது.

**உங்கள் குழந்தைக்கு....!**

- **முதல் மூன்று மாதத்தின் போது :**
  பெரிய சத்தத்திற்கு திடுக்கிடும் அல்லது தெரிந்த குரலுக்கு அமைதியாகும் தன்மை.
- 3-6 **மாதத்தின் போது :**
  சத்தம் வரும் திசையை நோக்கி தலையை திருப்பும் தன்மை
- 6-10 **மாதத்தின் போது :**
  பொதுவான வார்த்தைகளை (உதாரணமாக இல்லை, ஆம், டாட்டா) கூற ஆரம்பிக்கும் தன்மை.
- 12-18 **மாதத்தின் போது :**
  இலகுவான கட்டளைகளை பின்பற்றும் தன்மை, உடல்பாகங்களை காட்டும் தன்மை.

மேற்கூறிய தன்மைகள் இல்லாவிடின் உங்கள் குழந்தையை கேட்டல் திறனுக்கான பரிசோதனைகளுக்குட்படுத்த வேண்டியிருக்கும். மேலைத்தேய நாடுகளில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் பிறந்து 3 வாரங்களுக்குள் கேட்கும் திறனுக்கான சோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்ற சட்டம் உண்டு.

கேட்கும்திறன் இழத்தலிற்கு ஆளாகக்கூடிய அபாய காரணிகளை கொண்ட குழந்தைகள் பிறந்த உடனேயே அழாத குழந்தைகள்.

சுவாசிப்பதற்கு உபகரணங்களின் உதவியை அதிக காலம் நாடும் குழந்தைகள். பரம்பரையில் செவிட்டுத்தன்மையை கொண்டிருத்தல், மஞ்சட் காமாலையை கொண்டிருத்தல், தாய் கர்ப்பத்தின் போது தொற்று நோய்களுக்கு ஆளாயிருத்தல், குழந்தை மூளை காய்ச்சலுக்கு ஆளாயிருத்தல், 1500g இற்கு குறைவாக பிறப்பு எடையை கொண்டிருத்தல்.



CITY CEREMICS
LANKA TILES

Dealers in Floor Tiles, Wall Tiles, Bathroom Accessories, ceremic plague ect.,

No.49/A Kandy Road, Madawala Bazaar, Mobile : 0777 299132 / 0777 861330



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் கேட்கும் திறனை பரிசோதிக்க இன்றைய நவீன வைத்திய துறையில் நிறைய பரிசோதனைகள் வந்துவிட்டன. இப்பரிசோதனைகள் உடலை ஊடுருவாத நோவற்ற முறையினால் செய்யப்படுகின்றன. முக்கியமாக குழந்தை ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் போது மேற்கொள்ளப்படுகிறது. OAE, ABR (BERA), ASSR, PTA, Immittance Audiometry, Free filed Audiometry போன்றன அவற்றுள் சிலவாகும்.

உங்கள் குழந்தையின் கேட்டல் திறனில் குறைபாடு இருப்பின் அதை ஆரம்பத்திலேயே அறிந்து அதற்கான சிகிச்சையை பெறுவதன் மூலம் பேச்சு விருத்தியை திறம்பட உருவாக்கலாம். ஆனால் சிகிச்சையை ஆரம்பிக்க காலம் தாழ்த்தும் பட்சத்தில் குழந்தையின் பேச்சும் காலம் கடந்து அல்லது நீண்ட காலத்தின் பின்பே சரிவர அமையும். எனவே கேட்டல் குறைபாட்டு சிகிச்சையில் வயது மற்றும் சுற்றுச்சூழல் மிகவும் செல்வாக்கு செலுத்துகிறது.

குறைபாட்டுத்தன்மையின் அளவிலேயே அதற்கான தீர்வும் தீர்மானிக்கப்படுகிறது. சிலருக்கு கேட்டல் குறைபாடு சிறிய கேட்டல் ஆதார உபகரணம் (Hearing aid) உபயோகப்படுத்துவதன் மூலம் குறைபாட்டை நிவர்த்திக்கலாம். கேட்டல் குறைபாடு அதிகமாக இருப்பவர்கள் அதாவது அதிதீவிர செவிட்டுத்தன்மை காணப்படின் ''நத்தைச் சுருள் மாற்றீட்டு சத்திர சிகிச்சை" (Cochlear Implant) மூலம் மட்டுமே செவிப்புலனை திரும்ப பெற முடியும்.

எவ்வாறாயினும் எந்தவொரு சிகிச்சையின் பின்பும் முறையான பேச்சுப் பயிற்சி பெற்றால் மட்டுமே சரிவர தெளிவாக பிழையின்றி பேச முடியும்.

உங்கள் குழந்தையின் பேச்சில் அல்லது கேட்டல் தன்மையில் ஏதாவது குறைபாடு தென்படின் காலம் தாழ்த்தாது கேட்டல் வல்லுநரை (Audiologist) அல்லது பேச்சுப் பயிற்றுவிப்பாளரை (Speech Therapist) நாடி ஆலோசனையை பெற்றுக்கொள்ளுங்கள்.

★★★ ★★★


*With Best Compliments From*

**W.M. Rismy**
**Proprietor**

# ZAM ZAM TRADERS




**No.165/C, Wanguwa Kade, Madawala Bazaar.**
**Tel : 081 2470700**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரிஸானா வறுமையின் குறியீடு

எத்தனை காலத்திற்குத்தான்
இந்த பசியும் பட்டினியும் வறுமையும்
உம்மா......!

நானும் வெளிநாடு போகிறேன்
தம்பி தங்கைகளை
படிப்பிக்க வைக்கவும்
நாமும் வீடு கட்டி
சந்தோஷமாக வாழ்ந்திட
நானும் வெளிநாடு போகிறேனே....!

நோயாளியான வாப்பாவும்
காடு மல மீதேறி
வெறகு வெட்டி
கால் வயிறு அரை வயிருன்னு
எத்தனை நாளைக்குத்தான்
எங்களுக்காக
கஷ்டப்படுறது....!.
நானும் வெளிநாடு போகிறேன்
உம்மா........!

ஒரு பூவைக் கூட
கொய்யாத என்னை
குழந்தையை கொன்றதாக
சொல்றாங்க உம்மா
அல்லாஹ் அறிய
குத்தம் செய்யல
என்ன உட்டுட
சொல்லுங்க உம்மா......!

மாநபி பொறந்த மண்ணில்
மன்னிக்கத் தெரியாத
எஜமானி – என்
தலை உருள வேண்டுமாம்
அவள் இரத்தப் பசி தீர

அல்லாஹ் வகுத்த நீதி இது
புனிதர்களின்
பூமியிலே என்
இரத்தத் துளியும்
மறுமையில்
இறை சன்னிதானத்தில்
ஒளி வீசும்

மன்னித்து விடுங்கள்
உம்மா.......! வாப்பா.......!
மன்னித்து விடுங்கள்......!
தம்பி தங்கையே
உங்களதும் எனதும்
ஆசைகள்
நிறைவேறாமலே.....!

வறுமையின்
சிவப்புத்துளிகளில்
துயில்கிறேன்....!
மறைகிறேன்....!

## எங்களுக்கும் ஒரு மரமிருந்தது

அப்பாவும் உம்மம்மாவும்
வாப்பாவும் உம்மாவும்
சொன்னாங்க
இது எங்கட மரமுன்னு
நம்மட புள்ள நட்ட மரமுன்னு
இந்த மண்ணுல தளச்ச
ஆணி வேறுன்னு
நெஞ்சுயர்த்தி – ஏண்ட
நானாவும் சொன்னாரு

குர்ஆனும் சுன்னாவும்
தக்பீர் சொல்லி
வளர்த்த மரம்ன்னு
கீச் குரலால்
தங்கையும் கத்திச் சொல்வாள்
ஒரே குடும்பம் போல
ஊரே கூடி நின்று
மரத்திடம் கதை கேட்போம்
மரத்தைச்சுற்றி விளையாடினோம்
ஊஞ்சலும் கட்டி ஆடுவோம்

வெயிலுக்கும் மழைக்கும்
சூறைக்காற்றுக்கும்
தன் கிளை நிமிர்த்தி
வீரம் காற்றிற்று
நமக்கெல்லாம் பெருமைதான்
காற்றின் திசையெங்கும்
மரமதின் புகழ்
ஓங்கி ஒலித்திற்று

பகலில் யானைகளும்
இரவில் தேவதைகளும்
மரத்தை வளம் வந்தன
சிவப்பும் காவியும்
துவவேஷம் கக்கிற்று

தாருட கண்பட்டதோ
மரத்தின் குடியானவன்
அரநாயக்காவில்...
ஹெலியில் பறந்தபோது
அகால மரணமான
மகாராசன்

இனியென்ன
சின்னச் சின்ன சாம்ராஜ்யங்களின்
குருநில மன்னர்களென
தலைவர் வழி நாமென்று
நம்மவரின் கம்பீர வீர வசனம்
தெருவுக்கொருவர்
தலைவரானார்கள்

மீண்டும் வருமொரு
தேர்தல் காலமதில்
நம்ம தலைவர்களும்
நாரே தக்பீரோடு வருவான்....
கூன் விழுந்த உம்மம்மாவின்
முதுகைப்போல
நம்மட சனத்தின் வாழ்க்கையும்...!

- சுஹார் ரஹ்மான் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயன்னையம்மாதாய்

**நூல் விமர்சனம்**

- மடவளையூரான் -

நாம் வாழும் காலத்தின் - சிறந்த எழுத்துக்களை விதைக்கும் எழுத்தாளர் 'அல் அஸுமத்' என்றால் இது விதிவிலக்கானதல்ல. தான் சந்தித்த அனுபவித்து நெகிழ்ந்தவைகளையே கதைகளாக சிருஷ்டித்து - வாசகர் முன் ஓர் திரைமொழி போல் நகர்த்திச் செல்வதிலும் அக்கதாபாத்திரங்கள் தம் முன்பே நிகழ்வதைப் போல உணர்வையும் சம்பாஷணைகளையும் கதைகளினூடாக நம்முடனான ஓர் கலந்துரையாடல் அனுபவத்தை அவரின் கதைகள் என்னுள் பதித்தவையாகும்.




ஒவ்வொரு எழுத்தையும், சொல்லையும் ஒவ்வொரு வசனத்தையும் - ஒவ்வொரு பந்தியையும் செதுக்குவதிலும், சிக்கனப்படுத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே தான். எத்தனை நாள் - எத்தனை கிழமை எத்தனை மாதங்கள் எத்தனை வருடங்கள் கடந்தாலும் அதை செதுக்கி, பூரணப்படுத்தி தனக்கு முழுமையான திருப்தியை அளிக்கும் போதே அதனை வெளியிட, பிரசுரிக்க வைக்க எடுக்கும் பொறுமை சகிப்பு அதன்பால் அவரின் மானசீகமான ஈடுபாடு பிரமித்து மதிக்க வைக்கும் எழுத்துக்களின் உச்சம் இதுவென அவரை அடையாளப்படுத்துகின்றன.

கதைக்கரு கதைத்தளம், கதை சொல்லும் பாங்கும் அதை கதாபாத்திரங்களினூடாக நகர்த்திச் செல்லும் லாவகம் - வாழ்வின் பாசாங்கற்ற தரிசனம், உரையாடல், உள்ளதை உள்ளபடியுரைக்கும் கலைஞர்கள், கதைகளினூடே இழையோடும் நையாண்டி எதிலுமே தள்ளி நிற்கும் கற்பனையும் - பதர் சொற்களும் வேறெந்த எழுத்தாளர்களின் எடுத்துக்களிலும் காணக்கிடைக்காத தரிசனம் எனலாம்.

இவை மிகைப்படுத்தப்பட்ட சொற்களல்ல. அல்-அஸுமத்தின் கதைகளை தொடர்ந்து வாசித்தவர்களின் அனுபவச் சிதறல்களாகவே உள்ளதை மறுதலிக்க இயலாது. கதைகளுக்காக எங்கேயும் அலைந்திராமல், தன் வாழ்வின் தடயங்களை, காயங்களை, அனுபவங்களை, தான் சார்ந்த அன்றாட காய்ச்சிகளின் அசைவுகளை படம் பிடித்துக் காட்டும் சாத்தியமான எழுத்துக்கள் பாசாங்கற்ற உவமைகள், ஒப்பனைகள், மிகைப்படுத்தப்படாத வாழ்வின் துயரங்களை, ஓட்டை உடைசல்களை அவர்களின் மொழியிலேயே அவர்களினூடாகவே கதையை நகர்த்துவதைப் போன்ற ஓர் தோற்றப்பாட்டை இவ்வெழுத்துக்களின் ஊடாக அவர் வாசகனை ஊடறுத்துச் சென்று வெற்றியடைகிறார்.

அவரின் கதைகளினூடே நாம் ஒன்றித்து பயணிக்கும் போது, இவ்வெழுத்துக்கள் எப்படி இவருக்குள் சாத்தியமாகின்றது என்ற பிரமிப்பு சொல்லாளுமை புதிய சொற்களின் அணி வகுப்பு இவருக்குள் எப்படி பிரவாகிக்கின்றது என்பது நமது தேய்ந்து போன சிந்தனைக்குள் ஆய்வுக்குட்பட்டதே.

அவ்வகையில் அண்மையில் அவரால் வெளியிடப்பட்ட "ஆயன்னையம்மாதாய்" பெயரே அலாவுதீனின் அற்புத விளக்குப் போல் வாசிக்க வாசிக்க சிந்தனைத் தேடலையும் பரந்து விரிந்த கதைத்தளத்தின் முடிச்சுகளையும் சலனங்களையும் தோற்றுவிக்கின்றது. இத்தொகுதியில் அமையப்பெற்ற கதை மாந்தர்கள் நம் அன்றாட வாழ்வியல் சூழலில் நம்மோடு பங்கெடுக்கும் சுற்றத்தார்களாகவோ உறவினர்களாகவோ நமது உடன்பிறப்புக்களாகவே.... நம் மனதிற் ஆழப்பதிகின்றனர்.

வாசித்து விட்டு வைத்தபோதும் கதைகளினூடே இளையோடும் நகைப்பும் நையாண்டியும் குறும்பும் மெல்லென எம்மை படர்கின்றன. ஆயன்னையம்மாதாய் ஆழ்ந்த வாசிப்புக்கும், பரந்த தேடலுக்குமான காத்திரமான தொகுதியாகும்.



Ernest

ERNEST

Import & Export Quality
Fashionable Cloths
for
Gents, Ladies, Kids and all age group

No. 06, Kandy Road, Madawala Bazaar, Kandy, Sri Lanka.
Tel : 077 8881118E-mail : ernestfashions@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூதர்களைப் பற்றி ஹிட்லர்

M.T. டிஸ்லிமொகமட்

மகத்தான புரட்சிகள் மனித வர்க்கத்தையே ஆட்டி வைத்திருக்கின்றன. எனினும் யூதர்கள் மாத்திரம் அன்றிருந்த மேனிக்கு எவ்வித அழிவு-மின்றி இருந்து வருகின்றனர். அவர்களுடைய தந்திர புத்தியோ, சுயநல உணர்ச்சியோ எப்போதும் போலவே மாற்றுக்குன்றாமல் இருந்து வருகிறது. அவர்களுக்கு சொந்தமான கலாசாரமோ, நாகரிகமோ, ராஜ்யமோ கிடையாது. பிறரைச் சுரண்டிப் பிழைப்பதே அவர்களின் பிறப்புரிமை. மற்றும் உயர்ந்த கொள்கைகளுக்கு யூதர்களுக்கும் வெகு தூரமிருக்கிறது. அதனால்தான் அவர்களுடைய அறிவானது எப்போதும் அழிவு மார்க்கத்திலேயே செல்லுகின்றது. அவர்கள் தங்களுக்கு உதவி புரியும் மக்களின் உதிரத்தை உறிஞ்சும் குணமுள்-ளவர்கள். அவர்களுடைய திறமையெல்லாம் பிற சமூகத்தை வஞ்சிக்கவே உபயோகிக்கப்படு-கின்றது. மற்ற சமூகத்தினர் தங்களுடைய ஆழ்ந்த எண்ணங்களைச் சிந்திப்பதற்கே பாஷையை உபயோகிக்கின்றனர். ஆனால் யூதர்களின் பாஷையோ, அவர்களுடைய ஆழ்ந்த எண்ணங்-களை மறைத்து, பிறரை வஞ்சிப்பதற்கு உபயோகிக்கப்படுகின்றது.

அவர்களிடையேயுள்ள இன உணர்ச்சிக்கும் வித்தியாசமில்லை. பொதுவான ஆபத்தேற்படும் போது, அவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து அதை எதிர்க்கும், ஆபத்து நீங்கியதும், தனித்தனியாகப் பிரிந்து ஓடிவிடும் யூதர்களின் இன உணர்ச்சியும் அது போன்றதே. வியாபார சூழ்ச்சி, அதீத வட்டிக்கும் கடன் கொடுப்பது, பிற சமூகத்தினரின் சொத்துக்களைச் சிறிது சிறிதாக அபகரித்துக் கொள்வது, இவையெல்லாம் யூதர்களிடம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஊறி வந்துள்ள குணங்களாகும். பிறரைக் கெடுத்தாலன்றி தாங்கள் வாழ முடியாதென்பதை யூதர்கள் தெரிந்து கொண்டிருப்பதால், தேசத்தின் செல்வ நிலமையை உருவாக்கும் பொருளாதாரத் துறைகளையும் தங்களுடைய ஏக போக நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர முயற்சித்து வெற்றி பெற்றார்கள். மற்றும் செல்வாக்குள்ள கிறிஸ்தவர்களின் ஆதரவைப் பெறுவதற்காக யூதர்கள் தங்கள் பெண்களையும் அவர்களுக்குத் தத்தம் செய்வதோடு அச்சேர்க்கையின் மூலம் பிறக்கும் கலப்புப் பிறவிகள் பிற்காலத்தில் யூதர்கள் பக்கமே சேரும்! யூதர் கிறிஸ்தவப் பெண்ணை விவகாரம் செய்து கொள்வது அபூர்வமான விஷயம். கிறிஸ்தவர்தான் யூதப் பெண்களை விவாகம் செய்துக் கொள்வர். இவ்விதம் அவர்கள் சமூகத்தின் உயர்வை சீர்குலைக்கவும் முற்பட்டனர். கடன்கொடுக்கும் தொகைக்கு யூதர்கள் தான். அதுபோலவே முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் வேற்றுமை ஏற்பட முதன்முதலாக சூழ்ச்சி செய்தவர்கள் யூதர்களே - பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் உலகம் தங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டுமென்பதே யூதர்களின் பேராசை.

☒ யூதர்களோ தங்களுடைய எதிர்கால இலட்சியத்தை இமை கொட்டாது கவனித்துக் கொண்டே அதை நோக்கிச் சென்று வருகின்றனர். அவர்களால் நடத்தப்படும் எக்கட்சியும் அவர்களுடைய நலன்களைத் தவிர வேறெதற்காகவும் போராடாது.

☒ பொதுஜன அபிப்பிராயத்தைத் தங்கள் நோக்கத்திற்கிணங்க உருவகப்படுத்துவதில் யூதர்கள் கெட்டிக்காரர்களாக இருந்து வருகிறார்கள். பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ள கட்டளைப்படி உலகிலுள்ள மற்ற நாடுகளை எல்லாம் தாங்கள் துவம்சம் (அழித்து) விட முடியுமென்பது பெரிய யூதர் தலைவர்களின் நம்பிக்கை.

APOLLO PHARMACY
Dealers in Pharmaceuticals
02, Teldeniya Road, Madawala Bzaar
Tel: 0776 209010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ரஷ்யர்கள் தங்களுடைய சொந்தபலத்தினால் எவ்விதம் யூதர்களின் ஆதிக்கத்தை உதறித்தள்ள முடியாதோ, அதுபோலவே பிரமாண்டமான தேசத்தை யூதர்களும் நீண்டகாலம் உருவாக்கி வைத்துக் கொண்டிருக்க முடியாது. யூதர்களிடம் ஆக்கும் தன்மையில்லை. அழுக வைக்கும் தன்மைத்தானிருக்கிறது.

- சமுதாய வாழ்க்கையைச் சீர்குலைப்பதற்காக அவர்கள் விபச்சாரக் கொடுமையையும் வளர்த்து வந்தார்கள். வாழ்க்கையை அடியோடு சீர்குலைக்க இதை ஓர் கருவியாக பயன்படுத்தினார்கள்.

- மார்க்ஸ் கொள்கைக்கும் யூதக்கொள்கைக்கும் வேற்றுமையில்லை. அக்கொள்கையானது நீதியையும், நாகரீகத்தையும் ஆதாரமாகக் கொண்ட மானிட வாழ்க்கையின் அஸ்திவாரத்தைத் தவிர்த்து சமுதாயத்தில் குழப்பத்தையும் கலக்கத்தையும் உண்டுபண்ணி மனிதவர்க்கத்தையே அழித் தொழித்து விடும்.

- மார்க்ஸ் கொள்கையின் இறுதி நோக்கம் அன்றும் இன்றும் என்றும் யூதரல்லாத தேசிய அரசாங்கங்களை அழிப்பது.

- உலகிற் சிறந்த ஒரு ஞானியான ஷோபன்ஹார் யூதர்கள் பொய் சொல்லுவதில் மகா நிபுணர்களென்று கூறியிருப்பது முற்றிலும் உண்மையானதே.

- தாங்கள் உலகத்தின் கொடுங்கோலர்களாக வரவேண்டுமென்பது தான் யூதர்களின் அபிலாஷை. ஆங்கிலோ அமெரிக்கர்களுக்கும் உலகை ஆட்சிப்புரிய வேண்டுமென்ற அபிலாஷை இருக்கின்றது. அதைப் பூர்த்தி செய்து கொள்ள அவர்கள் தங்களுடைய சம்பிரதாய ஆயுதங்களை உபயோகிக்கின்றனர். அதுபோலவே, யூதர்களும் தங்களுடைய சம்பிரதாய ஆயுதங்களை உபயோகித்து வருகின்றனர். யூதர்கள் பல தேசங்களிலும் புகுந்து உள்ளிருந்து கொண்டே அவைகளைக் குடைந்து விடுகின்றனர். பொய், அவதூறு, விஷமப் பிரசாரம், உருக்குலைத்தல் இவைதான் யூதர்களின் சம்பிரதாய ஆயுதங்கள் தங்களுடைய பகைவர்கள் அடியோடு ஒழியும் வரையில் அவர்கள் அந்த ஆயுதங்களை உபயோகித்து வருவார்கள். அவை யூதர்களின் பிறவிக் குணங்களாதலால், அவைகளை மாற்றுவதென்பது முடியாத காரியம். யூதரின் சரீரத்தில் உயிர் உள்ளளவும் அக்குணங்களும் இருந்தே-தான் தீரும். உலகிலுள்ள மற்றெந்த தேசத்தினரை காட்டிலும் அவர்கள் தான் தங்கள் வர்க்கத்தின் இரத்தத்திலும் சிறிதும் கலப்பேற்படாமல் பாதுகாத்து வருகின்றனர். அதனால் அவர்களுடைய ஜென்ம குணங்களும் மிக்க கூர்மையாக இருந்து வருகின்றன. தங்களைக் காட்டிலும் அதிக பலம் பொருந்திய ஒரு சக்தி தங்களை எதிர்க்கும் வரையில், அவர்கள் (யூதர்கள்) தங்களுடைய கோர இலட்சியத்தை நோக்கிச் சென்றே தீருவார்கள்.

- நம் தேசத்தை சீர்குலைத்து வந்த 12 அல்லது 15 ஆயிரம் யூதர்களையும் யுத்தம் ஆரம்பமான உடனேயோ அல்லது யுத்தம் தொடர்ந்து நடந்து வந்தபோதோ, விஷப் புகைக்குட்படும்படி வற்புறுத்தியிருந்தால், லட்சக்கணக்கான ஜெர்மன் தொழிலாளர்களின் உயிர்த்தியாகம் வீணாகியிராது. அதற்கு மாறாக 15 ஆயிரம் பேர்களையும் உற்ற சமயத்தில் ஒழித்திருந்தால் எதிர் காலத்தில் ஜெர்மனிக்கு இன்றியமையாத லட்சக்கணக்கான உத்தமர்கள் ரட்சிக்கப்பட்டிருக்கலாம்.

- த மெயின் கேம்ப் -

★★★


ARKAM TEX

Quality Salwars, Sarees & Readymade Garments

19, Wattegama Road, Madawala Bazaar.

Tel: 081 2470215 Hotline: 077 5989618






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# New Admission 2014

## Playgroup, Montessori

## Grade - 1-13

### So, you want quality education?

**Join The Fastest growing International School in Sri Lanka**

- Following a well developed modern curriculum and methodology. Materials for Mental, Physical, Emotional, Cognitive and Moral development of the child.
- A veteran educationist as the Principal.
- Well qualified and experienced teachers with the vision of educational-philosophy.
- Dedicated coaching with individual care.
- Timely coverage of syllabus and comprehensive revision.
- Free computer education, Library facilities.
- This strong academic emphasis is complimented by extensive athletic, extra curricular activities and community service programmes.
- Comfortable class rooms with excellent facilities.
- School Bus, Van services.
- Wesswood recognised talents of students who perform well in their class and will be entitle for Wesswood Merit Scholarship.

**WESSWOOD**
**INTERNATIONAL COLLEGE**

**A Model School for a complete, more comprehensive and quality education**
**120, Kurunegala Road, Katugastota,**

**Hotline: 0777-860321, 0777-777679, 077-3848580**

Garden of Knowledge and Wisdom



# New Admissions- 2014

Playgroup Montessori

(Boys & Girls)

## Grade 1-13 (Girls Only)

**The Only International school in Central Province**

**which has Produced 3A's In A/L Commerce Stream and 9 A's in O/L**

| Aamina Inshaf | Hamdha Aroos |
|---|---|
| A/L 3 A's | O/L 9 A's |

**A Model School for a complete, more comprehensive and quality education**

**Enrollment NOW ON.......**

**LOYAL**
**LADIES' COLLEGE**

**No. 354/1, Polgollawatte, Polgolla, Kandy.**
**Tel: 0777 860321, 0777 777679, 0773 848580, 081 4938597, 081 2204280**

EDUCATION FOR SUCCESS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேகம்

எனக்கும் உனக்குமான
இடைவெளியில்
யார் யாரோ
பார்வையாளர்களாக....
கதையளக்கிறார்கள்
நமது
மௌனங்கள் மாத்திரம்
செய்தியாகின்றன
அவர்களுக்கு

பால் நிலவொளியில்
பனியொழுகும்
பொழுதொன்றில்
உன் வீட்டுக்கும்
என் வீட்டுக்குமிடையில்
மின்காந்த அலைகள்
உன் நினைவுகளில்
நானும் - என்
தொலைவில் நீயும்

சத்தியமாய்
நமக்கிடையில்
தூய்மையான நட்பே
சாத்தியமென்றாய்

ஸெய்யன் சியாட்
கெலிஓயா

## நாட்டு நடப்பு

பள்ளிகளை உடைத்தாய்
ஹலால் தவறென்றாய்
ஹபாயா
தவிர்க்க கூடியதென்றாய்
காதிக்கோடும்
இஸ்லாமிய வங்கிமுறையும்
செயலானீயும் நம்
கவனிப்பிலென்று
எச்சரித்தாய்

இப்படியே தொடர்கின்றன
உன் அக்கிரமங்கள்
நமது தலைவர்களென்பர்
பேசா மடந்தைகளாய்
எல்லாத்தையும்
விட்டுத்தருவர்

கடைசியாய்
எம் உயிரையும்
கேட்பாய்....!

வாரி இறைத்திட
நம் தலைவர்களும்
தயாராய்

கன்யா சியாட்
கழுகமுவ

## தாய்

பத்து மாதம் சுமந்து – பல
கஷ்டங்களுக்கு மத்தியில்
பெற்றிருத்து – உன்
உதிரத்தை பாலாக்கி – என்
பசிக்கு உணவாக்கி
பருகத்தந்த – என் தாயவள்

அன்பைப் பரிமாறி – ஒரு
தாயாக படிப்பில் – ஓர்
ஆசானாக துன்பத்தில் – ஒரு
நண்பியாக விளையாட்டில் – ஒரு
சகோதரியாக என்னை
மகிழ்வூட்டியவள்

உன் பாசத்தை இரு
கண்களிலும் – என்
இலட்சியத்தை – உன்
சிந்தனையிலும் – எனக்காய்
பட்ட துன்பத்தை – உன்
கண்ணீரிலும் அறியத்தந்தவள்
உன் மனத்திரையில் – என்
எதிர்காலத்தை காட்டினாய்,
உன் மூச்சுக் காற்றில் – என்
இலட்சிய முகவரியைக் காட்டியவள்

நீ காட்டிய முகவரியில்
சென்று உன் கனவை
நனவாக்கி வைப்பேன்
இன்ஷா அல்லாஹ்

Rasheek Rahman


Now At Madawala....

EASY PC
COMPUTERS

- Branded Computers
- Computer Accessories
- Internet
- Email
- Scanning
- Color Prints
- Games Cafe
- Game CD'S Software
- Computer Repairing

With Best Compliments From



Selling Used Branded Computers,
Laptops and Accessories

49/B, Kandy Road, Madawala Bazaar. Tel: 077-4044334,
e-mail: ceasypc@gmail.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிகளின் நர்த்தனம்

- அம்ரிதாப்ரியன் -

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு பல்லின மக்களும் ஒற்றுமையோடும் சாந்தி சமாதானத்தோடும் வாழ்கின்ற ஒரு நாடு என இதுவரை காலமும் நம்பப்பட்டு வந்தது. காலத்திற்கு காலம் ஆட்சியதிகாரம் பெருகின்ற இரு அரசியல் பெரும்பான்மை கட்சிகளும், இங்கு வாழ்க்கின்ற சிறுபான்மையின மக்களை அடக்கி ஒடுக்கியே வந்துள்ளது. உரிமைகள் மறுக்கப்பட்டு வாழ்வுரிமையை பரிக்கப்பட்ட சந்தர்ப்பமொன்றில் தமிழ் சிறுபான்மை சமூகத்தின் குரலாக விடுதலையின் நாதமாக அவர்கள் தமது உயிர்களை துச்சமென மதித்து ஆயுதம் தாங்கி போராட முற்பட்டதால், இந்நாடு 30 வருடகாலம் ஓர் கொடிய உள்நாட்டு யுத்தமொன்றுக்கு உட்பட்டு இரு தரப்பிலும் பெறுமதிவாய்ந்த உயிர்களும் உடமைகளும் அழித்து ஒழிக்கப்பட்டன. நாடும் அதாள பாதாளம் நோக்கிப் பயணித்தது.

வெல்லப்படாத யுத்தம் என்று கணிக்கப்பட்ட யுத்தமொன்றை இன்றைய அரசு வெற்றிகண்டு வரலாற்றில் தன் இடத்தை பொன்னெழுத்துக்-களால் பொறித்துக் கொண்டது. யுத்தமொன்று முடிவுற்றதான பிற்பாடான காலப்பகுதியில் சமாதானமும் இனங்களுக்கிடையில் ஒற்றுமையும் பரஸ்பர புரிந்துணர்வோடு வாழவேண்டிய காலப் பகுதியில், சில காவியுடை தரித்தவர்களின் நச்சுக் கருத்துக்களும் இனங்களுக்கிடையில் விரிசல்-களை உருவாக்கும் செயற்பாடுகளும் மீண்டும் ஒரு இருண்ட யுகத்தை நோக்கிய நகர்வுக்குள் இட்டுச் செல்வதை அவதானிக்கக் கூடிய சூழல் ஒன்றை இத் தீவகமெங்கும் அவதானிக்கலாம்.

யுத்த காலமொன்றில் நாட்டை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணமிராத சில பௌத்த பிக்குகள் இன்று நாட்டை பாதுகாக்கவும் புத்தரின் தேசமாக பிரகடனம் செய்து பௌத்தர்களின் தொலைந்து விடாத உரிமைகளை வென்றெடுத்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வதற்காக பாமர மக்களிடையே தீய கருத்துக்களை முன்னிறுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இல்லாத ஓர் எதிரியை உருவாக்கி அதற்கு அவர்கள் கொடுத்த பெயர் இஸ்லாமியர் பயம் என்ற அச்சத்தை இந்நாட்டில் தோற்றுவித்துள்ளதோடு சிறுபான்மையின மக்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளில் புத்தர் சிலைகளை வைத்தல் - புதிய விகாரைகள் அமைத்தல் - சிறுபான்மை மத வழிபாட்டு தளங்களை உடைத்தல் - போன்ற இழிச்செயலில் பௌத்த தீவிரவாதம் எப்போதுமில்லாதவாறு ஆசியாவின் ஆச்சரியத்தை நோக்கி விஷ விதைகளுடன் விருட்சமாகின்றது.

☒ புண்ணிய பிரதேசம் என்ற சொல்லாடலில் பள்ளிவாயில்களுக்கு சேதங்கள் ஏற்படுத்தல்.

☒ ஹலால் இலட்சினை பொறித்த உணவுகளை இல்லாதொழித்தல்.

☒ இஸ்லாமிய பெண்கள் தன்னுடலை முழுமையாக மறைக்கும் ஹிஜாப் ஆடையை தடைசெய்தல்.


U2 Communication & Mobile Center

Phone Accessories, Phone Repairs, WholeSale & Retail Dealers in all kind Mobile Phones
Bill Payment: Dialog, Airtel, Etisalat, MobitelWater Bills & Electricity Bills





No. 11, Wattegama Rd, Madawala Bazaar.
Tel/Fax: 081 2475965 Mob:077 1111311/075 8898497


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நகரமயமாக்கல் - பாதை விஸ்தரிப்பு அகழ்வாராய்ச்சி என்கிற போர்வையில் மதத தலங்களை அழித்தல்.
- இஸ்லாமியர்களின் வியாபார நிறுவனங் களின் பௌத்தர்கள் பொருள்களை கொள்வனவு செய்வதை தடுத்தல்.
- மாடறுப்பு இறைச்சி வர்த்தகத்தை இல்லா தொழித்தல் அல்லது தன்னகப்படுத்தல்.
- இஸ்லாமிய ஷரியத் சட்டங்களை எதிர்த்தல்.
- இஸ்லாமிய வங்கி முறையை தடை செய்தல்.
- இஸ்லாமிய தொழில் நிறுவனங்களில் தொழில் புரிகின்ற பௌத்த யுவதிகளை இஸ்லாமிய இளைஞர்கள் காதலித்து திருமணம் புரிவதன் ஊடாக மதம் மாற்றுகின்றனர்.
- இஸ்லாமியர்களின் கடைகளில் ஹோட்டல்களில் - முன்னணி ஆடை நிறுவனங்களில் இலவசமாக தரப்படுகின்ற டொபிகளில் கருத்தடை, மலட்டுத் தன்மையை உருவாக்குகின்றன.
- ஹலால் என்பது அவர்களின் இறைவனுக்காக படைக்கப்படுகின்ற உணவு வகைகள் - அதை பௌத்தர்கள் மீது பலவந்தமாக திணிக்கின்றனர்.
- சிங்கள இனம் தாய்மார்களை கட்டாயமாக கருத்தடை செய்துகொள்ளுமாறு அரச வைத்தியசாலைகளில் தொழில் புரியும் இஸ்லாமிய வைத்தியர்கள் கட்டாயப்படுத்து-கிறார்கள்.
- இஸ்லாத்தையும் - இஸ்லாமிய மதக் கடமைகளை பின்பற்றுவோர் மதத் தீவிரவாதிகள் அடிப்படை வாதிகள்
- பள்ளிவாயில்கள் ஆயுதங்களை பதுக்கும் பங்கர்களாகும்.
- மத்ரஸாக்களில் இஸ்லாமிய தீவிரவாதி களை உருவாக்கும் பாசறைகள் என சிங்கள அப்பாவி மக்களிடம் எம்மைப்பற்றி அச்சத்தை தோற்றுவித்து எமக்கெதிராக கிளர்தெழுந்து 1915 ஐ போல் இனக்கலவர மொன்றை உருவாக்கி அதில் குளிர்காய முனைகின்றனர்.

இவ்விதமான பௌத்த தேரர்களின் தங்குத்தடையின்றிய விஷமிக்க பிரசாரங்கள் இலத்திரனியல் ஊடகங்களாலும் இன்டர்நெட் வலையமைப்புகள் மாநாடுகள் - விகாரைகள் தோறும் பரப்புரைச் செய்யப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு அரசும் அரச இயந்திரங்களும் துணை நிற்கின்றவா? என்கிற ஐயம் இலங்கை வாழ் ஒவ்வொரு பாமரனின் சிந்தையிலும் தொக்கி நிற்கின்றன. சிறுபான்யி-னருக்கெதிரான வன்முறைகளை தாக் குதல்களைப் பற்றி முறைப்பாடும் - கண்டனங் களையும் தெரிவிக்கும் செயற்முறைகளுக்கு இன நல்லுறவை பாதிக்கும் - இனங்களுக்கிடையில் விரிசல்கள் தோற்றுவிக்கும் முயற்சிகள் என தடைவிதிக்கும் அல்லது கைது செய்ய முயற்சிக்கும் அரசு சிறுபான்மைக்கெதிராக கடும் போக்கு பௌத்த பிக்குகளால் கக்கப்படுகின்ற விஷகருத்துக்கள் - பொய் புனுகுகளை தடுக்கவோ தண்டிக்கவோ முயற்சிக்காமல் அவர்களுக்கு தேவையான இடவசதிகளையும் பாதுகாப்புக்களையும் வழங்கி வரும் செயற்பாடானது, எல்லோர் மனங்களில் பலத்த சந்தேகங்களையும் அச்சங்களையும் தோற்றுவிக்கின்றன.

- இலங்கையில் அண்மைக்காலங்களில் முஸ்லிம்களுக்கெதிரான தீவிரப்போக்கு தற்போது மியன்மாரில் முஸ்லிம்களுக் கெதிராக நடைபெறுகின்ற தீவிரவாத தாக்கு-தலுக்கும் ஒத்துப் போகின்ற செயற்-பாடாகவே மிளிர்கின்றன. இங்கு கலபொட அத்தே ஞானசார தேரரின் 'பொதுபலசேனா'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற அமைப்பை போன்றே மியன்மாரின் 'விராது' என்கிற பௌத்த தேரரின் '969' என்கிற இயக்கமும் பிரதான காரணமாகும்.

- ☒ முஸ்லிம்கள் மியன்மாருக்கும் அதன் பௌத்த கலாச்சாரத்திற்கும் பெரும் அச்சுருத்தலாக இருக்கின்றனர்.
- ☒ முஸ்லிம்கள் இந்நாட்டை சூறையாடவென வெகு விரைவாக தமது சனத்தொகையை அதிகரிக்கிறார்கள்.
- ☒ திட்டமிட்டு பௌத்த மியான்மார் பெண்களை பாலியல் தொல்லைக்குள் உட்படுத்து-கின்றனர்.
- ☒ முஸ்லிம்கள் எதிர்காலத்தில் எமது நாட்டை ஆக்கிரமிக்க நினைக்கிறார்கள். அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். மியன்மாரை நாம் ஒரு பௌத்த நாடகாவே வைத்திருக்கவே விரும்புகிறேன்.

பௌத்தர்களின் இரத்தம் கொதித்து எழ வேண்டிய தருணமிது. இவ்வாறான உணர்ச்சிகளுட்டக்கூடிய பிரச்சாரம் மூலம் அண்மைக் காலமாக மியன்மாரின் பௌத்தர்களின் இரத்தம் சூடேற்றி வைக்கப்பட்டு பல்லாயிரக்கனக்கான அப்பாவி முஸ்லிம்களின் உயிர்களும், உடமைகளும் பள்ளிவாயில்களும் அழித்தொழிக்கப்பட்ட மிக அண்மிய வரலாற்றை நாமறிவோம்.

அண்மையில் இந்தியா நாட்டின் கேரளா மாநிலத்தில் அமைந்துள்ள பௌத்தர்களின் புனிதத் தளமான புத்தகயாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பும் அதனையொட்டி இத்தாக்கு-தலுக்கும் இந்தியாவின் முஜாகித் அமைப்பு உரிமை கோரியதாகவும் - இலங்கையில் பள்ளிவாயில்கள் மீது மேற்கொள்-ளப்படுகின்ற தாக்குதலின் எதிரொலியே இத்தாக்குதல் இடம் பெற்றதாக சில செய்தி ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இச் செய்தியானது இலங்கை வாழ் முஸ்லிம்களின் இருப்பு மீதும் அன்றாட வாழ்வுதனில் பல இறுக்கமான சூழ்நிலைகளை தோற்றுவிக்க ஏதுவான காரணமாக அமைந்து விடுமோவென்கிற துயர்நிலை தொடர்ந்து வேலையில்... பிற்பாடான செய்திகளில் இத்தாக்குதலுக்கும் முஜாகஹித் அமைப்புக்கும் எவ்விதத் தொடர்பும் காணப்படவில்லையென்றும் இது உள் விவகார தாக்குதலென்றும் இத்தாக்குதலானது புத்தபிக்குகளின் உதவியின்றி நடைப்பெற சாத்தியமில்லையென்றும் புத்தகையாவை யார் பரிபாலனம் செய்வதென்ற இரு பிரிவுகளுக்கிடையில் ஏற்றப்பட்ட மேலாதிக்கத்தின் விளைவே இத்தாக்குதல் என்று புலன் விசாரணையாளர்கள் அறிக்கை விட்டதனால் உப்புசப்பற்ற விடயமாக இலங்கை பௌத்தர்களால் எண்ணப்பட்டது. முஸ்லிம்கள் தான் தாக்குதலுக்கு காரணமென்று அறிக்கை வெளியா கியிருப்பின் சந்தர்ப்மொன்றை எதிர்பார்த்-திருக்கும் இனவாதிகளுக்கு கலவர சூழலொன்றை உருவாக்க ஏதுவான காரணியாகவும் இது அமைந்திருக்கலாம். அமைந்திருக்கவும் கூடும்.

இன்று பரந்துபட்ட உலகில் எங்காவது ஒரு மூலையில் குண்டொன்று அல்லது ஏதாவது அசம்பாவிதம் நடைப்பெற்றால் அரசாங்கங்களும் தொடர்பு சாதன இலத்திரனியல் ஊடகங்கள் முதலில் குற்றம் சுமத்துவது இஸ்லாமியர்கள் மீதுதான். இன்று இது எழுதாத சட்டவிதியாக கொள்ளப்படுகின்றது. முஸ்லிம்கள் மீது தாக்குதல் சம்பவங்கள் நடைப்பெற்றால் அதை எவரும் விமர்சிக்கவோ குற்றம் சுமத்தவோ கூடாது. அப்படி அதை விமர்சித்த முன்னாள் கொழும்பு மாநகர பிரதிமேயர் அஸாத் ஸாலி கைது செய்யப்பட்டு பலவித உடல் உள பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது. அதேப்போன்றே கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதலின் போது புத்தபிக்குகளும் காடையர்களும் பொலிஸாரின் முன்னிலை-யிலேயே தாக்குதலை மேற்கொண்ட போதும் எவரையும் சட்டத்தின் முன்நிறுத்தவோ எவரையும்



No. 4/B, Kandy Road,
Madawala Bazaar.
Tel : 077-2208877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைது செய்து விசாரிக்கவோ இவ்வரசு முயற்சிக்கவில்லை. ஏன் வருத்தமோ கண்டனமோ கூட இவ்வரசு வெளியிட முன்வரவில்லை என்பது கவலைக்கிடமானது.

இத்தாக்குதலின் போது பார்வையாளராக வீற்றிருந்த பொலிசாரின் மெத்தனத்தை கடுமையாகச்சாடி பொலிஸ்மா அதிபர் பதவி விலகவேண்டும் என்று அமைச்சர் ரிஷாத் பதியூத்தின் காரசாரமாக விமர்சித்தார். இதன் விளைவாக அவரின் வீடு காரியாலங்கள், உறவினர்கள், ஆதரவாளர்கள் என பொலிஸாரால் துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர். இவ்வரசரோடு ஒட்டிக்கொண்டு அரசத் தலைவர்களோடு மிக நெருங்கி ஒட்டி உறவாடும் ஓர் ஆளும் தரப்பு அமைச்சருக்குமே இந் நிலையானால் பாமர ஒரு முஸ்லிம் சகோதரனின் நிலையென்ன என்பதை நாம் சிந்திக்கத் தவறக்கூடாது. மற்றும் இவ்வமைச்சரின் பொலிஸ்மா அதிபர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது, எய்தவன் இருக்க அம்பை நோவதைப் போன்ற ஓர் செயற்பாட்டை ஒத்ததாகவே அமைகின்றது.

' அண்மையில் கண்டியில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வொன்றில் நாட்டின் தலைவர் சட்ட விரோதமான பள்ளிவாசல் கட்டிடங்களாலேயே இத்தாக்குதல்களும் அசம்பாவிதங்களும் நிகழ்வதாக கோடிட்டிருந்தார். இதுவரை காலமும் சட்டவிரோதமான கட்டிடங்களை அகற்ற நகர அபிவிருத்தி அதிகார சபையே முடிவுகளை மேற்கொண்டதை பரவலாக நாம் அவதானித்த ஓர் விடயம். புத்தபிக்குகளுக்கும் காடையர் கூட்டத்திற்கும் இப்பொறுப்பினை அரசு எப்போது அதிகாரத்தினை வழங்கியது. அப்படியாயின் பொலிஸ் நீதிமன்றம் போன்ற சட்டவாக்க அமைப்புகள் எதற்காக என்ற பாமரன் ஒருவனின் சாதாரணமாக எழும் சந்தேகம் நியாயமானதே. ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான செயலாளர் நாயகம் நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டிய 'இலங்கை சர்வதிகார பாதையை முன்னெடுத்து தன் நகர்வுகளை நகர்த்துகின்றன.' இவ்வாறான கூற்றை மெய்ப்பிப்பதாகவே சில புத்த பிக்குகளின் செயற்பாடுகளும் அரசின் மௌனமும் கோடிடுவதாக அமைகிறது.


*With Best Compliments From*



# M.S.A .FRUIT STALL

**NO.61/A KANDY ROAD,MADAWALA BAZAAR.**

**TEL:779 619424/ 0812475568**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வி

உக்வளை ஆஷ்ரம்

தோல்விகளாகவே
இருந்தது
வாழ்க்கை.. இன்னும்
இருக்கிறது.

வெற்றிகளையொட்டிய
கணக்குகளின்
புள்ளிகளுக்கு
முன்னால்-ஏராளமான
பூச்சியங்கள்.

வெல்வதற்கென்று
கண்டெடுத்திய
தீர்மானங்களில்
தவிர்க்க முடியாமலும்
தள்ளிப்போடலாகாமலும்
ஒளிந்து கலந்திருந்தன - சில
தில்லுமுல்லுகள்.

வாங்க நினைத்த
வண்டிக்குப் பின்னால்
வட்டிக் கணக்குகள்.
மாடி வீட்டுக்
கனவின்
அடித்தளங்களில்
வங்கிக் கடன்கள்.

பொய்களுக்குள்ளும்,
திருட்டுத்தனங்களின்
இருளுக்குள்ளும்,
சுய விளம்பர
வெளிச்சங்களிலும்,
நிறுவப்பட்டிருந்தது
விருதுகளின்
விழுதுகள்.

வலிக்கட்டும்..
நடப்பதொன்றும்
கஷ்டமில்லை.
ஓரங்களில் ஒழுகினாலும்
ஓலை வீட்டிலும்
குறட்டையொளிக்கு
குறைவொன்றுமில்லை.

தவறுகளைத்
தவிர்த்தபோது
முட்டாளென்றார்கள்.,
வாழத்தெரியாதவனென்று
விமர்சனம் செய்தார்கள்.
எல்லோரும் அப்படித்தானென்று
தர்க்கிக்கவும் செய்தார்கள்.

போகட்டும்.,
இன்னும் சில
தோல்விகள்
மீதமிருக்கின்றன.

சேர்த்தவைகளும் - கட்டிக்
காத்தவைகளும்
பயனளிக்காத - ஒரு நாளில்
படைத்தவன் முன்னால்
நெஞ்சு நிமிர்த்தி
ஜெயித்துவிட்டதாய்ச் சொல்ல
விசாரணைகளின்றி
விருதுகள் வாங்க..

இங்கே

தோற்றுக்கொண்டேயிருப்பதில்
நஷ்டமொன்றுமில்லை.

C-Max
No. 23, Kandy Road, Madawala Bazaar. 077-5890226



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From*

# Choice Mart චොයිස් මාර්ට්

**Specialist in Denim, Shirts & T. Shirts Etc.....**

No. 102, George E. De Silva Shopping complex, Kandy / Tel :- 0777-860708

# RJ CONSULTING

LEGAL & CO-OPERATE SECRETARY CONSULTANT

**M.S.Faizar Ali LL.B**
*ATTORNEY - AT - LAW,*
*NOTARY PUBLIC,*
*COMPANY SECRETARY*
*DIP.IN ARBITRATION*

வியாபார நிருவனங்களை PRIVATE LIMITED ஆக பதிவு செய்தல்
TIN, VAT REGISTRATION
வருமான வரி சம்பந்தமான விடயங்கள்
வியாபார கொடுக்கல் வாங்கல் கட்டிட நிர்மாணம் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்,ஆலோசனை வழங்கல்
15//1e, ,Madawala Bazaar. 081 2475243,077 3293943

*With Best Compliments From*

# S.M.I. BUILDING CONTRACTOR

No. 290/7, School Road,
Madawala Bazzar

Mobile : 077 1505300

*With Best Compliments From*



New
# Welcome Jewellers
நிவ் வெல்கம் ஜுவலர்ஸ

**No. 208 , Kandy Road ,Madawala Bazar,**
**Tel:0812 476547 ,2475 747 ,0773 553525**

Dealers in Gold ,Silver Jewelers Computer & Mobile phone repairing ,
Accessories & unlocking ,Software ect...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடவளையில் .. ஒரு புதிய கல்வி நிருவனம்

# 2014 ஜனவரி முதல் ஆரம்பம் ....

# Doers' Niche Academy

பாதுகாப்பான இடம் சிறந்த இடவசதி



## நிருவாக இயக்குநர்கள்

U. அக்பர் அலி (CEO - Haira Farm)

J.H.A. ரஹ்மான் (Proprietor, Reema Jewellers)

M.T.M. ஜாஸில் (, Bank of Ceylon - Madawala bazaar)

M.N.M. நுஸ்ரி (Teacher, Trainer, Consultant)

**S.M. Hardware Buliding 3rd Floor, Madawala Bazaar.**

**For More Details: 077 6145375, 075 7368953**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது

எத்தனை பாதைகள் ஓர்மனிதன் நடக்க வேண்டும்
ஏனையவர் அவனை மனிதன் என்றழைக்க?

எத்தனை கடல்களை ஓர் புறா கடக்க வேண்டும்
எழிலாய் மணல்தணில் ஓய்வெடுக்க?

எத்தனை முறைகள் குண்டுகள் பொழியப்பட வேண்டும்
அவைகளை என்றென்றும் தடைசெய்ய?

இதற்குரிய பதிலோ காற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது
பதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது

எத்தனை ஆண்டுகள் மழை வாழ வேண்டும்
அடித்துச் செல்லப்படும் முன்னால் கடலுக்கு?

எத்தனை ஆண்டுகள் மக்கள் சிலர் வாழ முடியும்
சுதந்திரமாய் நடமாட அனுமதிக்கும் முன்னால்?

எத்தனை மனிதர் தம்தலை திருப்பிக் கொள்ள முடியும்
என்றுமே முன்னால் காணவில்லை என்று காட்டிக் கொள்ள?

இதற்குரிய பதிலோ காற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது
பதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது

எத்தனை ஆண்டுகள் ஓர் மனிதன் வாழ வேண்டும்
மனிதனுக்கு அழிவில்லை என்று கேட்பதற்கு?

எத்தனை இறப்புகள் அது எடுக்கும் அவன் அறியும் வரை
அதிகதிக மக்கள் அழிந்துவிட்டார் என்பதை?

இதன் பதில் என் நண்பனே! காற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது
இதன் பதில் காற்றில் ஒலித்துக் கொண்டிருக்கிறது!

ஆங்கில மூலம் : BOB DYLAN
தமிழ் மொழி ஆக்கம் : ஏ.பி.வி. கோமஸ்

குறிப்பு
பலாத்காரம், அநீதி, போர் போன்றவற்றை முற்றுமுழுதாக வெறுத்த ஒரு கவிஞன் - பாடலாசிரியன் - பொப் பாடகனின் படைப்பு இது.

திரு ஏ.பி.வி. கோமஸ் அவர்களால் அவரது மரணத்திற்கு முன்னால் மொழிபெயர்க்கப்பட்ட ஒரு கவிதை இது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசைமாறும் பறவைகள்

-வங்குவக்கடை அம்மார்-

வழமைக்கு மாற்றமாக எங்கும் குளிர் படர்ந்திருந்தது. மழைவருவதற்கான அறிகுறிகள் எங்கும் பரவலாயின. வானம் சோகைப்பிடித்து சோம்பேரித்து கருத்து போயிருந்தது. யாருடன் கோபமோ! பறவையினங்கள் விரைவாக வானில் நீந்திக் கொண்டிருந்தன. எறும்புகள் தமது வாயுக்குள் திணித்த உணவு தினுசுகளுடன் தம் இருப்பிடம் நோக்கி விரைந்துக் கொண்டிருந்தன.

ஆங்காங்கே விரிசல் விழுந்திருந்த கூரையில் மேகத்தின் கருமுகில்களின் நிழல் வீட்டுக்குள் கருமையை படர்த்தியிருந்தது. 'ஏ புள்ள கொஞ்சம் லாம்ப பத்த வையுங்களேன்' குசினிபக்கமிருந்து சத்தம் ஏதும் வரவில்லை. சில நிமிடங்கள் கரைந்த பிறகு... நடுங்கும் கைகளால் லாம்பை தூக்கிக் கொண்டு, தள்ளாடி தள்ளாடி அதன் இடத்தில் வைத்துவிட்டு திரும்பிச் சென்றாள்.

''வயோதிபத்தை விட்டும், வறுமையை விட்டும் இறைவனிடம் பாதுகாப்பு தேடுங்கள்'' எத்தனைத்தரம் மிம்பர் பயான்களில், மௌலவிமார்கள் உபதேசம் செய்தார்கள். 'ம்' எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காட்டம் புரியாமலே ஆணவம், அகங்காரம், பணச் செருக்கு எல்லாம் என்னை ஆட்டிப் படைத்ததே.... என் கண்ணை குருடாக்கிச்சே! அதன் பிரதிபலனை அல்லாஹ் இன்று எனக்கு உணர்த்தி விட்டான். நீர்த்தி வலைகள் கண்ணில் முட்டி கன்னக்கதுப்புகளில் வழிந்து இறங்கியது. அதை துடைக்கக் கூட திராணியற்று - கூரை முகட்டையே வெறித்திருந்தார்.

ஆழ் மனக் குலத்தில் எறியப்பட்ட கல்லாக சலனம் அவர் மனத்திரையில் காட்சிகளாக விரியத் தொடங்கியது.

ஜுனைதின் ஹாஜியார் ஊரில் செல்வாக்குள்ள முக்கிய தனவந்தர்களில் ஒருவர். குறித்தவொரு வியாபாரமின்றி லாபம் கொழிக்கும் எவ்வியாபாரத்திலும் அவரின் கால்கள் ஆதிக்கம் செலுத்திடும் வல்லமைப் பெற்றிருந்தார். இருப்பினும், எல்லோரும் மெச்ச வேண்டும் எதிலும் தன்னை முதன்மைப் படுத்திக்கொள்ள வேண்டும். தன்னை யாவரும் மதிக்க வேண்டும் என்ற குணம் படைத்தவராகவும் இறைவன் அவருள் ஒரு சைத்தானிய ஊசலாட்டத்தை அவரோடு பிணைந்திருந்தான் எனலாம்.

செல்வத்தை வாரி வழங்கிய அல்லாஹ் பிள்ளைச் செல்வங்களிலும் குறைவைக்க வில்லை. இரண்டு பெண்பிள்ளகைள், இரண்டு பெண் பிள்ளைகள் என அதிலும் பரக்கத்தை அள்ளி வழங்கியிருந்தான். அவர் வாழும் ஊரைப் பற்றியும் குறை கூறுவதற்கில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்தில் பள்ளியை மையமாக வைத்து சமூகத்தின் பல கூறுகளை உள்ளடக்கியதாக எவ்வாறானதோர் சிறப்பான ஓர் உம்மத்தை தோற்றுவித்தார்களோ? அவ்வாறான சிறப்பான சமூகக் கட்டமைப்பை உறுதிப்படுத்துவதற்கான அதன் அடித்தளங்கள் தீனின் தூண்களால் கட்டியெழுப்பப்பட்டிருந்தன.

எல்லா கிராமங்களைப் போல் இங்கும் - தீய செயல்களிலும் பழக்க வழக்கங்களிலும் ஈடுபடுகின்ற அல்லது வாலிபத்தின் முறுக்கில் தீயதை முகரும், ஒரு உளவியல் பண்பாட்டு சீரழிவுக் கலாசாரத்தில், தம்மை மூழ்கடித்துக்கொண்ட இளைஞர்களும் காணத்தான் செய்தன. அதற்கான முயற்சிகள் எதிர்ப்புகள் பகைமைக்கு இடையிலும் முன்னெடுக்கப்பட்டன ஊர்த்தலைமைகளால்.

அன்று வெள்ளிக்கிழமை ஜும்மாவுக்காக ஊர் ஜமாத்தினர் பள்ளியில் தூய ஆடைகளுடன் தூய்மையான இஹ்லாசுடன் இறைகடைமையை நிறைவேற்றிட அமர்ந்திருந்தனர்.

மிம்பரிலிருந்து இமாமின் குரல் கணீரென்று ஒலித்தது. 'பிள்ளைச் செல்வம் இறைவனால் எமக்களிக்கப்பட்ட ஓர் அமானிதம். நாம் அவர்களுக்கு இறைவனால் பொறுப்புச் சாட்டப்பட்டவர்களாக இருக்கிறோம். மறுமையில் பொறுப்புச்சாட்டப்பட்ட எம்மிடம் இறைவன் கேள்விக்கணைகள் தொடுப்பான். நாம் எப்படி சமாளிக்கப் போகிறோம். நம் பிள்ளைகளின் நிலமை என்ன? பாதையோரங்களிலும், கடைத்தெருவிலும் போதைத் தரக்கூடிய எத்தனையோ வகையான கெடுதலான விடயங்களில் ஈடுப்படுப்பட்டவர்களாக நம் பிள்ளைகள்.

கம்பியூட்டர், கையடக்க தொலைபேசியென்று கேட்பதை பிள்ளைகளுக்காக, வாங்கிக் கொடுக்கிறோம். அவர்கள் அதை எதற்காக பாவிக்கிறார்கள். எதனைப் பார்க்கிறார்கள் சிந்தித்தோமா? கவனித்தோமா? பெண் பிள்ளைகளை வெளியே டியூஷன் என்று அனுப்புகிறோம். நம்ம பிள்ளை தவறிடமாட்டார்களென்று உங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையை அவர்கள் காப்பாற்றுகிறார்களா? எல்லா பிள்ளைகளும் அப்படியில்லை ஒரு சில பிள்ளைகள் தான் இவ்வாறான தவறான செயலில் ஈடுபடுகிறார்கள். ஒரு தவறு ஒரு சமூகத்தின் பண்பாட்டின், கலாசாரத்தின், ஒரு தீய விதை என்பதை உணர வேண்டும்.

வீட்டு வேலைக்கென்றும், அரச சேவைகளிலிருந்தும், நம் வீடுகளுக்கு அன்றாடம் எத்தனை-யோ அன்னியர்கள் வருகிறார்கள். நாம் என்ன செய்கிறோம். குமருப்பிள்ளைகளையும் முன்னுக்கு கூட்டி வைத்துக்கொண்டு சகஜமாக பேசுகிறோம். அந்தப் பெண் பிள்ளைகளும் பேசுகிறார்கள். சிரிக்கிறார்கள். இதை கவனித்தும் கவனிக்காமலும் நாம் இருப்பது ஏன்? இதையா நபிகள் (ஸல்) அவர்கள் காட்டித் தந்தார்கள். நம் பெண்கள் முகத்தை மூடும் சுன்னத்தான் விடயங்களை வீட்டுக்கு வெளியே கடைப்பிடிக்கிறார்கள். வீட்டினுள்ளே அவர்களின் நிலையென்ன? முகத்தை மூடச் சொல்லும் நாம் அவர்களின் இதயத்தின் ஈமானை உறுதிச் செய்ய மறந்துவிட்டோம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் ''உடலில் ஒரு பகுதி இருக்கு அது மாசடைந்து விட்டால் முழு உடலும் மாசடைந்து விடும். பிறகு ஹபாயா போட்டென்ன முகத்தை மூடி என்ன பயன்''

ஈமானிய சகோதரர்களே! ஒரு ஈமானிய சமூகத்தை கட்டியெழுப்ப இறை உதவியோடு முயற்சிக்கிறோம். இது உனக்கு எனக்கென்று பங்கு பிரித்திடுவதற்கல்ல. முழு சமூகத்துக்கும் பொறுப்பானது. முரண்பாடுகள் - பிளவுகள் இல்லாத மனிதனும் சமூகமும் இல்லை. நாமனை-வரும் இறைவனுக்காக ஒன்றுபடுவோம். இன்று நாம் விதைக்கும் விதை நமக்கானதல்ல. நாளைய சமுதாயத்தின் தூய விடியலுக்கான விருட்சமென்பதை நாம் நினைவில் கொள்வோம். இந்த இளம் சமூகத்தை செயன்திறன்மிக்க புலமையாளர்களாக வழிநடாத்திட இறைவன் நம்மனைவருக்கும் உதவிப்புரிவானாக.

அன்று ஒலித்த அந்த மிம்பரின் குரல் இன்றும் ஜுனைதின் ஹாஜியாரின் இதயத்தில் சம்மட்டியால் அடிப்பதைப் போன்ற உண்மையின் வலி அவரை வதைத்தது. வியாபாரம் பணம் பணமென்று ஓடி உழைத்தது, பிள்ளைகளுக்கென்று சேகரித்து, செலவழித்தது எல்லாம் விழலுக்கு இறைத்த நீராய் போனாது. மகன் மார்கள் கூடாத கூட்டாளிமார்களோடு சேர்ந்து ஹராமான பழக்க வழக்கங்களை பழகிக் கொண்டதைப்போல், வியாபாரமும் ஹராமானதாகவே ஆக்கிக் கொண்டார்கள். வீடு, சிறையின்னு அவர்களின் வாழ்க்கை பாத்திமாக்களாக வாழ வேண்டிய மகள்கள் காந்தியாகவும், தயாளினியாகவும் சிலைவணக்கத்தைத்தேடி வாழ்வமைத்துக் கொண்டார்கள். சொத்து சுகத்துக்காக ஒன்றுபட்ட பிள்ளைகள் பாகப் பிரிவினை முடிந்ததோடு, தாயென்ன தகப்பனென்ன தூக்கி எறிந்து விட்டார்கள். முதுமையில் இந்த குடிலுக்குள் எங்களுக்கு சொத்து சுகத்தை தந்தான் அல்லாஹ். ஆனா நான் புள்ள புள்ளன்னு அன்ப செலுத்தி வளர்த்தேன் கண்ணியத்தையும், பண்பையும் ஊட்டி வளர்க்க மறந்துட்டேன். அன்னியவர்களுடனும் பக்கத்து வீடுக்கும் குமர்கள்சென்றபோது, உறவு வீட்டுக்குத் தான், நட்புடன் தான் பழகுகிறார்கள் என நினைத்தேன். தண்டிக்கவும் தடுக்கவும் மறந்துவிட்டேன். ஒரு வாப்பாவாக பிள்ளைகளுடன் உறவாடியிருக்கிறேன். ஒரு நல்ல நண்பனாக, ஒரு மார்க்கத்தாயீயாக அவர்களுடன் நட்புறவு கொள்ள மறந்து விட்டேன். இவைகளால் தானே! இறைவா இன்றைக்கு இந்த சோதனை. நல்ல விதைகளையே எமக்களித்தாய். நச்சு மரங்களாக வளர்ந்து விட்டேனே!

புனித மாக்கத்தை உவப்புடன் எமக்களித்திருந்தாய் லேபல் தரித்த உம்மத்தாக எம் பிள்ளைகளையும், எம்மையும் வியாபார பண்டமாக்கி எம்மையே உருக்குலைத்துக் கொண்டோம். நாயனே எம்மை மன்னித்தருள். எமது சந்ததிகளை ஈமானிய சமூகமாக வாழ வைத்திரு ரஹ்மானே..... சொல்லெணா துயரத்துடன் கேவி கேவி கதறத் தொடங்கினார் ஜுனைதின் ஹாஜியார். அடுப்பறையிலிருந்து வெளியேறி கணவனைத் தன் தோளில் சாய்த்து ஆறுதல்படுத்திட முயற்சித்துக் கொண்டிருந்தார் அவர் மனைவி. வெளியே இடி முழக்கத்துடனும் பெரும் காற்றுடன் மழை பெய்ய ஆரம்பித்தது.

வரும் முன் காப்பதற்கே மார்க்க சட்ட மூலமும், வழிமுறைகளும் எல்லாமும் கைவிட்டதான பிற்பாடு இஸ்லாமியத்துக்குள் தன்னை ஐக்கியமாக்கும் ஒரு பக்குவ நிலையை அடைந்திருந்தார். கணவனின் உள்ளத்தின் உருக்கமான கண்ணீரின் பெருக்கு அவரின் பாவங்களை இறைவன் மன்னித்திருப்பான். மன்னிப்பான், அவருக்கு தன்னைத்தானே உணரும் தருணத்தை வழங்கிய இறைவனை நினைத்து மனமுறுகி நன்றி செலுத்தினாள்.

- முற்றும் -

★★★


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத ரைத்தலாவளை அஸீஸ்

Xh; epidTf; Fwpg;G

-உக்குவளை அக்ரம்-

மனித சமூகத்தை இறைவன் கலை உணர்வு-களின் பிரவாகமாகவே படைத்துள்ளான். அவனை சுற்றி அன்றாடம் சுழலும், அகபுற காட்சியின் சபலமும், சலனமும், வண்ணமயமான இயற்கையின் பேரழகும், பாய்ந்தோடி சறுக்கி விழுகின்ற ஆறுகளும், நதிகளும் படைத்தவனின் அதிசயிக்கத்தக்க ஆளுமையின் அசைவுகளை நோக்கி கவனக் குவிப்பை பெறுகின்றன.

இதன்பால் அவனின் சிந்தனை சிதறல்கள் அவனை அவதிக்கும் அழகியல்களுக்குமிடையில் பரிதவிக்கின்றான். சிலவற்றை வெறுத்து ஒதுக்கி-விடவும், பலவற்றில் தாக்கம் பெற்று, அவற்றை ஏதோவோர் இலக்கிய வடிவில் வெளிப்படுத்திட முயற்சிக்கிறான். அது அழகியல்களாக நம்மை நமது கலை கலாசார பண்பாட்டினை நிலைநிறுத்துகிறது.

கடந்துபோன பல நூற்றாண்டுகளின் வாழ்வியல் வரலாற்றை, பண்பாட்டு கூறுகளை எடுத்தியம்பும் வரலாற்று படிமமாக இலக்கிய வடிவங்களே காணப்படுவதை மறுதலிக்க முடியாது.

அவ்வகையில் தன் கலை சேவையின் மூலம் இலக்கிய உள்ளங்களையும், மக்களின் கலை இரசனையை மெருகேற்றி, கலை வாழ்வில் தனக்கென ஓர் இடத்தை தக்க வைத்த கலைஞர் ரயித்தலாவளை அஸீஸ் இலண்டனில் வசிக்கும் தன் மகளின் வீட்டுக்கு, விடுமுறையில் சென்றிருந்த சந்தர்ப்பத்தில் காலமானார்கள்.

இவர் வானொலிக் கலைஞர், நாடகாசிரியர், நடிகர், இயக்குனர், எழுத்தாளர், ஓவியர், கேலிச் சித்திரக்காரர், வர்த்தக விளம்பரம், அரபு எழுத்தணி என பன்முக ஆளுமை கொண்டவர்.

1950 களில் ரைத்தலாவளை அஸீஸ் எழுதி இயக்கிய யக்கடயா, குடம்மா, முதலாளி, மாமா முதலிய நாடகங்கள் அரங்கேற்றப்பட்டு தான் சிறந்த-வொரு நாடகாசிரியன் என்பதை நிலைபடுத்தினார். 1958 காலப்பகுதியில் இவரது 'வேலை நிறுத்தம்' நாடகம் இலங்கை வானொலியின் ஒலிப்பரப்பப்பட்ட-தால் பலரின் கவனத்திற்கும் ஓர் சிறந்த நாடகாசிரியன் என்கிற ஆளுமையை நாடக உலகில் ஆணித்தரமாக பறை சாற்றிட இந்நாடகம் வலிகோலியது.

இந்நாடகம் மூலம் கவரப்பட்ட அல்ஹாஜ் வீ.ஏ. கபூர், ஜனாப் எம். எச். குத்தூஸ் ஆகியோர் வானொலி-யில் ரைந்தலாவளை அஸீஸ் அவர்களையும் 'முத்தாரம்' என்கிற நாமம் சூடி வாரந்தோறும் முஸ்லிம் சேவையில் தொடர் நாடகம் ஒலிபரப்பப்பட்டதுடன், அஸீநானா, கிச்சில் மவேன், ஜோரா தாத்தா, நாகூர் வெதா பாத்திர வார்ப்புகளால் நிஜவாழ்வின் அழகியலை நகைச்சுவைப் பாணியில் வழங்கி எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பெற்றார். ரைத்தலாவளை அஸீஸ் இந்நாடகம் இலங்கை மட்டுமன்றி கடல் கடந்து இந்தியா, மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் ஆதரவையும் பாராட்டையும் பெற்றுக் கொடுத்தது.

ரைத்தலாவளை அஸிஸின் "வாழ்வளித்த கதை" என்ற சித்திரத் தொடர்கதை தினகரன் தேசிய நாளிதழில் 1962 இலிருந்து ஞாயிறு தவிர்த்து தினந்தோறும் இரண்டு வருடங்கள் தொடர்ந்தும் வெளிவந்தன.

மத்திய கிழக்கு நாடான ஜோர்தானின் தினசரிப் பத்திரிகையான "சவுத்துஸ்ஸாப், பத்திரிகையில் கேலிச் சித்திரக் கலைஞராகவும் பணியாற்றி, அங்கும் அவர் முதன்மை கேலிச்சித்திரக்காரர் என்ற முத்திரையை வரலாற்றில் பதிந்து கொண்டார். மத்திய கிழக்கில் இருக்கும் போது 'சோஆ' விளம்பர நிறுவனத்தில் கலை இயக்குனராகவும் கடைமையாற்றியுள்ளார்.

1958 இல் பிரபல மாணிக்க வியாபார நிறுவன - மான மாக்கான் மாக்கார் நிறுவனத்தில் ஆபரண அலங்கார வடிவமைப்பாளராக பணியாற்றும் வாய்ப்பும் கிட்டியது. சுமார் பணிரெண்டு ஆண்டுகள் பல்வேறு டிசைன்களில் அஸீஸ் வடிவமைத்த ஆபரணங்கள் ஜப்பான் நாட்டில் பெரும் வரவேற்பு பெற்றமை அவரின் ஆற்றலை மேன்மைப்படுத்துவதாகவிருக்கின்றது.

இக்காலப் பகுதியிலேயே கொழும்பு கோட்டை சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தினால் வெளியிடப்பட்ட வெள்ளிவிழா மலர் ரைத்தலாவளை அஸீஸ் வரைந்த அட்டைப்படத்தை தாங்கி வெளிவந்தது. (மர்ஹூம் ராசீக் ஃபரீத் அவர்களுடன் ஓவியர் ரைத்தலாவளை அஸீஸ் நிற்கும் புகைப்படத்தையும் இம்மலரில் அவதானிக்கலாம்)

உலமாக்களின் வழிகாட்டலுடன் கலைஞர் அஸீஸ் வரைந்த அரபு எழுத்தணி சித்திரங்கள் சோனக இஸ்லாமிய நிலையத்தில் கண்காட்சிக்கு வைக்கப்-பட்டதுடன் இவரால் முதன் முதலில் வரையப்பட்ட பதினான்கு அஸ்மாக்கள், அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்கள் இந்நிலையத்தின் குப்பாவில் பதிக்கப்பட்டு இவரது பெயரும் பெயர்ப்பலகையில் பொறிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

மேலும் இலங்கைச் சோனகரின் வரலாற்றுச் சுருக்கம் அரபுலிபியிலும் ஆங்கிலத்திலும் இவரால் வரையப்பட்டு இந்நிலைய அத்திவாரத்தில் பத்திரப்படுத்த வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடல் வேண்டும்.

அழுத்கம முஸ்லிம் அசிரியப் பெண்கள் கல்லூரியின் "கலாமதி என்ற சஞ்சிகைப் பெயரை அரபு எழுத்துச் சாயலில் வரைந்தமையும், 1972 காலப்பகுதியில் பலாலி விஷேட ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாலைக்கு அன்றைய கல்வியமைச்சர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் விஜயம் செய்த போது அன்னாரின் பெயரில் வரும் அறபு எழுத்துக்களைக் அலங்கார சித்திரமாக வரைந்து அன்பளிப்பு செய்தமையும்,

பின்னர் பலாலி முஸ்லிம் மஜ்லிஸினால் வெளியிடப்பட்ட 'யாழ்பிறை' சஞ்சிகையின் அட்டைப் படமாக 1973 காலப்பகுதியில் வெளியிடப்பட்டு கலை இலக்கிய விமர்சகர்களின் கவனிப்புக்குள்ளாகி அது சம்பந்தமாகக் கட்டுரைகள் வரையப்பட்டன. பின்னர் இவர் தாம் எழுதிய கட்டுரையொன்றில் அரபு எழுத்தணி சாயலில் வரையலாம் என நிறுவினார். கட்டுக்குருந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலை சஞ்சிகையில் சிங்கள எழுத்துக்களை அரபு எழுத்துச் சாயலில் வரைந்து அம்மொழியிலும் எழுத்தணியை அறிமுகப்படுத்தினார்.

அரபு எழுத்தணிப் பற்றிய தனது முதலாவது கட்டுரைக்கு அவர் இட்ட பெயர் 'தஜல்லியாத்' இதில் அவரின் சித்திரத்திற்கு அவர் அளித்த பதிலும் விவரணமும் பின்வருமாறு அமைகிறது.

தஜல்லியாத் என்பதற்கு "பேரொளி" என்றும் குறிப்பிடலாம். நபி மூஸா (அலை) அவர்கள் இறைவனுடனான நேரடி தரிசித்தலின் போது, தூர் சீனா மலையில் மோதுண்டு, கதிர்கள் சிதறும் காட்சியே இங்கு எடுகோளாகிறது.

**அமைப்பு**

கேத்திர கணித முறையில் வட்ட வடிவில் வரையப்பட்ட இவ்வுருவில் அரபு எழுத்துக்கள் 29 னுள் ஆறு எழுத்துக்களை உள்ளடக்கி வரையப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | இரண்டு அலிபுகள் | 2. | இரண்டு லாம்புகள் |
| 3. | ஒரு ஹே | 4. | ஒரு காப்f |
| 5. | ஒரு பே (Be) | 6. | ஒரு ரே |

இவ்வெழுத்துக்களில் அமைந்த வசனம் 'அல்லாஹு அக்பர்' இதன் கருத்து "ஆண்டவன் மிகப் பெரியவன்" என்பதாகும். சுற்று வட்டத்தில் அல்லாஹு என்பதில் வரும் நான்கு எழுத்துக்களும் அக்பர் என்பதில் வரும் 'அலி'யும் சேர்ந்து மொத்தம் 5 எழுத்துக்களும் ஏனைய மூன்று எழுத்துக்களும் நடுவில் இடம் பெறுகின்றன.

சுற்றத்தில் அல்லாஹ் என்ற சொல் 6 முறையும், இது ஒன்றன் பின் ஒன்றாக ஏகத்துவத்தை வலியுறுத்தும் இறை கட்டளை 6 யையும் நினைவுப்புடுத்துகின்றன.

1. அல்லாஹ் மீதும்
2. மலக்குகள் மீதும"
3. வேதங்கள் மீதும்
4. ரசூல்மார்கள் மீதும்
5. இறுதி நாள் மீதும்
6. நன்மை, தீமை இறைவனிடமிருந்துவருகின்றது என்கிற நம்பிக்கை மீதும்.

இச்சுழற்சியில் இடம்பெறும் 5 எழுத்துக்களும்

1. கலிமா ஐந்தின் தாத்பரியங்களை உணர்த்தி நிற்பதுடன்
2. ஐந்து வேளை தொழுகை
3. நோன்பு
4. ஸகாத்
5. ஹஜ்

இச்சித்திரம் பொதுப் பார்வையில் சூரியனை உணர்த்துவதுடன் அதன் பரந்து விரியும் கதிர்கள் எல்லையில்லாத அருளையும், கருணையையும் கோடிடுகிறது. முடிவில்லாத வான்வெளியை நோக்கி குவிந்திருக்கும் கூர்முனைகளில் தொக்கி நிற்கும் இறைவனின் கருணையின் ஒளிவெள்ளம்

- தேவையுள்ளோர்
- தேவையற்றோர் உட்பட சகல
- ஜீவராசிகள் மீது படிகின்றன.

திடமான நேர்கோட்டினால் அமைந்த பரந்து விரிந்து தோன்றும் - இப்பேரொளி இறைவனின் சக்தி, சர்வவியாபகம், ஆகியவற்றையும் வட்டத்தின் சுழற்சி அல்லாஹ்வின் இயக்க வேகமும் இடையில்லாத தொடர்ச்சியும், 'அல்லாஹ்' என்பதன் முதல் எழுத்தான அலிபின் தனித்துவமும் - மகத்துவமும் மத்தியில் அமையப் பெற்ற மூன்று எழுத்து பிறப்பு, வாழ்வு, இறப்பு மனித சமூகத்தின் முக்கோண வாழ்வைச் சித்தரிக்கின்றன என்று ஹைக்கூ கவிதையின் ஆழம் நோக்கி விரியும் கருத்தாழம் போல் தனது அரபு எழுத்தணியும் மகத்துவத்தை விவரிக்கின்றார்.

ஹிஜ்ரி 1400 ம் ஆண்டு விழாவை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் அல்லாஹ் எம்.எச். முஹம்மத் நியமித்த அரபு எழுத்தணி குழுவில் அஸீஸ் முக்கிய இடம் வகித்தார். அக்குரணை அல் அஸ்ஹர் மகாவித்தியாலயம், குரிவெளை ஹமீதியா கல்லூரி முதலிய பாடசாலைகளின் மாணவ மாணவியர்க்கு அரபு எழுத்தணி அறிமுகம் செய்யப்பட்டு அவர்களது ஆக்கங்களுடன் இவரதும் சேர்த்து இருநூறுக்கும் அதிகமான சித்திரங்களுடன் முதன் முதலாக அகில இலங்கை ரீதியில் அரபு எழுத்தணி கண்காட்சி இலங்கையின் பலபாகங்களிலும் நடத்தப்பட்டமை மகத்தானதோர் நிகழ்வாகும். இலங்கையில் அரபு எழுத்தணியின் வளர்ச்சிக்கும் முஸ்லிமல்லாத கலைஞர் மத்தியில் இக்கலையின் அறிமுகத்திற்கும் இது வழிகோலிற்று எனலாம்.

1976 இல் மர்ஹும் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் கல்வியமைச்சராய்க் கடமையாற்றிய போது முஸ்லிம் கலைமேம்பாட்டுக்காக ஏற்படுத்தப்பட்ட மூன்று குழுக்களில் கம்பளை ஸாஹிராவில் சேவை புரிந்து கொண்டிருந்த அஸீஸ் சித்திரக் குழுவில் ஹோர்வுட் சித்திரக்கல்லூரி விரிவுரையாளராயிருந்த மர்ஹும் எம்.பி.எம் கௌஸ் அவர்களுடன் அங்கம் வகித்தார். கல்வியமைச்சு கேட்டுக் கொண்டதற்கிணங்க இவர்கள் இருவரும் இணைந்து தயாரித்தளித்த எழுத்தணி பாடதிட்டம் என்னவாயிற்று என்பது இன்றுவரை புரியாத மர்மமாகவே உள்ளது எனக் கலைஞர் அஸீஸ் கவலையுடன் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரபு எழுத்தணி வரைவதற்கு அரபு எழுத்தறிவு மட்டும் போதாது. அதற்கு கோடுகள் வர்ணங்கள் பற்றிய அறிவு, பொதுவாகச் சித்திரம் பற்றிய அறிவு தேவையென்பது கலைஞர் அஸீஸின் கருத்தாகிறது. அத்துடன் அரபு எழுத்தணி மரபு பற்றியும் ஒருவர் தெரிந்திருக்க வேண்டும். இன்று அரபு எழுத்தணியில் புதியதொரு மரபு உருவாகி வருவதையும் கேந்திர கணித வடிவங்கள் அரபு எழுத்தணிக் கலையினுள் அறிமுகப்படுத்தப்பட்டு அவை ஆன்மீக சிந்தனைத் தாக்கங்களையேற்படுத்தி வருவதனையும் மர்ஹூம் அஸீஸ் தமது பேட்டியொன்றில் குறிப்பிடுகின்றார்.

மர்ஹூம் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ், மர்ஹூம் சேர் ராஸிக் பரீத், மர்ஹூம் அல்ஹாஜ் அப்துல் ஹமீத், மர்ஹூம் அல்ஹாஜ் ஏ.எச். ஹுசைன் மாக்கான் மாக்கார் ஜனாப். எஸ். எம். கமால்தீன் ஆகியோரது உதவியுடன் அரபு எழுத்தணி கலையை இலங்கையில் வளர்ப்பதற்கு இவரும் பெரிதும் செயல்பட்டுள்ளார்.

அரபு எழுத்தணி கலை சம்பந்தமாக கற்பதற்கு இவருக்கு எகிப்து அல் அஸ்ஹர் பல்கலைக்கழகம் செல்ல புலமைப் பரிசிலும் கிடைத்துள்ளது. உக்குவளை பிரதேசத்தில் இலக்கிய வளர்ச்சிக்கும் இளம் கலைஞர்களின் உருவாக்கத்திற்கு உந்து-தலாகவும் ஓர் முன்மாதிரியாகவும் செயல்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா இஸ்லாமிய எழுத்தாளர் அமைப்-பொன்றை உருவாக்கி அதன் மூலம் இப்பிரதேசத்தில் தமிழ், இஸ்லாமிய, சிங்கள மூத்த கலைஞர்களை கௌரவித்தார். மீலாதுன் விழா போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தி பாடசாலை மாணவ, மாணவியருக்கு பரிசில்களை வழங்கி கௌரவிக்க ஆவண செய்தார்.

பஸ்மினா அன்ஸாரின் 'இளையநிலா', கல்ஹின்னை சிபானா சனூனின் 'புதிய பாதை' கவிதைத் தொகுதிகளையும் தம் அமைப்பின் மூலம் வெளியீடு செய்தார். மறைந்த மர்ஹூம் ஷம்ஸின் கிராமத்துக் கனவுகள் நாவலுக்கு அறிமுக விழாவொன்றையும் உக்குவளை பிரதேசத்தில் ஏற்பாடு செய்திருந்தார்.

பத்திரிகை துறை ஆளுமைகளான கலைவாதி கலீல், மர்ஹூம் ஷம்ஸ் இருவரையும் வரவழைத்து பயிற்சி பட்டறைகளை இப் பிரதேசத்தில் நிகழ்த்திக் காட்டினார். இவ்வாறான இலக்கிய முயற்சியின் தொடராகவே ஆஷிப் ஏ. புஹாரி, உக்குவளை அக்ரம் நண்பர்கள் இணைந்து ப்ரவாகம் - கவிப்ரவாகம் சஞ்சிகைகளை வெளியிட்டதுடன், ப்ரவாகம் பதிப்பகம் மூலம் உக்குவளை அக்ரமின் 'அம்ரிதாவின் கதைகள், பண்ணாமத்துக் கவிராயரின் 'ஷரந்தீவிலிருந்து மஹ்மூத் அல் ஸமி' எனும் மொழி பெயர்ப்பு நீள் கவி நூல்களும் வெளிவருவதற்கும் ரயித்தலாவளை அஸீஸின் இலக்கிய முன் நகர்வுகளின் ஆதர்ஷனமே காரணமாகும்.

மலையக கந்துரட்ட எப்.எம் இன் மலையக முஸ்லிம் சேவையில் 'வெளிவாரி' நாடகத்தயாரிப்பாள-ராகவும், நெறியாளராகவும் 2004 முதல் 2007 வரை உதவியிருக்கிறார். இச்சேவையினூடாக தனது கனம் கோட்டார் அவர்களே! என்கிற தனது நாடகத்தை இளம் கலைஞர்களுடன் இணைந்து தானும் குரல் கொடுத்து வழங்கியிருந்தார்.

தமது இறுதி காலத்தில் அல்லாஹ்வின் அழகிய திருநாமத்தை 99 ஐயும் அரபு எழுத்தணி மூலம் அலங்கார சித்திரங்களாக வரைந்து அதற்கு தமிழ் உரைநடைக்கு, ஆங்கில வழி மொழிபெயர்ப்பை பண்ணாமத்து கவிராயர் வழங்கியியுள்ளது. சிறப்புக் குரியது. 'ஆத்மதரிசனம்' என்கிற பெயரில் வெளியிட முனைந்த வேளையிலேயே ரைத்தலாவளை அஸீஸின் உயிர் இவ்வுலகை விட்டு பிரிந்துள்ளது.

இந்நூல் வெளியீட்டினை, தனது தந்தையின் நிறைவுப் பெறாத முயற்சியினை அன்னாரின் பிள்ளைகள் முன்னின்று தந்தையின் கடைசி கனவை நிறைவேற்றி வைப்பார்கள் என்று நம்புவோம். மற்றும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் இவரது ஒலிப்பரப்பட்ட 28 நாடகங்களின் பிரதிகள் சுவடி கூடத்தில் இருப்பதாக தகவலொன்று தெரிவிக்கின்றது. சில இளம் எழுத்தாளர்கள், கலைஞர்கள் ரைத்தலாவளை அஸீஸை அறியும் வன்னமும், அன்னாரை கௌரவிக்கும் வகையில் அவரின் சில நாடகங்களையாவது மீள ஒலிப்பரப்பி அன்னாரை கௌரவிக்க ஆவண செய்ய வேண்டுமென்று இலங்கை முஸ்லீம் வானொலி பணிப்பாளரை வினயமாக 'அலைகள்' சஞ்சிகையின் வாயிலாக முன்மொழி-கின்றோம்.

கலைஞர் ரைத்தலாவளை அஸீஸ் தமது கலைத்துறைப் பங்களிப்புக்காக, ரஸ்ஸாம் மும்தாஸ், கலாபூசணம், ரத்னதீபம், ஓவியமணி, முதலிய விருதுகளால் கலை இலக்கிய அமைப்புகளிலும் கலாசார அமைச்சினாலும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ரைத்தலாவளை அல்ஹாஜ் முஹம்மது நெய்னா அப்துல் அஸீஸ் அகில இலங்கை சமாதான நீதவானும் உக்குவளை இணக்க சபை உறுப்பினரும், உக்குவளை ஸ்ரீலங்கா இஸ்லாமிய எழுத்தாளர் அமைப்பின் ஆயுட்காலத் தலைவரும் உக்குவளை பொது வாசிகசாலை ஆலோசகராகவும், உக்குவளை, மாத்தளை பிரதேச காரியாலயத்தில் கலாசார பிரிவின் முஸ்லிம் கலாசார பிரிவின் உறுப்பினரும் ஆவார். அன்னாரின் ஆக்கப்பூர்வமான பணிகளால் நமது சமூகம் நன்மைகளைப் பெற்றது போல அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் இறைவன் மன அமைதியையும் ஆறுதலையும் வழங்குவதுடன் - அன்னாரின் தவறுகளை மன்னித்து 'ஜன்னத்துல் பிர்தௌவ்ஸ்' எனும் உயர் சுவர்க்கத்தை இறைவன் வழங்கிட இறைஞ்சுறோம்.

- உசாத்துணை
- பண்ணாமத்துக் கவிராயர்
- ஏ.முஹம்மது ஜலீல் - ஊடகவியலாளர்
- கலகெதர உனைஸ் (தினகரன்) கலைத் துறையில் பொன் விழா காணும் கலாபூஷணம் ரயித்தலாவளை அஸீஸ்
- யாழ்பிறை - 1923 வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K.M. Kiyas (Proprietor)
077 9685170

# MAHAWELI TRADERS

## Whole sale & Retail Dealers in Groceries







**No. 110/A, Kurunegala Road, Katugastota.**

**Tel: 081 3800288 Mob: 077 6414807**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org